சித்திக்கும், சிலர் பணத்திற்கும், சிலர் முகத்தாட்சணியத்திற்கும் வேண்டிப் பொய் பேசுகின்றனர். அவர்கள் அதனால் விளையும் பாதகங்களையும், பகமைகளையும் சற்றும் கருதாமல், அச்சமின்றிப் பொய் பேசுவதையே தங்கள் தொழிலாகவும், வழக்கமாகவும் கொண்டு திரிகின்றனர். இத்தகையோர் யார்? என்பதுபற்றி அல்லாஹு¬ திருமறையில் கூறுகிறான்:-

*(விசுவாசிகளே!)* **ஷைத்தான்கள் யார் மீது இறங்குகின்றனர் என்பதை நான் உங்களுக்கு அறிவிக்கவா? பொய் சொல்லும் ஒவ்வொரு பாவியின் மீதும் இறங்குகின்றனர். தாங்கள் கேள்விப்பட்டதை எல்லாம் அவர்களுக்குக் கூறுகின்றனர். அவர்களில் பெரும்பாலோர் (பெரும்) பொய்யர்களே!** *(26 - 221: 223)*

அந்தோ! இந்தப்பொய் சொல்வோர் எங்ஙனம் முன்கர் வ நகீர் என்ற இரு மலக்குகளுக்குரிய ஹத்யாக்களைச் செலுத்தப் போகின்றார்கள்? ஆச்சரியப்படத்தக்க விசயம் என்னவெனில், சிலர் தங்களின் பொய்க் கூற்றை நிலைநிறுத்துவதற்குச் சத்தியமும் செய்வதற்கு முன் வருகின்றனர்; இதனாலேயே நமது ஹஜ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள்:-

''**எ**வனொருவன் பொய்ச் சத்தியம் பண்ணித் தன்னைப் போல் விசுவாசமுள்ள ஒரு சகோதரனுடைய பொருளை அபகரிக் கின்றானோ? அல்லது வேறொருவனுக்குக் கிடைக்கச் செய்கின் றானோ? அவனது செய்கை, களவு, விபசாரம் போன்ற பஞ்சமாப் பாதகங்களில் ஒன்றாகும். உரியவனுக்கு அந்தப்பொருள் திரும்பக் கொடுபடாதவரை, அந்தப்பாவம் மன்னிக்கப்படமாட்டாது. ஆண்டவன் அவனுக்குச் சுவர்க்கத்தை விலக்கி நரகத்தை விதியாக்கி விடுகிறான்; அந்தப்பொருள் பல் விளக்கும் ஒரு குச்சியேயானலும் சரியே; அன்றியும், பொய்ச் சத்தியம் வீட்டைக் காடாக்கும்: நாசத்தை உண்டுபண்ணும்.

பொய் புகலுவது முஸ்லிமின் பண்பல்ல; ஈமானும் பொய்யும் ஓரிடத்தில் ஒருங்கிணைய முடியாது'' எனவும் நபிகள் நாயகம் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) மிஃராஜு¬க்குச் சென்றபோது ''ஒரு மனிதனின் மோவாய்க் கட்டை பிடரிவரையில் அறுபடுவதும், மறுபடி அந்த மோவாய் சேர்ந்து கொள்வதும், இவ்வாறு அவன்



அதாபில் இருப்பது கண்டு, ஜிப்ரயில் (அலை) அவர்களிடம் 'இவன் யார்?'' என்று கேட்க, ''இவன் மனிதர்களிடையே பொய் சொல்லித் திரிந்தவன்'' எனக் கூறினார்கள்.

''**கோ**ள் சொல்வது கலகத்திற்கு வழிகாட்டுவதாகும். அதை ஒப்புக் கொள்வது, அதற்கு ஆதரவு கொடுப்பதாகும். ஆகவே கோளன் ஹலாலில் பிறந்தவனாகான்.''

''**க**லகக்காரனுடையவும், கோளனுடையவும், தீங்குகள் மிகப் பெரியவை; இவர்களால் கொலைகள் நிகழவும் காரணமாகும்.''

மேற்கூறிய ஹதீதிற்கு, அடியில் குறிப்பிடும் சம்பவம் ஓர் எடுத்துக் காட்டாகும்.

ஒரு வியாபாரி ஓர் அடிமையை விற்க விலை கூறிக் கொண்டிருந் தார். அடிமையிடம் கோளும் பொய்யும் தவிர வேறு எந்தவிதக் குறைவு மில்லை. இந்த அடிமையை வாங்குவார் உண்டா? என்று தெரிவித்தார். அதைப் பொருட்படுத்தாமல் ஒருவன் அந்த அடிமையை விலைக்கு வாங்கித் தனது வீட்டிற்குக் கொண்டு வந்தான். சில நாட்கள் கழித்து அந்த அடிமை தன் எஜமானனின் மனைவியிடம், ''அம்மா! நம் எஜமானரின் மனம் வேறு பக்கமாகத் திரும்பியிருக்கிறது; ஓர் வெள்ளாட்டியை விலைகொள்ளப் போவதாக என்னிடம் கூறிக் கொண்டிருக்கிறார். அதற்கு இடம்கொடுக்கக் கூடாதல்லவா? நீங்கள் விரும்பினால் ஓர் உபாயம் கூறுகிறேன். எஜமானர் உறங்கும்போது ஒரு கத்தியால் அவருடைய தாடியின் ரோமங்களில் மூன்று மாத்திரம் அறுத்தெடுத்து என்னிடம் தந்தால் நான் மந்திரம் உச்சரித்து, அவருக்கு உங்கள்மீது ஆசையை அதிகரிக்கவும், வேறு பெண்ணின்மேல் ஆசை கொள்ளாதபடியும் செய்கிறேன்;'' எனக் கூறினான். அதற்கு அவள் சம்மதித்தாள். அப்போதே அந்த அடிமை, எஜமானனிடம் சென்று எஜமானரே! உங்கள் மனைவி ஒரு வணிகன்மீது காதல் கொண்டிருக் கிறாள். அதனால் உங்களுக்கு ஏதாவது விபத்துண்டாகலாம். இனிமேல் நீங்கள் மிக எச்சரிக்கையாகத்தானிருக்க வேண்டும்; நித்திரையிலும்கூட கவனமாகயிருங்கள்'' என்றான்.

அந்தப்பொய்யனின் வார்த்தையை மெய்யெனக்கொண்ட அந்த எஜமான் இரவும் பகலும் கவனித்து வந்தான். ஒரு நாள் அவன் நித்திரை செய்யும்போது அவனது மனைவி கத்தியைக் கையில் மறைத்து வைத்துக்கொண்டு அவனது கழுத்தின் பக்கமாயத் தாடியில்

மெதுவாகக் கையை வைத்ததும், அவன் அலறித்துடித்து தன்னைக் கொல்லவே கத்தியுடன் நெருங்கினானென்று கோபத்தால் அவளை அடித்துக் கொன்று விட்டான்.

இந்தச் சம்பவம் அவளுடைய சுற்றத்தார்க்குத் தெரியவே, அவர்கள் கோபாவேசத்தோடு வந்து பலத்த கலகத்திற்கிடையில், கொலை செய்த அவள் கணவனையும் கொன்றுவிட்டனர். வாசகர்களே! இதைச் சிந்தியுங்கள்; பொய்யினால் இரு கொலைகள் நிகழ்ந்தன என்பதை நாமறியும்போது, அது எவ்வளவு கெட்ட குணமாக இருக்கிறது!

**மேற்கோள்:-**

''மனிதன் பொய் பேசிக்கொண்டே இருக்கிறான். அவன் அதிலேயே பழகிப்போய் இறைவனிடத்திலும் பொய்யன் எனப் பதிவு செய்யப்பட்டு விடுகிறான்.''

பொய் பேசிக் கொண்டிருப்பதால் இதயத்தில் களங்கம் பிறந்து விடுகிறது. கனவுகளும் உண்மையாகக் காட்சி தருவதில்லை. எனவே பிறரைச் சிரிக்க வைப்பதற்குக்கூட, பொய் சொல்லாதீர். எப்போதும் பொய்யான எண்ணங்கள் ஊசாட்டங்கள் ஆகியவற்றிலிருந்து இதயத்தைக் காத்துக்கொள்ளுங்கள். இன்றேல் இதயத்தில் களங்கம் பிறந்துவிடும். இத்தகையோருக்கு உண்மைக் கனவுகள் தென்படாமல் போய்விடும் என்பது அனுபவமாகும்.

ஒரு முறை ஒரு பெண் தன் சின்னஞ்சிறிய குழந்தையை, 'இங்கே வா! உனக்கு ஒரு பொருள் தருகிறேன்' எனக் கூறி அழைத்தாள். உடனே நபி (ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணிடம் 'உன் அழைப்பை ஏற்று அந்தக் குழந்தை உன்னிடம் வந்தால் அதற்கு என்ன தருவாய்?''' என வினவினார்கள்; ''கடலை கொடுப்பேன்'' என அந்தப்பெண் கூறினாள். 'குழந்தைக்கு ஏதும் கொடுக்கும் நோக்கமின்றி விளையாட்டாக இவ்விதம் அழைத்தாலும், அது பொய்யென்றே கணிக்கப்பெறும்' என்று நபி பெருமானார் (ஸல்) அருளினார்கள்.

சில சமயங்களில், சில நிபந்தனைகளுக்கு மட்டும் பொய் பேசவும் அனுமதி இருக்கிறது. உதாரணமாக: ஒரு சந்தர்ப்பத்தில் உண்மை சொல்லுவதால் பொய் சொல்லுவதைவிட அதிக பாவமும் நட்டமும் விளையுமென்றிருப்பின் அங்கே பொய் கூறுவதில் தவறில்லை. எடுத்துக்காட்டாக:



*(1)* முஸ்லிம்களுக்கு மத்தியில் சமாதானம் செய்து வைப்பதற்காக, *(2)* யுத்தத்தில் எதிரிகளை முறியடிப்பதற்காக, *(3)* மனைவியை திருப்திபடுத்துவதற்காக, பொய் சொல்லிக் கொள்வதற்கு ஹதீதில் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. காரணம், முஸ்லிம்களுக்கிடையே பகைமை வளருவதால் விளைகிற கேடு பொய்யினால் ஏற்படுகிற கேட்டைவிட மோசமானதாகும். இவ்வாறே யுத்த இரகசியங்களை மறைத்துவைக்க வேண்டும். அவற்றைப் பகிரங்கப் படுத்துவதால் அநியாயமாகப் பல ஆயிரம் புனித ஆத்மாக்கள் அழிந்துவிட நேரிடும், எனவே இத்தகைய சந்தர்ப்பங்களில் உண்மையை வெளிப்படுத்தாமல், பொய் கூறி மறைப்பது சாலவும் சிறந்ததாகும். இந்த விதமே கணவனின் சில இரகசியங்கள் மனைவிக்குத் தெரியாமலிருப்பது அவசியம். மாறாக உண்மையே பேச வேண்டும் என்ற கருத்தில் தமது உள்ளக் கிடக்கை ஏதேனும் மனைவிக்கு வெளிப்பட்டுவிட்டால், கணவன் மனைவிக் கிடையே பிணக்கு வலுத்துவிடும். இதனால் விளைகிற கெடுதி, பொய் கூறி மறைப்பதைவிட மிக அதிகமாகிவிடும். எனவே, இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் பொய் கூற அனுமதிப்பது, ஒருவர் இரு ஆபத்துக்களில் சிக்கிக் கொள்கிற நேரத்தில் எளிதான ஆபத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு இது நிகராகும்.

ஒருவர் பசியால் மாண்டுவிடுகிற அபாயக்கட்டத்தை அடைகிற போது, அவருக்குச் செத்த பிணமும் ஹலாலாகி விடுகிறதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

இந்த விதமே தன்னுடைய அல்லது முஸ்லிம் சகோதரருடைய பொருளை அக்கிரமக்காரனிடமிருந்து காப்பாற்றுவதற்காக, அல்லது ஒருவர் ரகசியமாகக் கொடுத்து வைத்திருக்கும் அமானிதத்தைப் பாதுகாப்பதற்காக பிறரிடம் மறுத்துக் கூறுவதிலும், பொய் சொல்வதில் தவறில்லை.

பாவச்செயல்களைப் பகிரங்கப்படுத்துவது 'ஹராம்' என்ற கருத்தில், தான் இழைத்த பாவத்தை இல்லை என மறுப்பதற்கு அனுமதி இருக்கிறது. இரு மனைவியை விவாகம் செய்திருப்பவன், ஒரு மனைவியிடம் உன்னைவிட மற்ற மனைவி எனக்கு அவ்வளவு பிரியமானவள் அல்ல என்றும் கூறிக் கொள்ளலாம். இந்தப் பொய்யுரைகளால் ஒரு தீமை அகலுகிறது.

ஆனால் பொருளீட்டுவதற்காக அல்லது பதவி கௌரவம் பெறுவதற்காகப் பொய் பேசுவது ஒருக்காலும் ஹலாலாகாது. ஏனெனில், பொருளோ பதவியோ அதிகரிக்காமலிருப்பதில் எந்த நஷ்டமும் விளைந்துவிடப் போவதில்லை. ஒருவருக்கு பலன்-ஆதாயம் கிடைக்காமல் போவதை நட்டம் என்று கூறுவதில்லை. இந்த நுணுக்கத்தை மக்கள் புரிகின்றாரில்லை. பெரும்பாலும் இந்த நோக்கத்திற்காகவே பொய் பேசப்படுகிறது. ஆனால், இது அப்பட்டமான ஹராமாகும். உண்மையில் அவர்களின் சன்மார்க்க வாழ்வு அழிவதற்கு இதுவே காரணமாகிவிடுகிறது. தேவை எது? தேவை இல்லாதது எது? என்பதை அவர்களால் பகுத்துணர முடிவதில்லை. மிகவும் கவலைப்பட வேண்டிய விசயமாவது: அறிவிலிகள் கற்பனையான தேவைகளையும், தேவை என முடிவு செய்து கொள்கின்றனர். மார்க்கம் அனுமதிக்கும் உண்மைத் தேவை எது என்பதை சிந்திக்காமல் நிர்ப்பந்தச் சூழ்நிலைகளோ, பெரும் அபாயம் நேரிடுகிற வாய்ப்போ, இல்லாதபோது செத்தபிணத்தைச் சாப்பிடுவது ஹலாலாகாததுபோல், பொய் பேசுவதும் ஷரீ அத்துச் சட்டப்படி ஹராமாகும். இத்தகைய கடுமையான தேவையின் தருணத்திலும் மனம் 'பொய்யில் பழகிப்போகாமல் இருப்பதற்காக இயன்றமட்டிலும் யோசனை செய்து மாற்றுக் கருத்து வைத்துப் பேச வேண்டும்.

**நபி** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு பெண்ணை நோக்கி நகைச்சுவையுடன் ''கிழவி ஒருபோதும் சுவனம் போகமாட்டாள்'' என்றார்கள். இதைக் கேட்டு அந்தக் கிழவி அழ ஆரம்பித்துவிட்டாள். காரணம், அந்த வார்த்தையின் வெளிப்படைக் கருத்து எந்தக் கிழவியும் சுவர்க்கம் புகமாட்டாள் என்றே தொனித்தது. ஆனால், கிழவியாயிருக்கிற நிலையில், எவளும் சுவர்க்கம் புகமாட்டாள், கிழவிகளெல்லாம் வாலிப நிலையை அடைந்து விடுவர் என்பதே அந்த நகைச்சுவையின் கருத்தாகும்.

ஒருவர் நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் சவாரிக்காக ஒரு ஒட்டகம் கேட்டார். ''சரி உமக்கு ஒரு ஒட்டகக் குட்டியைத் தருகிறேன்'' என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். இதைக் கேட்ட அவர் 'நான் ஒட்டகக் குட்டியை வைத்து என்ன செய்வேன்' என்றார். ''சகோதரா! பெரிய ஒட்டகமும் இன்னொரு ஒட்டகம் ஈன்ற குட்டியாகத்தானே இருக்கும்'' எனத் தமது சிலேடைக்கு விளக்கமளித்தார்கள்.



**நபி** பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருவரைப் பார்த்து உம்முடைய கண்ணில் வெள்ளை இருக்கிறதே' என்றார்கள். எல்லோருடைய கண்களிலும் வெள்ளை இருக்கத்தான் செய்யும். ஆயினும் அந்த வார்த்தையின் வெளிப்படை அர்த்தம் கண்ணில் ஏதோ ஒச்சமிருப்பதாக உணர்த்தி, கேட்பவருக்கு கவலை உண்டாகி, அங்கே ஒரு சரியான நகைச்சுவை பிறந்துவிட்டது. இவ்வாறான சிலேடைப் பேச்சுக்கள், மனைவி மக்களிடையே மகிழ்ச்சியூட்டும் வகையில் பேசிக் கொள்வதில் தவறில்லை.

இவ்வாறே உங்களை ஒருவர் சாப்பிட அழைத்தால், உங்களுக்குப் பசியாக இருக்க, அவரிடம் சாப்பிட உங்களுக்கு விருப்பமில்லை யாயின், எனக்குப் பசி இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். அப்படி யாயின் அது பொய்யாகிவிடும். ஆகவே, 'தற்சமயம் நான் சாப்பிடுவதில்லை. நீங்கள் சாப்பிடுங்கள்' என்பன போன்ற மறுமொழியால் சமாளித்துவிடுங்கள்.

இவ்வாறே சமய சந்தர்ப்பச் சூழ்நிலையை அனுசரித்துப் பல மேதைகள் தம் வாழ்க்கையில் பொய்புகாத சொற்களை உபயோகித்து வந்திருக்கின்றனர்.

குர்ஆன் ஷரீபை அல்லாஹு தஆலா முஸ்லிம்களுக்கு வழி காட்டியாக அனுப்பியிருக்கிறான் என்று நம்புவது ஈமானின் மிக முக்கிய மானதொரு அம்சமாகும். அவ்வாறாயின் குர்ஆனில், செய்ய வேண்டாம் என்று தடுக்கப்பட்டிருக்கும் எந்தக் காரியமும் ஒருபோதும் முஸ்லிமுக்கு நன்மை கொடுக்கவே செய்யாது. அதாவது வட்டிக்குப் பணம் வாங்குதல், வட்டிக்குப் பணம் கொடுத்தல், மோசம் செய்தல், அளவு நிறுவையில், கூடுதல் குறைவு செய்தல், முக்கியமாக பொய் சொல்லுதல் போன்றவை கொஞ்மானாலும் சரியே, எந்தக்காரணம் கொண்டும் எவ்வளவு சிரமமான நிலைமையில் செய்யப்பட்டாலும், அவை முஸ்லிமுக்கு இறுதியில் நன்மை தராது; அதனால் தீங்குகள் தான் விளையும் என்பது பல நூறு ஆயிரம் முஸ்லிம்களுடைய வாழ்க்கையிலிருந்து தெரிய வருகிறது.

காபிர்களுக்கு மறு உலக நற்பேறு இல்லாததால், அவர்களுக்கு இவை ஒருவேளை நன்மை செய்யலாம். இதன் மூலம் சம்பாதித்த பணம் காசுகள் அவர்களிடமும், அவர்களின் வாரிசுகளிடமும் நிலைத்து நிற்கலாம். ஆனால், முஸ்லிம்களை சொர்க்கத்திற்கு அனுப்புவதாக அல்லாஹு தஆலா வாக்களித்திருக்கிறான். சொர்க்கம்

புனிதமானது. அங்கு அசுத்தத்திற்கு இடமில்லை, ஹராமான சம்பாத்தியம், நசிசானதைச் சாப்பிட்டதுபோல் பொய் சொல்லி சேர்க்கப்பட்ட வருவாய் ஆகியவைகளுடன் முஸ்லிம்கள் சொர்க்கம் செல்லமுடியாது. ஆகையினால் இந்த உலகத்திலிருந்து முஸ்லிம்கள் தவறாக சம்பாதித்தவைகளைப் பிடுங்கிக் கொண்டு, அவர்களை மவுத்தாக்குவான். அப்பால் பல காலம் கப்ரிலும் நரகத்திலும் அவதிக்கு உட்படுத்திப் பின்னர் சொர்க்கத்திற்கு அவர்களை அனுப்புவான். இப்படிப்பட்டவர்களுக்கு மூன்று வழிகளே உண்டு. (1) மவுத்துக்கு முன் அவைகளை இழந்து விட்டு, அதாபு செய்யப்பட்டுச் சொர்க்கம் போவது. (2) மவுத்தாகியவுடன் அவர்களுடைய வாரிசுகள் அவர்கள் தேடி வைத்தவைகளை அழித்துவிடுவது. (3) அவர்கள் ஈமானைப் பறி கொடுத்து பெரும் அவதிக்குட்பட்டு மரணம் அடைவதுமாகும். இந்த மாதிரி இறப்போர்களின் செல்வங்கள் சொற்ப காலத்தில் அழிந்துபட்டுப் போய்விடும். (நாயக வாக்கியம்)

ஒரு சமயம் ஷெய்கு நாயகம் தைக்கா அஹ்மது அப்துல்காதிரு வலியுல்லாஹ் (ரஹ்) அவர்கள், ஏழைப் பெண்களுக்குத் தர்மம் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்களுடைய மகளும் மருமகளும் ஏழைகளுக்குப் பணம் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். கூட்டம் அதிகமாக இருந்ததால், அங்கு ஏற்பட்ட நெருக்கடியில் ஆறு பெண்கள் இறந்துவிட்டனர். இதனால் பெரிய (போலீஸ்) அதிகாரிகள் அங்கு வந்து விசாரணை நடத்தினர். அப்போது உறவினர்கள் ஷெய்கு நாயகம் அவர்களிடம் போய் 'விசாரணையில் தம் வீட்டுப் பெண்களைச் சம்பந்தப்படுத்திச் சொல்ல வேண்டாம்' என்றும், அதனால் அதிகாரிகள் நம் பெண்களைத் தொந்தரவு செய்வார்கள், மிகவும் சிரமம் ஏற்படும் என்றும், தம் சொந்த ஆண் பிள்ளை ஒருவர்தான் பணம் வினியோகம் செய்ததாகச் சொல்லும்படியும் கட்டாயப்படுத்தினார்கள். இதைக் கேட்ட ஷெய்கு நாயகம் அவர்கள், 'முடியாது' என்று மறுத்து 'ஒரு முஸ்லிமுக்கு எந்தக் காரணம் கொண்டும் பொய் சொல்லுவதால் நன்மை விளையவேமாட்டாது' என்று உண்மையையே சொன்னார்கள். அல்லாஹு தஆலாவின் உதவியால் எந்தச் சிரமமுமின்றி வழக்கே ஏற்படாமல் காரியங்கள் நிறைவேறின.

***''யா அல்லாஹ்! உண்மையை உள்ளா உள்ளபடி எங்களுக்குக் காட்டுவாயாக; அதைப் பின்பற்றி நடக்க பலத்தையும் அதன் பலனையும் அளிப்பாயாக.''***



## 2-வது ஹத்யா:- புறம் கூறாமை

وَيْلٌ لِّكُلِّ هُمَزَةٍ لُّمَزَةٍ ۝

**''குறைகூறி புறம் பேசித் திரிவோருக்கெல்லாம் கேடுதான்.''**

''கோள் சொல்லுகின்றவன் சுவன லோகம் புகமாட்டான்; அவன் கப்ரின் கொடிய ஆக்கினைகளிலிருந்து மீட்சிபெறவுமாட்டான்; எனது உம்மத்தில் மிகக்கொடியவர்கள், இரு முஸ்லீம்களுக்கிடையில் கோள் சொல்லி, அவர்களின் நட்பைக் கெடுப்பவர்களேயாவர்; கோள் சொல்பவனுடைய செயல் ஷைத்தானுடைய செயலைக் காட்டிலும் மிகக் கெட்டதாகும்.'' (நா - வா)

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் காலத்தில் ஒரு கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்போது அவர்கள் மழையைப் பெய்விக்கும் படி அல்லாஹ்விடம் மன்றாடினார்கள். ''உம்முடைய கூட்டத்தில் கோள் சொல்லுகின்ற மனிதனிருப்பதால் உமது வேண்டுகோளை நிறைவேற்ற முடியாது.'' என்று அல்லாஹ் அறிவித்தான்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ''அல்லாஹ்வே! அந்தப் பாவியை எனக்குக் காட்டு? நாங்கள் அவனை அப்பாற்படுத்தி விடுகிறோம்'' என்று கூறினார்கள். அதற்கு இறைவன் ''மூஸாவே! நான் உங்களைக் கோள் சொல்லக் கூடாதென்று விலக்கியிருக்க, நானே அந்தக்கோளை சொல்லலாகுமா? ஆகவே நீங்கள் எல்லோரும் தவ்பாச் செய்யுங்கள்; அவனும் செய்வான்'' என்று கூறினான். உடனே மக்கள் எல்லோரும் 'தவ்பா' (பாவத்தை மன்னிக்கும்படி பிரார்த்தனை) செய்தார்கள். அப்பால் கருணையாளன் அல்லாஹ் அவர்களின் பிழையைப் பொறுத்து மழையைப் பொழியச் செய்தான். ('இர்ஷாத்')

ஒரு பெரியர் ஒரு மதிப்பிற்குரிய ஹகீமைத் தேடிப் புறப்பட்டுச் சில நாட்களுக்குப்பின், அவரைச் சந்தித்து அவரிடம் பின் வருமாறு, சவால் (கேள்வி) செய்தார்.

1. வானத்தைவிட அதிக விசாலமானது எது?
2. பூமியைப் பார்க்கிலும் அதிகப் பாரமானது யாது?

3. கல்லிலும் மிகக் கடுமையானது எது?
4. நெருப்பினும் மிக உஷ்ணமானது எது?
5. பனிக்கட்டியைவிட அதிகக் குளிர்ச்சியானது எது?
6. கடலினும் மிகப் பரந்த பொருள் எது?
7. (எதீம்) அனாதைச் சிறுவனினும் தாழ்ந்த நிலையானவை யார்? (என்பதாகும்.)

அதற்கு, அப்பெரியார்:-

1. உண்மை உரைப்பது வானத்தினும் மிக விசாலமானது.
2. குற்றமற்றவர்மீது அவதூறு சொல்வது பூமியினும் அதிக பாரமானது.
3. அவிசுவாசிகளுடைய மனம் கல்லினும் மிகக் கடுமையானது.
4. புறம் கூறுதல் நெருப்பினும் அதிக உஷ்ணமுடையது.
5. உறவினரின் நாட்டத்தை நிறைவேற்றாதிருப்பது பனிக் கட்டியினும் அதிகக் குளிர்ச்சியுமுள்ளது.
6. உள்ளது போதுமெனப் பொருந்திக் கொள்பவனுடைய மனம் கடலினும் மிகப் பரந்தது.
7. கோள் சொல்லித் திரிபவன் எதீமைவிட மிகக் கீழ்மை யுடையவன்.

என விடை பகர்ந்தனர்.

**''எவர் சத்தியத்தைக் கொண்டு வருகிறரோ, மேலும் அந்தச் சத்தியத்தின் படி நடந்துகொள்கிறாரோ, அவரே ஆண்டவனுக்கு அஞ்சி நடந்தவராவர்.''** ***(39 - 33)***

**குறிப்பு:-** ஈயுக்கு விஷம் இறகிலும், பாம்புக்கு விஷம் பற்களிலும், தேளுக்கு விஷம் வாலிலுமுள்ளது. ஆனால் கோளனுக்கோ! உச்சிமுதல் உள்ளங்கால்வரை விஷமே ஆகும். ஈ, தேள் முதலிய விஷ ஜந்துக்களினால் ஏற்படும் விஷத்திற்குப் பரிகாரம் செய்ய மருந்துண்டு. ஆனால் கோளனுடைய விஷமத்தனத்திற்கு மருந்து காண்பதரிது. இதனாலேதான் ஒரு புத்திசாலியிடத்தில் ''புறம் கூறுபவனை என்ன செய்யலாம்'' என்று வினவியபோது அவர் ''கோளைக் காதுகொடுத்துக் கேட்பவனுடைய செவியை அறுத்து விடுங்கள்'' என்று யோசனை கூறினார்.



**''நபியே! கோள் சொல்லுபவன், புறம் பேசுவோன், சபிக்கப்பட்ட பொய்ச் சத்தியம் பண்ணுவோன், இவர்கள் அனைவருக்கும் நீங்கள் கீழ்ப்படிய வேண்டாம்.''** ***(68-8)***

## பொறாமை இரு வகைப்படும்

1. 'கிரத்' நல்ல நிலைமையில் இருப்போரைப் பார்த்து மனத்தை தன்னளவில் திருப்பி, தானும் அவரைப் போன்று மேலான நிலைக்கு வரவேண்டும் என்று ரோசம் பாராட்டி அக்கறையுடன் செயல்படுதல். இதனால் பிறருக்குத் தீங்கு ஏற்படுவதில்லை.
2. 'ஹஸது', பிறர் நல்ல நிலையில் இருப்பதைப் பார்த்து மனம் சகியாமல், தவறான கண்ணோட்டம் செலுத்தி அவரின் அழிவிற்காகக் கேடு நிகழ்வதை எதிர்பார்ப்பதும், கெடுதலை உண்டு பண்ணுவதும் பொறாமையாம். இது காட்டுத் தீ போன்றது.

பொறாமையின் காரணமாகக் கோள் சொல்லிக் கலகமூட்ட எத்தனிப்பவன், தனக்குத்தானே கேட்டை விளைவித்துக் கொள்வான். இதனை வலியுறுத்த முற்காலத்தில் நடந்த சம்பவம் ஒன்றைக் கீழேத் தருகின்றோம்.

## 'ஹஸது' பொறாமையின் விளைவு

ஸாலிஹீன்களில் ஒருவர் வாரம் தவறாது, ஒரு சுல்தானின் தர்பாருக்குச் சென்று சமயோசிதமான மார்க்கோபதேசம் செய்து வந்தார். ''அரசே! ஒருவன் தங்கட்கு உபகாரம் செய்தாலும்சரி அல்லது அபகாரம் செய்தாலும்சரி, நீவிர்! அவன் விசயத்தில் நலவேயன்றி தீங்கு ஒருபோதும் செய்யாதீர்'' என்று போதித்து வந்தார். அதற்காக, சுல்தான் மனமுவந்து அளிக்கும் வெகுமதிகளை அன்புடன் பெற்றுத் தமது வாழ்க்கையை நலமுடன் கழித்து வந்தார்.

இதை ஒரு பொறாமைக்காரன் கவனித்து வந்தான். அவர் அடிக்கடி அரச தர்பாருக்குப் போவதையும், வருவதையும், இனாம் பெறுவதையும் கண்டு அவனால் சகித்துக்கொண்டிருக்க முடிய வில்லை. ''அந்த மனிதருக்கு அரசனோடு சரியிருப்புக் கிடைத் திருக்கிறது; நான் எவ்வளவு காலம் பழகியும் எனக்குச் சரியிருப்பு கிடைக்கவில்லையே'' என்று மனம் புழுங்கி, அவருக்கும்

அரசனுக்குமுள்ள தொடர்பை அறுத்துவிட வழிதேடினான். பலவித யோசனைகள் செய்து, முடிவில் அரசனிடம் கோள் சொல்லிப் பகையை உண்டாக்கிக் கெடுக்கத் துணிந்தான். ஒரு நாள் அவன் சுல்தானிடம் பணிவாய்ச் சென்று ''அரசே! தங்கள் தர்பாரில் அடிக்கடி வந்து போகும் பெரியவர், தங்களை வாய் நாற்றமுடையவர் என்று என்னிடம் பலதடவை கூறியிருக்கிறார். உண்மையில் அவரே வாய் நாற்றக்காரர். இதற்கு அத்தாட்சியாவது அவர் தங்களோடு பேசும் போதெல்லாம் தம் வாயின் துர்நாற்றம் தங்களின் முகத்தில் படாதிருக்கவேண்டி வாய்க்கு சற்று தூரத்தில் கையால் மறைத்துக் கொண்டுதான் பேசுவார்'' என்று கோள் சொன்னான். இதைக் கேட்ட சுல்தானுக்குப் பெரியவர்மேல் சிறிது மனக்கசப்புண்டாயிற்று. ''நல்லது, அவர் வரட்டும்! நான் பார்த்துக்கொள்கிறேன்,'' என்று கூறி அவனை அனுப்பிவிட்டார்.

மறுநாள் காலையில் அவன், பெரியவர் அரசனைக் காணப்போகும் பாதையில் குறுக்கிட்டு ''பெரியவரே! தாங்கள் எனது இல்லத்தில் சிற்றுண்டி அருந்த வருதல் வேண்டும்'' என்று வினயத்தோடு வேண்டி, வீட்டிற்கு அழைத்துவந்து பச்சை வெங்காயமும் வெள்ளைப்பூடும் அதிகம் சேர்த்துச் சமைத்த உணவைப் பரிமாறினான். பெரியவர் வலியவந்த உணவை மனமாரப் புசித்து, இறைவனைப் புகழ்ந்து, பின் சுல்தானுடைய அரண் மனைக்குச் சென்றார். வழக்கம்போல் அரசனுக்கு உபதேசம் செய்துகொண்டிருக்கையில், அரசன் அவரைத் தன் அண்மையில் வந்து பேசும்படி அழைத்தான். அந்தப் பெரியவர் தமது வாயிலிருந்து வீசும் வெங்காய வாடை அரசனுக்கு அருவருப்பைக் கொடுக்கும் என்ற நோக்கத்தில், வாயைக் கையால் பொத்திக்கொண்டு அருகே செல்லவும், அரசன் நேற்று தம்மிடம் கூறியவன் சொல்லியது உண்மையாயிருக்கக் கண்டு, கோபம் கொண்டவனாகி தனது கைப்பட ஒரு கடிதம் எழுதி முத்திரை வைத்து அவர் கையில் கொடுத்து, அதைத் தலையாரியிடம் கொடுக்கும்படி ஏவினான்.

பெரியவர் கடிதத்தைப் பெற்றுக்கொண்டு, தமக்கு ஏதோ இனாம் கிடைக்கப் போகிறதென்ற களிப்புடன் வெளியே வந்து கொண்டிருந்தார். அவர் முகத்தில் சந்தோஷம் தவழுவதைக் கண்ட அந்தப்பொறாமைக்காரன் தனது சூழ்ச்சி பலிக்காது போனதைப் பற்றி வெட்கியவனாக அவரிடம் அணுகி ''ஸாஹிபே! எங்கே துரிதமாகச்



செல்கின்றீர்? கையில் இருப்பது என்ன?'' என்று மெல்ல விசாரித்தான். அதற்கு அவர், ''மேன்மை தங்கிய சுல்தான் என்னை வெகுமானிக்கக் கடிதம் தந்தனுப்பியிருக்கிறார்'' என்றார். பொய்யன் பிரமித்து, ''இந்தக் கடிதத்தை எனக்குத் தரக்கூடாதா? தங்களுக்கு வாரந்தோறும் வெகுமதி கிடைக்கிறதே'' என்று கெஞ்சினான். பெரியவர் அவனது பணிவையும், ஆதரிப்பையும் நினைத்து, கடிதத்தை அவன் கையில் கொடுத்து, ''நண்பா! இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் வெகுமதியில் எனக்கும் ஒரு சிறு பங்கு கொடுக்கத் தவறாதே,'' என்று வேண்டிக்கொண்டவராக வீட்டிற்கேகினார்.

அந்த மடையன், தலையாரியிடம் ஓடோடிச் சென்று கடிதத்தைக் கொடுத்தான். தலையாரி அதை வாங்கி உடைத்துப் பார்க்க அதில் ''இந்தக் கடிதம் கொண்டுவரும் மனிதனைத் தாமதமின்றித் தலையை வெட்டித் தோலை உரித்துவிடுக; அவன் மூக்கை அறுத்து அதை என்னிடம் அனுப்பிவைக்கவும்;'' என்று கண்டிருந்தது. உடனே தலையாரி அவனைச் சிறைசெய்து விஷயத்தைத் தெரிவித்தார். பொய்யன் அலறித் துடித்து ''அல்லாஹ்வின் பேரில் சத்தியமாக சுல்தான் இந்தக் கடிதத்தை என்னிடம் நேரில் கொடுக்கவில்லை; இந்தக் கடிதத்துக்குரியவர் வேறு; அவர் என்னை ஏமாற்றிவிட்டார். இதோ அவரைக் கூட்டி வருகிறேன்;'' என்று முறையிட்டான். தலையாரி ''ஒருபோதும் முடியாது. சுல்தானின் உத்தரவுக்கு நான் மாற்றம் செய்தால், உனக்குக் கிடைக்கப்போகும் தண்டனை எனக்குக் கிடைத்தாலும் கிடைத்துவிடும்'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டான். அந்த மடையன். ''ஐயா! நான் நிரபராதி; என்னை விட்டுவிடுங்கள்'' என்று கூச்சல் போட்டான். தலையாரி ஒன்றையும் காதில் வாங்கிக்கொள்ளாமல் கடிதத்தில் கண்டபடி காரியங்களை நடத்தி வைத்தான்.

அறிஞர், அரண்மனைக்கு வழக்கம்போல் சென்றார்; இவரது வருகை சுல்தானுக்கு மிகப் பிரமிப்பைக் கொடுத்தது. ''பெரியவரே! கழிந்த வாரம் நான் உம்மிடம் தந்த கடிதத்தை என்ன செய்தீர்?'' என்று ஆச்சரியத்தோடு கேட்டார். அறிஞர் நடந்த சம்பவத்தை எடுத் துரைத்தார். சுல்தானும் அந்தப் பொய்யன் தம்மிடம் சொல்லியதைத் தெரிவித்ததோடு ''நன்மை செய்தவனுக்கும், தீங்கு செய்தவனுக்கும் தாங்கள் உபகாரமே செய்யும்படி போதித்த உபதேசத்தை நான் பின்பற்றத் தவறிவிட்டேன்; தங்கள் போதனைகள் முற்றிலும் உண்மையே,'' என்று ஆமோதித்தார்.

இந்த விசயத்திற்குப் பொருத்தமாக மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்கள் தங்கள் 'மஸ்னவீ ஷரீபில்' கூறியுள்ள ஒரு பைத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது.

"பதீரா பதீஷஹ்லு பாஷத் ஜஸா
அகர் மர்தீ அஹ்ஸின் இலாமன் அஸா"

தீமைக்குப் பகரம் தீமை செய்தல் மிக சுலபம். (ஒரு பெண் பிறவியும்கூட இதனைச் செய்ய முடியும்!) நீ சரியான ஆண் மகனாயின் உனக்குத் தீங்கு செய்தவனுக்கும் நன்மையையே செய்க.

***"தீயோரின் சூழ்ச்சி அந்தச் சூழ்ச்சிக்காரரைத் தவிர மற்றெவரையும் சூழ்ந்து கொள்ளாது." (35 - 43)***

செய்யிதுனா ஹுஸைன் இப்னு அலீ (ரலி) அவர்கள் ''மனிதராகப் பிறந்த, நாய் தின்னும் மாமிசமே, கோள் குண்டணி'' என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே நாம் புறம் பேசுவதை விட்டும் இதய சுத்தி பெறுவோமாக.

## பரிகாசம் செய்தலும் பாவம்

***''விசுவாசிகளே! எந்த ஆண்களும் மற்றெந்த ஆண்களையும் பரிகாசம் செய்யவேண்டாம்; அவர்கள் (அல்லாஹுவினிடத்தில்) இவர்களைவிட மேலானவர்களாய் இருக்கலாம். அவ்வாறே எந்தப் பெண்ணும் மற்ற எந்தப் பெண்ணையும் (பரிகாசம் செய்ய வேண்டாம்.) அவர்கள் இவர்களைவிட மேலானவர்களாய் இருக்கலாம். உங்களில் ஒருவர் மற்றொருவரை இழிவாகக் கருதவேண்டாம். உங்களில் ஒருவர் மற்றொருவருக்கு (தீய) பட்டப் பெயர் சூட்டுவது மகா கெட்ட (பாவமான)தாகும். எவர்கள் (இவைகளிலிருந்து) விலகிக்கொள்ள வில்லையோ, அவர்கள் அக்கிரமக்காரர்களாவார்கள்." (49 - 11)***

ஒருவர் மற்றொருவரைப் பரிகாசம் செய்து, கிண்டல் பண்ணுவதும், அதனால் அவருக்கு மனம் புண்படுவதும் கூடாத காரியமாகும். இதனை நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டித்து விலக்கியிருக்கிறார்கள்.

''பனீதமீமைச் சார்ந்தோர் அடிமை முஸ்லிமான பிலால் (ரலி) அவர்களைப் பரிகாசம் பண்ணியதையும், ஆயிஷா (ரலி) அவர்களும் ஹப்ஸா (ரலி) அவர்களும், உம்முஸல்மா (ரலி) அவர்களைப்பற்றிக் குதர்க்கமாகக் கூறியதையும், இக்ரிமாபின் அபூஜஹ்லை ஒருவர், இவன் பிர்அவ்னுடைய மகன் என்று தூசித்ததையும், ஸாபித் பின் கைஸ் (ரலி) என்பார் ஒருவரைக் கெட்ட பெண்ணின் மகன் என்று ஏசியதையும், இன்னும் சிலர் ஆபாசமான நிந்தனைப் பெயர்களைக் கொண்டு சிலரை அழைத்ததையும், நபியுல்லா(ஹ்) தங்கள் காலத்தில் கண்டித் திருப்பதாக ரிவாயத்துகள் அறிவிக்கின்றன.



ஒரு சமயம் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்கள் ஒரு பெண்பிள்ளையைக் குறித்து ''இவள் அதிகப் பேச்சுக்காரி'' என்று சொன்னதற்கு ரசூல் நாயகம் (ஸல்) அவர்கள், ''நீ அவள் மனம் புண்படப் பேசுகிறாய். அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்'' என்று கட்டளையிட்டதாகவும் கூறப்படுகிறது.

***''நீங்கள் (செய்யும் விஷமத்தனமான பரிகாசத்திற்கு) வீண்புகல் கூறவேண்டாம்; நீங்கள் விசுவாசம் கொண்டதற்குப் பின்னர், நிச்சயமாக (அதனை) நிராகரித்துவிட்டீர்கள்." (9 - 66)***

## 3 -வது ஹத்யா:- சத்தியம் தவறாமை

وَأَوْفُوا بِعَهْدِ اللّٰهِ إِذَا عَاهَدْتُّمْ وَلَا تَنْقُضُوا الْأَيْمَانَ
بَعْدَ تَوْكِيدِهَا وَقَدْ جَعَلْتُمُ اللّٰهَ عَلَيْكُمْ كَفِيلًا

***''நீங்கள் அல்லாஹுவின் பெயரால் செய்யும் உடன்படிக்கையைப் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள். யாதொரு சத்தியத்திற்கு அல்லாஹுவை சாட்சியாக வைத்து, அதனை நீங்களும் உறுதிப்படுத்திய பின்னர், அந்த சத்தியத்தை நீங்கள் முறித்து விடாதீர்கள்."***

'தாவிவிழும் அரசன் சமுகத்திலே சரியான பேச்சுப் பேசுதல்' என்று பாடலில் வருவதால் அரசனுடைய கோபத்திற்காளான போதிலும், சத்தியத்திற்கு விரோதமாக நடக்காதிருக்க வேண்டும் என்பதாயிற்று. இதில் நீதி வழுவாமை, பாரபட்சம் பாராட்டாமை, நீதித் தலங்களில் நியாயக்கேடாய் நடக்காமை, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமை, உத்தியோகங்களில் லஞ்சம் வாங்காமை, சட்டங்களுக்கு மாறுசெய்யாமை முதலிய மனித தர்மங்கள் அனைத்தும் அடங்கும்.

ஆகவே மனிதன் சத்தியத்தைக் கடைப்பிடித்து நடக்கும் போது, அவனது சொல் செயல் எல்லாம் நேர்மையாகவும், நீதியாகவுமே இருக்கும். அவன் தனக்கு எந்தவித இடுக்கண் நேரிட்டபோதிலும் சத்தியத்திலிருந்து தவறமாட்டான்.

அரச தர்பாரில் சென்று சந்தர்ப்பத்துக்கேற்றவாறு பேசுவதில் இரு பாவங்கள் ஏற்படுகின்றன, (1) நீதிக்கு மாற்றம் செய்வது. (2) பொய் பேசுவது; இதனால் அதை விட்டொழிவதே மிகச் சிலாக்கியமாகும்.

**நீ**ங்கள் ஆறு செயல்களில் எனக்கு ஜாமீன் நிற்பீர்களாயின் நான் உங்களுக்குச் சுவனப்பதியில் ஜாமீன் நிற்பேன். அவற்றில் (1) பொய் பேசாமை. (2) வாக்குறுதியை நிறை வேற்றுதல். (3) அமானப் பொருளை மோசம் செய்யாமை. (4) விலக்கப்பட்டவைகளிலிருந்து கண்களை மூடிக்கொள்ளுதல். (5) கடமையான செயல்களை நிறை வேற்றுதல். (6) கையைப் பேணுதல். (என நபிகள் நாயகம் (ஸல்) மொழிந்துள்ளார்கள்.)

**ச**த்தியமானது தீனுக்குத் துணாகும். அதைக் கொண்டு தான் தீன் சம்பூர்ணமாயிற்று. மேலும் அது 'நுபுவ்வத்' பதவிக்கு அடுத்த பதவியாக இருக்கும். (நா - வா)

ரசூல் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகம் ஒரு மனிதன் வந்து, தான் இஸ்லாத்தைத் தழுவப் பிரியப்படுவதாகவும், ஆனால் விபசாரம், களவு, பொய், கள்குடி இவற்றைவிட மனமில்லை என்றும், அவற்றில் இலகுவானதொன்றை விடச் சொன்னால் விட்டுவிடுவதாகவும் கூறினான். அப்போது நாயகம் (ஸல்) அவர்கள், ''பொய் பேசுவதொன்றை மட்டும் அறவே ஒழித்துவிட்டால் போதும்'' என்று கூறினார்கள். அவன் அதை மிக இலகுவென மதித்து உடன் ஒப்புக்கொண்டு இஸ்லாத்தைத் தழுவினான்.

ஒரு நாள் விபசாரத்துக்குப் புறப்படுகையில் அவனுடைய மனம் வாதிக்கத் தொடங்கிற்று. ரசூல் நாயகம் ''நீ விபசாரம் செய்ததுண்டா?'' என்று கேட்டால் 'இல்லை' என்று பொய் சொல்வதற்கு நான் அவர்களோடு ஏற்கெனவே பொய் சொல்ல மாட்டேன் என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறேன்; ''ஆம்'' என்று உண்மையை ஏற்றுக்கொள்வேனாயின் சட்டப்படி தண்டிக்கப்படுவேன். ஆதலின், விபசாரத்துக்குப் போகாதிருப்பதே நலம் என்று சிந்தித்துக்கொண்டே அந்த எண்ணத்தை விட்டொழித்தான். அதோடு மதுபானத்தையும்



மறந்தான்; களவையும் குழிதோண்டிப் புதைத்தான். ரசூல் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லா(ஹ்)வின் ரசூலே! தாங்கள் சத்தியம் என்ற அரும் பொருளால் எனது பாவச் செயல்களின் வாசல்களை எல்லாம் அடைத்துவிட்டீர்கள்'' என்று கூறி நன்றி பாராட்டினான்.

(சூரத் பரா அத் தப்ஸீர், இமாம் ராஸீ (ரலி)

இதிலிருந்து உண்மை விசுவாசி எந்தக்காரணத்தாலும் சத்தியம் தவறி நடக்கமாட்டான் என்று புலம்படுகின்றது. இதனை வலியுறுத்த ஒரு ஹகீமின் நன்மொழியையும் கீழேத் தருகிறோம்:-

''எல்லாப் பொருள்களுக்கும் அணிகலன் உண்டு. மொழிக்கு அணிகலன் வாய்மையாகும். சத்தியம் தவறி வாழ்வதைவிட சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு இறப்பது மிகவும் மேல்'' என்றவாறு.

**உங்களுக்குள் நீங்கள் (விஷமம் செய்வதற்காக) உங்களுடைய சத்தியத்தைக் காரணமாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்தால் நிலையற்ற (உங்களுடைய) பாதம் பெயர்ந்துவிடும். தவிர அல்லாஹ்வின் பாதையை நீங்கள் தடுத்துக் கொள்வதன் காரணமாகப் பல துன்பங்களையும் நீங்கள் அனுபவிக்கும்படி நேரிடும், அன்றி, மகத்தான வேதனையும் உங்களுக்குக் கிடைக்கும்.**

***(16 - 94)***

அதர்மம், அநீதி இவற்றை விலக்கி நடந்துகொள்ளும்படி திருமறையில் பல இடங்களில் இறைவன் கட்டளையிட்டிருக்கிறான். நாயக வாக்கியங்களில் பலவும் இந்த விசயத்தில் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றன. இவற்றால் வாய்மையின் மாண்பு எத்துணை முக்கியம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

## 4-வது ஹத்யா:- தாழ்மையாய் நடத்தல்

وَلَا تَمْشِ فِي الْأَرْضِ مَرَحًا ۖ إِنَّ اللَّهَ لَا يُحِبُّ كُلَّ مُخْتَالٍ فَخُورٍ

**"பூமியில் பெருமைபட நடக்காதே! நிச்சயமாக கர்வம் கொண்டு பெருமைப்படும் யாவரையும் அல்லாஹூ நேசிப்பதில்லை."**

*(31- 18)*

"மகிமையும் பெருமையும் எனக்கேயுரித்தான சிபத்து (பண்பு)களாயிருக்கின்றன. இவை இரண்டிலும் யாராவது என்னுடன் உரிமை பாராட்டினால், அவனை நான் ஹலாக்காக்கி விடுவேன்." (குதுஸி)

"தலையில் கடிவாளக் கயிறு மாட்டப்படாத எந்த மனிதனுமில்லை. அந்தக் கயிறு இரண்டு மலக்குகளின் கையில் இருக்கிறது; அவன் தாழ்மையுடையவனாயின், அந்த மலக்குகள் அந்தக் கயிற்றை மேலுக்கு இழுத்து, "எங்கள் ஆண்டவா! இவனை உயர்த்தி மேன்மையாக்குவாயாக" என்றும், அவன் பெருமையுடையவனாயின், அவர்கள் அந்தக் கயிற்றைக் கீழேத் தாழ்த்தி, "எங்கள் ரப்பே! இவனைக் கீழ்மை யுடையவனாக ஆக்கிவிடுக" என்றும் மன்றாடுவார்கள்.

"நரகத்தில் ஓர் ஓடையிருக்கிறது. அதற்கு 'ஹபுஹப்' எனப் பெயர் சொல்லப்படும்; வம்பர்களையும், பெருமைக்காரர்களையும் அந்த ஓடைக்குள் ஆழ்த்துதல் அல்லாஹ்வுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது." (நா - வா)

**"பஸாதை (புரளியை)யும் பொறாமையையும் கருதாமல், தாழ்மையாக நடப்பவர்களுக்கு நாம் சுவர்க்கம் என்ற உயரிய வீட்டை சித்தம்செய்து வைத்திருக்கிறோம்."**

ரசூல் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று காரியங்களில் மனிதனுக்குக் கேடு சம்பவிக்கும் என்று கூறியுள்ளார்கள்.

1. **உலோபத்தனம்.** (மிஞ்சியதைக் கொடாதிருத்தல்.)
2. **பிடிவாதம்.** (பிறரை மதியாது நினைத்ததைச் செய்யத் துணிதல்.)
3. **அகம்பாவம்.** (தற்பெருமை அடைதல்.) என்றும்.



"எவன் பெருமை பாவிக்கின்றானோ? அவன் சிறுமை அடைவான். தாழ்மையைக் கைக்கொண்டவன் மேன்மை அடைவான்" இன்னும், "முற்காலத்தில் ஒரு மனிதனுடைய பரிவட்டம், அவனைப் புதுமை ஆக்கியதின் காரணத்தால், அவன் நடந்து செல்லும்போது, அவனை அல்லாஹூத் தஆலா பூமியில் ஆழ்த்திவிட்டான். அவன் இறுதி நாள்வரை பூமிக்குள் இறங்கிக் கொண்டே போகிறான்" எனவும் மொழிந்துள்ளார்கள்.

நம் நபி பெருமான் (ஸல்) அவர்களின் நடை, உடை, பாவனைகள் எந்தச் சமயத்திலும் தாழ்மையை மேற்கொண்டே இருந்தன. அவைகள் நமக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருப்பதால் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுவோம்.

### நபிபெருமானாரின் நற்குணங்கள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தாமும் ஒரு மனிதர் என்ற நிலையில் கௌரவ உணர்ச்சிக்கோ, பெருமைத்தனத்திற்கோ, அந்தஸ்திற்கோ சற்றும் இடம்கொடாமல், எந்த வகுப்பாரோடும், எந்தக் காரியத்திலும் சமமாகவே நடந்து வந்தார்கள். உட்கார்ந்திருக்கும் சஹாபிகள் எழுந்து நின்று தங்களைக் கௌரவிக்க அனுமதிப்பதில்லை; சிறுவர்கள் பக்கம் நடந்து செல்லும்பொழுது அவர்களுக்கு சலாம் கூறுவார்கள். ஒட்டகத்திற்குத் தீனி வைப்பார்கள்; தங்களின் கிழிந்த ஆடைகளையும் பாதரட்சைகளையும் தைத்தணிவார்கள்; வீட்டைச் சுத்தி செய்வார்கள்; ஆட்டில் பால் கறப்பார்கள்; அடிமையோடு சாப்பிடுவார்கள்; எந்த வேலையையும் தாங்களே செய்வார்கள்; கடையிலிருந்து தேவையுள்ள பொருட்கள் வாங்கி வருவார்கள்; யாரைக் கண்டாலும் 'சலாம்' சொல்வதில் முந்திக்கொள்வார்கள்; யாரேனும் விருந்துக்கு அழைத்தால் மறுக்காமல் போவார்கள். மலர்ந்த முகத்தோடும், புன்சிரிப்போடும் பழகுவார்கள்; கடுகடுப்பு என்பது அறவே இருக்காது; ஆடம்பரச் செலவோ, செலவில் சிக்கனமோ செய்ய மாட்டார்கள். இரக்கமே உருவானவர்கள். முஸ்லிம்களோடு மட்டுமல்ல, அல்லாதாரிடமும் அனுதாபமுடையவர்கள். யுத்தத்திற்குச் சென்றால், ஸஹாபாக்களுடைய வேலைகளில் கூடுதல் பங்கு செய்வார்கள். இது மட்டுமா?

எம் பெருமானார் (ஸல்) அவர்களின் நித்திய அலுவல்கள், மிகவும் பின்பற்றத் தக்கவை, ஒவ்வொரு அலுவலுக்கும், ஒவ்வொரு

நேரத்தைக் குறிப்பிட்டு, அதன்படி கிரமமாய் நடந்து வந்தார்கள். புசிப்பதும், சிறுவர்களுடன் கூடிக் குலாவுவதும், மனைவி மக்களுடன் கலந்திருப்பதும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தான். மலம் ஜலம் கழித்தல், குளித்தல், நேயர்களைக் கண்டு பேசுதல், ஏழைகளின் சேமலாபங்களை வினவுதல், நோயாளிகளைப் பார்த்துத் தேறுதல் கூறல், முதலியவற்றிற்கும் நேரம் வகுத்திருந்தார்கள். மற்றைய நேரங்களில் அல்லாஹ்வைத் தொழுவதும், குர்ஆன் ஷரீபைப் பாராயணம் பண்ணுவதும், மக்களுக்கு உபதேசம் புரிவதுமான நற்காரியங்களிலேயே ஈடுபட்டிருந்தார்கள். சிறுவர் சிறுமிகளோடு முகம் மலர்ந்து புன்சிரிப்போடு பழகுவார்கள். அனாதைகளை, அதிக வாஞ்சையுடன் வரவேற்று வேண்டும் உதவிகளைப் புரிவார்கள்; தாங்கள் ஆகாரம் புசிக்கும் போதெல்லாம் வேறு மனிதர்களையும் விருந்தினராக அழைத்துக்கொண்டு சமபந்தியாய்ப் புசிப்பார்கள். ஏழைகளும் யாசகர்களும் பசித்திருக்கக் காண்பார்களாயின், தமக்கில்லா விடினும், அத்தகையோரின் பசிப்பிணியைப் போக்க எத்தனிப்பார்கள். எத்தகைய ஆபத்து வந்துற்ற போதினும் உண்மையையே உரைப்பார்கள். கடனைத் தீர்க்கச் சக்தியற்ற ஏழைகளின் கடனை எல்லாம் தாம் ஏற்றுக் கொண்டு, அவற்றை மீட்டுத் தருவார்கள். தர்மம் அளிக்கும் உத்தமர்கள்மீது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிகமான அன்புண்டு. பிறர்க்கீயாத உலோபிகள்மீது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிருப்தியே இருக்கும். தம்மைவிட வயதில் மூத்தோர்களுக்கெல்லாம் பணிந்து நடப்பார்கள். சம வயதுடையோரிடம் சமரச அன்பினராயிருப்பார்கள். இத்தகைய நற்குணங்களெல்லாம் ஒருங்கே நம் நாயகம் (ஸல்) அவர்களிடம் இயற்கையில் அமைந்திருந்தன. என்னே! நம் பெருமானாரின் குணாதிசயங்கள்.

நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்த சொல், செயல்களிலிருந்து, அவர்களது பண்பு மற்றோரைவிட மிக மேம்பட்டதென்பது உறுதியாகின்றது. வணக்கம் வழிபாடுகளை நிறைவேற்றுவதிலும், ஆகுமான காரியங்களை கடைப்பிடிப்பதிலும், ஆகாதவற்றை அகற்றுவதிலும், அவர் களுக்கு யாரும் இணையாகமாட்டார். சட்டப் படியுள்ள அளவுக்குமேல் ஒருவர் தொடர்ச்சியாகத் தம் இஷ்டம் போல் நோன்பு வைப்பதை நாயகம் (ஸல்) அவர்கள் கண்டித்தபோதும், தாங்கள் வைக் கின்றீர்களே என்று, ஒருவர் கேட்டார். அதற்கு அவர்கள் உங்களில் யார் எனக்கொப்பாகுதல் கூடும்?'' என்று மொழிந்தார்கள்.

(மிஷ்காத்)



இமாம் மாலிக் இப்னு அனஸ் (ரலி) அவர்களால் அறிவிக்கப் பட்டிருப்பதாவது:- ரசூலுல்லாஹ் (ஸல்) திருவுளமானர்கள்; ''நான் உங்களில் இரண்டு பொருட்கள் விட்டுச் செல்கின்றேன். எதுவரை நீங்கள் அவற்றைத் தங்கள் செயலின் பழக்கவழக்கமாக ஆக்கிவைப்பீர்களோ, அதுவரை நீங்கள் வழி தவறமாட்டீர்கள். அதாவது குர்ஆன் மஜீதும் - அவனது ரசூலின் சுன்னத்துகளும் (நடைமுறையும்) ஆகும்'' என்றார்கள்.

நாமும் நமதருமை நாயகம் (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நற்குண நற்பழக்கங்களை மேற்கொள்ளுவோமாக!

ஸய்யிதுனா அலீ (ரலி) அவர்கள் அரபு மொழியில் சொல்லிய உபதேசமொன்றைத் தழுவி, ஒரு கவிஞர் தமிழில் பாடிய கவிதையைக் கவனியுங்கள்.

ஐந்து காரியம் இல்லாவிட்டால்
    அனைவரும் ஸாலி ஹாயிருப்பார்
மிஞ்சியதைக் கொண்டு பகீல்த்தனமும்
    மேட்டுத்தனம் கொண்டு பொருந்துவதும்
கொஞ்ச துனியாவில் அவட்கையுடன்
    கொடிய முகத்தாட்சி அகம்பெருமை
மொஞ்சராகிய அலியா ரிதை
    மொழிந்தா ருலகத்தா ரெல்லோர்க்குமே.

இறைவா! மேற்கூறிய நற்குண நற்செய்கைகள் முன்கர் வ நகீருக்குரிய ஹத்யாவாக இருப்பதால், இந்த உலகில் நாங்கள் அவற்றைச் சேகரிக்கத்தக்க அறிவையும் வழியையும் காட்டி அருள்வாயாக.

## 4 - வது தகுதியாளர் மாலிக் (அலை)

## 12

அல்லாஹுவை பயந் தழுவதுவும்
அன்னை தந்தையர்க் குபகாரமும்
பொல்லாப் பாவத்தை விடுவதுவும்
புகழும் ரகசியக் கொடையுமாகும்
சொல்லா லிதுநான்கும் மாலிக்குக்கு
தொகுத்த ஹத்யா வாகுமெனவே
பொல்லா உத்பாவைப் பொருதுமெங்கள்
புண்ய ஹபீபுல்லா(ஹ்) புகலலுற்றார்

**அரும்பதவுரை:-**

*மாலிக் = நரகத்தின் அதிபர். உத்பா = வம்பன். ஹபீபுல்லாஹ் = இறைவனின் தோழர் (நபிகள் நாதர்).*

## நரகமும் அதன் அதிபர் மாலிக்கும்

وَسِيْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى جَهَنَّمَ زُمَرًاؕ حَتّٰٓى اِذَا جَآءُوْهَا
وَفُتِحَتْ اَبْوَابُهَا

***"(அந்தநாளில்) நிராகரித்தோர் யாவரும் கூட்டம் கூட்டமாக நரகத்தின்பால் ஓட்டி வரப்படுவார்கள். (அதன் சமீபம்) அவர்கள் வந்தவுடன், அதன் வாயல்கள் திறக்கப்படும்."***

### ஏழுவகை நரகம்

1. **ஹாவியா** : பிர்அவ்னும் அவன் கூட்டத்தாரும் சேரும் நரகம்.
2. **ஹாமியா** : இப்லீசும் அவன் கூட்டத்தாரும் சேரும் நரகம்.
3. **ஹுதமா** : எஹூதிகள் சேரும் நரகம்.
4. **ஸஈர்** : நஸ்றா கூட்டத்தார் சேரும் நரகம்.
5. **ஸக்று** : சிலை வணங்குவோர் சேரும் நரகம்.
6. **ஜஹீம்** : முஷ்ரிகீன்கள் சேரும் நரகம்.
7. **ஜஹன்னம்** : இரசூலைப் புறக்கணித்தோர் சேரும் நரகம்.

*(இந்த ஏழு வகை நரகத்திற்கும் மாலிக் (அலை) அவர்களே அதிபராவர்)*



***"இறுதிநாளில் வானம் பழுக்கக் காய்ந்த செம்மைப் போல் ஆகிவிடும், மலைகள் பஞ்சைப்போல் பறத்தப்படும், ஒரு சினேகிதன் மற்றொரு சினேகிதனை (பார்த்த போதிலும்) அவனுடைய சுகத்தை விசாரிக்கமாட்டான், குற்றவாளி அந்தநாளில் தன்னுடைய வேதனைக்குப் பரிகாரமாக தன்னுடைய மக்களையும், தன்னுடைய மனைவியையும், தன்னுடைய சகோதரனையும், தான் ஆதரித்து வந்த தன்னுடைய சொந்தக்காரர்களையும், இன்னும் பூமியிலுள்ள யாவையுமே கொடுத்தேனும் தன்னை இரட்சித்துக் கொள்ள விரும்புவான். (எனினும்) அது ஆகக்கூடியதல்ல, நிச்சயமாக நரகத்தின் நெருப்பு அவனைச் சூழ்ந்து கொள்ளும், அது தோல்களை எரித்து (மூளையை உருக்கி) விடும். (70:8-16)***

***"(வேதனையில்) ஒரு சிறிதும் குறைக்கப்படமாட்டாது. அதில் அவர்கள் நம்பிக்கையும் இழந்துவிடுவார்கள். நாம் அவர்களுக்கு யாதொரு தீங்குமிழைத்துவிடவில்லை. எனினும், அவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொண்டார்கள். (இந்த நிலைமையில், அவர்கள் நரகத்தின் அதிபதியை நோக்கி,) "மாலிக்கே! உமதிறைவன் எங்களுடைய காரியத்தை முடித்துவிடவும் (மரணத்தின் மூலமாயினும் எங்களுக்கு விடுதலை கிடைக்கட்டும்)" என்று சப்த மிடுவார்கள். அதற்கு அவர் (முடியாது) நிச்சயமாக நீங்கள் இதே நிலைமையில், (வேதனையை அனுபவித்துக்கொண்டே மரிக்காது,) இருக்க வேண்டியதுதான்" என்று கூறுவார். (74: 75)***

***"அவர்கள் என்றென்றும் அதில்தான் தங்கிவிடுவார்கள் (அவர்களை) இரட்சித்துக் கொள்வோரையும், (அவர்களுக்கு) உதவி செய்வோரையும் அங்கு (அவர்கள்) காணமாட்டார்கள். நரகத்தில் அவர்களுடைய முகங்களை புரட்டிப் புரட்டிப் பொசுக்கும் நாளில், எங்களுடைய கேடே நாங்கள் அல்லாஹுவுக்கும் அவனது தூதருக்கும் வழிப்பட்டிருக்க வேண்டாமா?" என்று கதறுவார்கள். (33 - 65: 66)***

முஹம்மது இப்னு முன்கதிறு என்ற பெரியார் கூறுகிறார்:

"நரகத்தை உண்டுபண்ணியபோது எல்லா மலக்குகளும் அதன் பயங்கரத்தைக் கண்டு அழுதுகொண்டிருந்தனர். இறைவன் மனிதர் களையும், ஜின்களையும் படைத்தபோது, நரகத்தை உண்டு பண்ணியது தங்களுக்கில்லையென்றறிந்து அழுகையை நிறுத்திக் கொண்டனர்.

இறைவன் கூறுகிறான்:-

وَلَقَدْ ذَرَأْنَا لِجَهَنَّمَ كَثِيرًا مِّنَ الْجِنِّ وَالْإِنسِ لَهُمْ قُلُوبٌ
لَّا يَفْقَهُونَ بِهَا وَلَهُمْ أَعْيُنٌ لَّا يُبْصِرُونَ بِهَا وَلَهُمْ آذَانٌ
لَّا يَسْمَعُونَ بِهَا أُولَٰئِكَ كَالْأَنْعَامِ بَلْ هُمْ أَضَلُّ أُولَٰئِكَ
هُمُ الْغَافِلُونَ ۝

**''நிச்சயமாக மனிதர்களிலும், ஜின்களிலும் அனேகரை நரகத்திற்காகவே நாம் படைத்திருக்கிறோம். (அவர்கள் எத்தகையோ ரென்றால்) அவர்களுக்கு இருதயங்களிருக்கின்றன; எனினும் அவற்றைக் கொண்டு (நல்லுபதேசங்களை) உணர்ந்து கொள்ளமாட்டார்கள். அவர்களுக்குக் கண்களுமுண்டு; எனினும் அவற்றைக் கொண்டு (இந்த உலகிலுள்ள அத்தாட்சிகளை) பார்க்கமாட்டார்கள். அவர்களுக்கு செவிகளுமுண்டு; எனினும் அவற்றைக்கொண்டு (நல்லுபதேசங்களுக்கு) செவிசாய்க்க மாட்டார்கள். இத்தகையோர் மிருகங்களைப் போல், அல்லது அவற்றைவிட அதிக வழி தவறினவர்களாகவே இருக்கின்றனர். இத்தகையோர்தாம் (நம் வசனங்களை) அலட்சியம் செய்தவர்களாவர்.''** ***(7 - 179)***

**நிச்சயமாக நாம் உங்களிடம் உண்மையான வேதத்தை (முஹம்மது (ஸல்) அவர்கள் நாவின் வழி) வரச்செய்தோம். எனினும் உங்களில் பெரும்பாலோர், அந்த உண்மையை வெறுக்கின்றனர்.** *(43 - 78)*

நரக நெருப்பிலிருந்து தன்னைத்தான் தப்பித்துக்கொள்ள ஒவ்வொருவரும் இம்மையில் அல்லாஹ்வுக்குகந்த நல்வணக்கங்களில் ஈடுபட்டு அவனிடம் பாதுகாவல் தேட வேண்டியவர்களாகயிருக்க, நரக ஆக்கினைக்கு ஆளாக யாரும் பிரியப்படுவதில்லை.

இறைவன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்காத பாவிகளுக்காகத் தயார் செய்யப்பட்ட துன்பங்களின் முடிவே நரகம். அது அக்கினியால் நிரப்பப்பட்ட ஒரு பெரும் கிடங்கு. அதற்குள் நெருப்பால் படைக்கப் பட்ட, மிகப் பயங்கரமான உலகில், எங்கும் காணப்படாத கொடிய சில ஜந்துகள் காணப்படும். மேற்காட்டிய வேத வாக்கியத்தில் கண்டபடி நடவாத (பெரும்பாலும் இணைவைத்து வணங்கிய)வர்கள். **''அவர்களுக்கு நரகத்தில் (நெருப்பாலான) விரிப்புகளும் உண்டு. அவர்கள் மேல் போர்த்திக் கொள்வதற்கும் (நெருப்பாலான) போர்வைகளும் உண்டு.''** ***(7 - 41)***



**''(அன்னோருக்கு உணவாவது கள்ளி இனங்கள்) மெய்யாகவே அந்த (கள்ளி) மரம் நரகத்தின் அடித்தளத்திலிருந்து வெளிப்பட்ட ஓர் மரமாகும். அதன் கிளைகள் பாம்பின் படத்தைப்போலிருக்கும். நிச்சயமாக அவர்கள் (தங்களின் பசியின் கொடுமையினால்) அதனையும் புசிப்பார்கள். ஆனால் அவர்களுடைய வயிறு நிறைந்து (பசி தீர்ந்து)விடாது.''** *(37 - 64 - 66)*

**''பின்னர், அதற்குமேல் நரகத்தில் கொதித்துக் காய்ந்திருக்கும் சீழ் நீரையே அவர்களுக்குக் குடிப்பாகக் கொடுக்கப்படும், (இவைகளைப் புசித்துக் குடித்த பின்னரும்) நிச்சயமாக நரகத்தளவிலேயே அன்றி (வேறு எங்கும்) செல்லமாட்டார்கள்.''** *(37 - 67: 68)*

**''அது ஓர் அருவருப்பான உணவும் குடிப்புமாகும். அது மேலும் மேலும் அபரிமிதமான பசியையும் தாகத்தையும் உண்டு பண்ணிக் கொண்டேயிருக்கும்.''**

**''நரகத்தில் அவர்கள் திணறித் திணறி (கழுதையைப்போல்) கத்துவார்கள் (மற்றெவரின் சப்தமும்) அவர்கள் காதில் விழாது''** ***(21 - 100)***

அந்த நரகத்தின் அதிபர், இரக்கமற்ற உறுதியான நெஞ்சினர்; நரக வேதனையை சகிக்கமுடியாமல் கதறுகிறவர்களை, நீண்ட காலத்திற்குப் பின் நிமிர்ந்து பார்த்து, அன்னோருக்குச் சரியான பதில் சொல்லாமலே குற்றவாளிகளைக் கூடுதல் வேதனை செய்யும்படி நரகத்திற்குக் கட்டளையிடுவார். அல்லாஹ் அவருடைய இருதயத்திலிருந்து இரக்கம் என்பதை எடுத்துவிட்டான். ஆகவே, ரசூல் (ஸல்) அவர்களின் உம்மத்துகளாகிய நாம் மாலிக் (அலை) அவர்களின் இரக்கமற்ற சிந்தனைக்கும், கொடூர தண்டனைக்கும் ஆளாகாமல், தம்மைத் தாம் காத்துக்கொள்ளும் பொருட்டு, அவரைச் சமாதானப்படுத்தக்கூடிய நன்கொடை (ஹத்யாக்)களைச் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும்; அவை அடுத்து விவரிக்கப்படுகின்றன.

# மாலிக் (அலை) அவர்களுக்கு ஹத்யாக்கள் நான்கு

## 1 - வது ஹத்யா

### அல்லாஹுவைப் பயந்து கண்ணீர் உகுத்தல்

وَاعْلَمُوٓا اَنَّ اللّٰهَ مَعَ الْمُتَّقِيْنَ ○

"நிச்சயமாக அல்லாஹு பயபக்தியுடையோருடன் இருக்கின்றான்; என்பதை உறுதியாக அறிந்துகொள்ளுங்கள்."

"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹுவுக்குப் பயந்து (அழுது) கொள்வீர்களாயின், அவன் உங்களுக்குக் கண்ணியத்தையளிப்பான்; அன்றி (அதனை) உங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாக்கி உங்களை மன்னித்து விடுவான்." (8:29)

"என் சிறப்பின்மீதும் மகிமையின்மீதும் சத்தியமாக நான் எனது அடியான் மேல் இரண்டு பயங்கரத்தை ஒன்றாய் வைக்கமாட்டேன். இரண்டு சாந்தி சமாதானத்தை ஒன்றாக வைக்கமாட்டேன். அவன் உலகத்தில் என்னை அச்சம் தீர்த்திருந்தால், இறுதி நாளில் நான் அவனை நோவினைக்குள்ளாக்குவேன். அவன் என்னை நினைந்து உலகத்தில் அஞ்சி நடந்தால் ஆகிரத்தில் நான் அவனுக்குச் சாந்தி சமாதானம் அளிப்பேன்." (ஹதீது குதுஸி)

மேற்கண்ட இறைவனது வாக்கியங்களுக்கொப்ப நபி பெருமானார் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருப்பதாவது:-

"அல்லாஹ்வின் அச்சத்தால் ஒரு ஈயின் தலையளவாயினும் தன் இரு கண்களிலிருந்து நீர் சொரிந்து, அப்பால், அதனால் சிறிதேனும் முகவாட்டம் அடையும் விசுவாசியான அடியான் ஒருவனை அல்லாஹ் நரகத்திலின்று விலக்கியருளாதிருப்பதில்லை."

"அல்லாஹ்வுக்குப் பயந்து ஒரு அடியானுடைய சரீரம் மயிர்க்கூச் செறியுமாயின், அவன் செய்த பாவங்கள் அனைத்தும் காய்ந்த மரத்திலிருந்து இலைகள் உதிர்வதுபோல் உதிர்ந்துவிடும்."



"அல்லாஹ்வுக்குப் பயந்து அழுதவன் கறந்த பால் மடுவில் புகாததுவோல் நரகம் புகமாட்டான்."

"பீஸபீலில் கிளம்பிய புழுதியும், நரகத்தின் புகையும் ஒன்றுசேரா."

"நான் உங்களை விடவும் அதிகமாக அல்லா(ஹ்)வுக்குப் பயந்து அழுபனாகயிருக்கிறேன்." (நா - வா)

அல்லாஹ்வுக்கு மிகப் பிரியமான துளிகள் இருவகை. அல்லா(ஹ்)வுக்குப் பயந்து பெருக்கப்படும் கண்ணீர் துளி ஒன்று. மற்றது அல்லாஹுவின் பாதையில் சிந்தப்படும் உதிரத்துளி. (நா - வா)

செய்யிதுனா உமரிப்னுல் கத்தாப் (ரலி) அவர்கள் அல்லா(ஹ்)வை அளவுகடந்து பயப்படுகிறவர்களாகவும், அவனையே அதிகம் தேடுகிறவர்களாகவுமிருந்தார்கள். "பூரண மனத்துடனும், நம்பிக்கையுடனும் அல்லா(ஹ்)வைத் தேடுபவனே, தான் நாடியதைப் பெற்றுக் கொள்வான்;" என்பதைக் கருதியே தங்களின் தாடி மயிர் நனையுமளவும் அல்லா(ஹ்)வை அஞ்சிப் பயந்து, கண்ணீர் சொரிந்து அழுகிறவர்களாகயிருந்தார்கள். அப்படி அழுததின் காரணத்தினால் அவர்களது இருகன்னங்களின் மீதும் கண்ணீரானது இரண்டு கறுத்த அடையாளத்தை உண்டுபண்ணிவிட்டது. அந்தப்பெரியார் தன்னைப் பற்றிக் கூறுவதாவது: "உமருடைய தாய், அவனைப் பெறாமலிருக்க வேண்டிற்றே! அவன் இந்த உலகத்தைக் காணாமலும், மனிதர்களில் ஒருவனாகப் பிறக்காமலும் இருக்க வேண்டிற்றே" என்று உமர் (ரலி) அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள்.

உமருகத்தாப் (ரலி) போன்ற ஒரு மகான் அல்லா(ஹ்)வை இந்தவிதமாக அஞ்சிப் பயந்து, தங்கள் குறைகளைச் சொல்லிச் சொல்லி அழுதார்களென்றால், சகோதரர்களே! நமது குறைகளுக்காக நாம் எவ்வளவு அழுது இறைஞ்ச வேண்டுமென்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் தங்களுடைய 'மின்ஹாஜ்' என்னும் நூலில் அல்லா(ஹ்)வுக்குப் பயந்து அழுகின்றவருக்கு இகத்திலும் பரத்திலும் வாய்க்கக்கூடிய பலன்கள் 12 எனச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அவையாவன:-

1. அல்லா(ஹ்)வின் புகழ்.
2. பகைவரை விட்டும் பாதுகாப்பு.
3. அல்லா(ஹ்)வின் ஒத்தாசை.
4. துன்பங்களிலிருந்து விமோசனம்.
5. வணக்கங்களில் அபிவிருத்தி.
6. பிழைகளில் மன்னிப்பு,
7. அல்லாஹ்வின் அன்பு.
8. வணக்கங்களின் அங்கிகாரம்
9. அல்லா(ஹ்)வால் மதிப்பும் கண்ணியமும்.
10. மரணத் தறுவாயில் நன்மாராயம்.
11. நரகத்தை விட்டும் ஈடேற்றம்.
12. கவனத்தில் நிலையான இன்பம்.

கஃபுல் அஹ்பார் (ரலி) அவர்கள் கூறியுள்ளதாவது:-

**எனது இதயம், எந்த நாயன் வசம் இருக்கிறதோ? அந்த நாயன மீது சத்தியமாகக் கண்ணீர் ததும்பும் வரை நான் அல்லா(ஹ்)வுக்குப் பயந்து அழுவதில் ஒரு பொன்னாலாகிய மலையை நான் இனாமாக அளிப்பதையும் அல்லது பெறுவதையும் பார்க்கிலும் எனக்கு அது மிகவும் பிரியமாக இருக்கிறது.**

சகோதரர்களே! நீங்கள் தங்களை ஒரு பாவமும் செய்யாத சுத்தமானவர்கள் என்று உங்கள் உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருக் கிறீர்களா? நம் ஆதி தந்தை 'ஆதம்' (அலை) அவர்கள் இறைவனால் விலக்கப்பட்டிருந்த ஒரு கனியை, இச்சைகொண்டு புசித்த காரணத்தால் அவர்களுக்குச் சுஜூது செய்த மலக்குகளில் நின்றும் பிரித்து, கவனத்திலிருந்து, வெளியேற்றப்பட்ட பொழுது, கண்ணீரால் சரந்தீவிலுள்ள ஓடைகள் ஒலித்து ஓடும் வரை அவர்கள் ஒற்றைக் காலால் நின்று முன்னூறு ஆண்டுகள் அல்லாஹுவைப் பயந்து அழவில்லையா? இவ்வாறே ஒவ்வொரு தீர்க்கத்தரிசியும், தாங்கள் தவறுகள் செய்திரா விட்டாலும், தங்களால் பாவம் ஏற்படாதிருக்க, அல்லா(ஹ்)வைப் பயந்து அழுதிருக்கிறார்கள். ஆதலின் மக்கள் தங்களுடைய அற்ப இச்சையால் எண்ணற்ற அசம்பாவிதங்களில் அளவற்ற கவனம் செலுத்துவதால், அவற்றால் பெரும்பாலும் பாவங்களே நிகழ்கின்றன. இதனால் கழிந்த பாவங்களை மன்னிக்க வேண்டியும், இனிமேல் பாவங்கள் நிகழாதிருக்க வேண்டியும், பரிசுத்த உள்ளத்தால் அல்லாஹ்விடம் அழுது வருந்தி வேண்டுதல் புரிதல் அவசியமாகின்றது.



غَافِرِ الذَّنْبِ وَقَابِلِ التَّوْبِ شَدِيْدِ الْعِقَابِ،

**''அல்லாஹ் குற்றவாளிகளுடைய மன்னிப்புக்கோரலை அங்கிகரித்துப் பாவங்களை மன்னிப்பவன். (மனமுரண்டாகக் குற்றம் புரியும் பாவிகளை) வேதனை செய்வதிலும் கடினமானவன்'' என்று அல்லாஹ் திருமறையில் கூறியுள்ளான்.**

எனவே நாம் ஒவ்வொருவரும் நிகழ்ந்த பாவங்களுக்காகப் பரிசுத்த மனத்துடன், நம் பெருமானர் ரசூலேகரீம் ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம் அவர்கள் அருளித்தந்த, இஸ்திக்பாருகளில் நாயகம் எனப் புகழப்பெறும் ஸய்யிதுல் இஸ்திக்பாரை உள்ளச்சத்துடன் ஓதி அல்லாஹு இடம் பாவ மன்னிப்பையும், அதன் பொருட்டு உணவுப் பெருக்கத்தையும், சுக வாழ்வையும் கேட்டுப் பெறுவோமாக!

## ஸய்யிதுல் இஸ்திக்பார்

سَيِّدُ الْاِسْتِغْفَارُ

اَللّٰهُمَّ اَنْتَ رَبِّيْ لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ خَلَقْتَنِيْ وَاَنَا عَبْدُكَ وَاَنَا عَلٰى
عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ اَعُوْذُبِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ
اَبُوْءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ وَاَبُوْءُ بِذَنْبِيْ فَاغْفِرْلِيْ فَاِنَّهٗ لَا
يَغْفِرُ الذُّنُوْبَ اِلَّآ اَنْتَ

**அல்லாஹும்ம அந்த ரப்பீ லா இலாஹ இல்லா அந்த கலக்தனீ அன அப்துக்க வஅன அலா அஹ்திக்க வ வஃதிக்க மஸ்த தஃது அஊது பிக்க மின்ஷர்ரி மா ஸனஃது அபூஉ லக்க பிநிஃமதிக்க அலய்ய வ அபூஉ பிதன்பீ பஃபிர்லீ ப இன்னஹு லாயஃகுபியத்துனூப இல்லா அந்த.**

**உரை:**

அல்லாஹுவே! நீயே எனது ரப்பு உன்னைத் தவிர வணங்குதற் குரியவன் வேறு யாருமில்லை. நீயே என்னை படைத்திருக்கிறாய்.

இன்னும் நான் உனது அடியான். இன்னும் நான் என்னாலியன்றவரை உனது அறுதிமானமெனும் ஈமானின் பேரிலும், உனது வார்த்தைப் பாட்டின் பேரிலுமிருக்கிறேன். எனது கெட்ட செய்காரியங் களைவிட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன். என் மீதுள்ள உனது அருட்கொடையைக் கொண்டு உன்னிடமே மீளுகிறேன். இன்னும் எனது தவறைவிட்டு நான் விலகுகின்றேன். குற்றங்களை மன்னிப்பவன் உன்னையல்லாது வேறில்லை.

*(ஆகவே எனக்கு பாவ மன்னிப்புத் தந்தருள்வாயாக!)*

அப்துல் வஹ்ஹாபுஷ் ஷஃரானிய்யி (ரஹ்) என்ற பெரியார் கூறுகிறார்:-

إِلٰهِيْ لَسْتُ لِلْفِرْدَوْسِ أَهْلاً ۞ وَلَا أَقْوٰى عَلٰى نَارِ الْجَحِيْمِ
فَهَبْ لِيْ تَوْبَةً وَاغْفِرْ ذُنُوْبِيْ ۞ فَإِنَّكَ غَافِرُ الذَّنْبِ الْعَظِيْمِ

**இலாஹீ லஸ்த்து லில்பிர் தவ்ஸி அஹ்லா**
**வலா அக்வா அலா நாரில் ஜஹீமி**
**பஹப்லீ தவ் பத்தன் வக்பிற் துனூபீ**
**ப இன்னக காபிருஸ் தன்பில் அளீமி.**

பொருள்:-

ஆண்டவா! நான் சுவனப்பதிக்குத் தகுதியானவனாக இல்லேன்; ஆனால் 'ஜஹீம்' என்ற நரகலோகத்தின் நெருப்பினைத் தாங்குபவனா கவுமில்லேன்; ஆதலின் நீ மன்னிப்பால் என் பாவத்தைப் பொறுத் தருள். ஏனெனில், நீ பாவங்களை எல்லாம் மன்னிப்பவனாக இருக்கின்றாய்.

இந்த அரபிக் கவியை அநேக ஊர்களில் வெள்ளிக்கிழமை தோறும் புனித குத்பாத் தொழுகைக்குப் பின், ஒரே முகமாகக் கையேந்தி ஐந்து தடவை ஓதப்படுகிறது. தன்னுடைய பாவத்தை மன்னிக்கும்படி களங்கமற்ற இருதயமுடையவனாக இறைவன் பக்கம் திரும்பி மனமுருகி அழுது பொருள் விளங்க ஓதுவதால், பாவமன்னிப்புக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சிறு பாவம், பெரும் பாவங்களை விட்டும் பரிசுத்தமாகிய நமதருமை நாயகம் (ஸல்) அவர்கள்:-



"மனிதர்களே! இறைவனிடத்தில் உங்களுடைய பாவங்களை விட்டும் தௌபா (பாவ மன்னிப்பு)க் கோரி நல் வணக்கங்களில், மீளுங்கள். நான், நாள் ஒன்றிற்கு நூறு தடவை 'இஸ்திக்பாரு'டன் தௌபாச் செய்து மீளுகிறேன்," எனத் திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்கள்.

இறைவா! எங்களுடைய பாவங்களைப் பொறுத்து, உனது ஹிதாயத்தை தந்தருள்வாயாக.

## 2 - வது ஹத்யா:-
## பெற்றோரைப் பேணுதல்

وَوَصَّيْنَا الْإِنْسَانَ بِوَالِدَيْهِ حَمَلَتْهُ أُمُّهُ وَهْنًا عَلٰى
وَهْنٍ وَّفِصَالُهُ فِيْ عَامَيْنِ أَنِ اشْكُرْ لِيْ وَلِوَالِدَيْكَ
وَإِلَيَّ الْمَصِيْرُ ۝

**"தனது தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின்மேல் துன்பத்தை அனுபவித்து (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்து கொண் டலைந்தாள். - (பிறந்த) பிறகும், இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள்; ஆகவே நீ எனக்கும், உன்னுடைய தாய் தந்தைக்கும் நன்றி செலுத்தி வா, முடிவில் நம்மிடமே வந்து சேரவேண்டியதிருக்கின்றது." *(31 - 14)***

**"(நபியே!) உமதிறைவன் தன்னைத்தவிர (மற்றெவரையும்) வணங்கக் கூடாதென்று (கட்டளையிட்டிருப்பதுடன்) தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படியாகவும் கட்டளையிட்டிருக்கின்றான். அவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ உம்மிடமிருந்து முதுமையை அடைந்துவிட்ட போதிலும் அவர்களை விரட்டவும் வேண்டாம்; அவர்களை (நிந்தனையாக) சீ, என்று சொல்லவும் வேண்டாம். அவர்களிடம் (எதைக் கூறியபோதிலும்) மிக்க மரியாதையாகவும் அன்பாகவுமே கூறும்." *(17 - 23)***

**"அவர்களுக்கு மிக்க அன்புடன் பணிந்து நடப்பீராக! அன்றியும் என் இறைவனே! நான் குழந்தையாக இருந்தபொழுது (மிக்க அன்பாக)**

**என்னை அவர்கள் வளர்த்துப் போஷித்த பிரகாரமே நீயும் அந்த இருவர் மீதும், அன்பும் அருளும் புரிவாயாக!'' என்று நீர் பிரார்த்திப்பீராக!**

*(17 - 24)*

''**பெ**ற்றோரின் முகத்தை மிகப்பிரியத்தோடும், கருணை யோடும், பார்ப்பவனுக்கு, ஒரு சுன்னத்தான ஹஜ்ஜு நிறைவேற்றிய பலன் கிடைக்கும். இவ்வாறு எத்தனை தடவை பார்த்த போதிலும், அத்தனை சுன்னத்தான ஹஜ்ஜு செய்த பலன் கிடைக்கும்.'' இன்னும்:- *(நா - வா)*

**தா**ய் தந்தையரை நோவினை செய்பவனை நோக்கி ''நீ! எவ்வித வணக்கங்களைச் செய்தபோதிலும் நான் உனது பிழைகளைப் பொறுக்க மாட்டேன்,'' என்று இறைவன் கூறுகிறான்; என, நபிகள் நாயகம் (ஸல்) திருவுளமானார்கள்.

திருமறையில் இறைவன் அநேக செய்திகளை ஒன்றோடொன்று இணைத்துக் கூறியிருக்கிறான். அவற்றில் முக்கியமான மூன்று ஆயத்துகளைக் கீழேத் தருகிறோம்.

1. **''அகீமுஸ் ஸலாத்த வ ஆத்துஸ் ஸகாத்த''** தொழுங்கள் இன்னும் ஜகாத் (ஏழை வரியும்) கொடுங்கள்.

   இதிலிருந்து ''ஒருவன் தொழுகையை நிறைவேற்றியும், விதிக்கப் பட்ட ஜகாத்தைக் கொடுக்கவில்லையானால், அவனது தொழுகை ஒப்புக் கொள்ளப்படமாட்டாது'' என்று அறிகிறோம்.

2. **''அதீஉல்லாஹ வ அதீஉர் ரசூல்''** 'அல்லாஹுவுக்கும் அவனது ரசூலுக்கும் வழிபடுங்கள்.'

   இதனால் ஒருவன் அல்லாஹ்வுக்கு வழிபட்டும் ரசூலுல் லாஹ்வுக்கு வழிப்படாவிட்டால், இறைவன் அந்த வழிபாட்டை ஒப்புக் கொள்ளமாட்டான் என்று புலனாகின்றது.

3. **''அனிஷ்குர்ரலீ வலி வாலிதைக்க''**, 'நான் உன்னைப் படைத் ததற்காக எனக்கும், உன்னை வளர்த்தற்காக உன் பெற்றோருக்கும் நன்றி பாராட்டுவாயாக.'

ஒருவன் அல்லாஹுவுக்கு பக்தி செலுத்தி, தன் பெற்றோருக்கு நன்றிக்கேடு செய்தால், அல்லாஹு தனக்குச் செய்யப்பட்ட நன்றியைத் திருப்பி அவன் முகத்தில் எறிந்துவிடுவான்; என அறியக்கிடக்கின்றது.



தாய் தந்தையர் தங்கள் மக்கள் விசயத்தில் துஆச் (பிரார்த்தனை) செய்வது, ஒரு நபி தம் உம்மத் விசயத்தில் துஆச் செய்வதுபோலாகும். ஆகவே அவர்கள் துஆவை மக்களாகிய நாம் பெறுதல் வேண்டும். அன்றியும், ஒருவன் தான் தொழுத பின்னர் தனது பெற்றோருக்கு வேண்டி, **''ரப்பிர்ஹம் ஹுமா கமாரப்பயானீ ஸகீரா,''** ''இறைவனே! என்னைப் பெற்றவர்களுக்கு அன்பும் அருளும் புரிவாயாக!'' என்பதுபோன்ற துஆக்களை இரந்து கேட்டிட வேண்டும்.

மகன், தகப்பன் பெயர் சொல்லிக் கூப்பிடுவதும்; மனைவி, தன் கணவன் பெயர் சொல்லி அழைப்பதும் மக்ரூஹு. (ஆலம்கீரி)

ஒரு கல்நெஞ்சம் படைத்த எசமானனின் கீழ், ஒரு பலவீனமும் தாழ்மையுமுடைய அடியான் எவ்வாறு பணிவிடை செய்வானோ' அதைவிடவும் பணிந்து பெற்றோர் மனம் குளிரும்படி பிள்ளைகள் பணிவிடை செய்தல் வேண்டும்; தாம் செய்ய வேண்டிய பணிவிடை களை மற்றவரைக்கொண்டு நடத்தி வைப்பதைவிட, தாமே செய்வது நல்லது. அவர்கள் செய்யும் நல்லுபதேசங்களையும் ஏற்று நடப்பதோடு, அவர்களுக்குப் பணிவிடை செய்வதில் வாழ்நாளில் போதிய பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

தொழுது கொண்டிருக்கும்போது, தாய் தந்தையரில் ஒருவர் அழைத்தால், தொழுகையை விட்டு விட்டுப்போய், உடனே பதில் சொல்வது வாஜிபு என்று நான்கு மத்ஹபுகளிலும் சட்டம் இருக்கிறது. *(பர்ளான தொழுகையைத்தவிர)*

## பெற்றோரைச் சுமந்த பெரியார்

இமாம் ஹஸனுல் பஸரி (ரலி) அவர்கள் மக்காவில் ஹஜ்ஜுடைய நாளில் 'தவாபு' செய்து கொண்டிருந்தபோது, ஒரு மனிதர் ஒரு கூடையைத் தமது முதுகில் சுமந்துகொண்டு 'தவாபு' செய்வதையும் 'ஸபா மர்வா' என்ற குன்றுகளிடையே ஓடுவதையும், மற்றும் ஹஜ்ஜின் வணக்கங்கள் செய்வதையும் கண்டார்கள்.

அவரைப் பார்த்து இமாம் அவர்கள்:-

''சகோதரா! ஆண்டவன் விதித்த ஹஜ்ஜின் கடமைகளைச் செய்யும் போது, இவ்விதம் அதபுக் கேடாக சாமான் கூடையை முதுகில் சுமந்து கொண்டு திரிகின்றீரே! இது உடன்பாடாகுமா?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர்:-

"நாயகமே! நான் அதபுக் குறைவான வேலை செய்யவில்லை; இந்தக் கூடைக்குள் இருப்பது எனது வயது முதிர்ந்த தாய். அவருக்கு நான் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்தே தீரவேண்டு மன்றோ! இதுபோன்று ஏழு முறை, ஹஜ்ஜுடைய நாட்களிலும் இந்தவிதமே முதுகில் சுமந்தவனாக அவருக்கு ஹஜ்ஜுடைய பதவிகள் கிடைக்கட்டுமென்று செய்து வருகிறேன்" என்று கூறினார்.

அதற்கு அந்த இமாம் அவர்கள்:- "இதேபோன்று உம்முடைய தாயைக் கிழக்குத் திசையிலிருந்து மேற்குத் திசை வரை சுமந்து திரிந்த போதினும், அது அவருடைய கர்ப்பத்திலிருந்து நீர் வெளியாகும் போது ஒரு தரம் புரண்டிருப்பீரே! அது சமயம் அவள் அடைந்துள்ள வருத்தத்துக்குச் சமமாக மாட்டாது," என்றார்கள்.

(ரவ்னகுல் மஜாலிஸ்)

## மரணத் தறுவாயில் அல்கமா

நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் காலத்தில் 'அல்கமாவென்னும் பெயருடைய ஒரு அஸ்ஹாபி இருந்தார். அவருக்குச் சுகக்குறைவால் மரணம் அடுத்தபோது, அவரது மனைவி தனது கணவரின் நிலைமையை நாயகம்(ஸல்) அவர்களுக்குச் சொல்லி அனுப்பினாள். உடனே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிலால் (ரலி), அலி (ரலி), ஸல்மான் பார்ஸி (ரலி), அம்மார் (ரலி) ஆகிய நால்வரையும் அல்கமாவைப் பார்த்து வரும்படி அனுப்பினார்கள். அவர்கள் வந்து பார்த்தபோது, அல்கமா மரணத்தறுவாயில் இருப்பதைக் கண்டு, அவருக்கு "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி," என்ற புனித 'கலிமா' வைச் சொல்லிக் கொடுத்தனர். எனினும் அவர் நாவிலிருந்து கலிமா அறவே வெளிப்படவில்லை. இந்தச் செய்தியை நபி(ஸல்) அவர்களுக்குச் சொல்லி அனுப்ப, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்து, அவரது தாயாரைக் கூப்பிட்டு, அவரைப் பற்றியச் செய்திகளைக் கேட்ட போது, அவர் தாயார் கண்களில் நீர் சொட்ட மனோ வேதனையோடு சொன்னதாவது:-

"அல்லாஹுவின் ரசூலே! எனது மகன் அதிகமதிகம் தொழு கின்றவராகவும், நோன்பு நோற்பவராகவும், அதிகம் தர்மம் செய்பவராகவும் இருந்தார். ஆனால் அவர் தமது மனைவிக்குக் கட்டுப்பட்டு, அவள் சொல்லைச் சிரமேல் தாங்கி என்னைக் கவனியாது வருத்தப்படுத்திக் கொண்டிருந்தார். இதுதான் நடந்த



சம்பவம்," என்று கூறினாள். உடனே நபி (ஸல்) அவர்கள், "உமக்கு மாறு செய்த காரணத்தாலேயே, அவருக்கு இப்போது கலிமாச் சொல்வதற்கு நாவெழவில்லை. இந்தக்கணமே நீர் அவருடைய குற்றத்தை மன்னித்து விடுவீரேல், அவரின் முடிவு நலம் பெறும்" என்று மொழிய, அந்த அம்மாள், "நாயகமே! என் மனம் மிகவும் வருத்தமடைகின்றது; அவர் எனக்குச் செய்த அநீதியை எந்தவிதம் மறக்கமுடியும்?" என்று பதில் கூறினாள்.

இதைக்கேட்ட நபி (ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களை அழைத்து "நீங்கள் போய் போதுமான விறகுகள் கொண்டுவந்து அதில் நெருப்பு மூட்டி, இந்த அல்கமாவை நெருப்பில் தூக்கி எறிந்து விடுங்கள்," என்று கட்டளையிட்டார்கள். இந்த வார்த்தைகளை அந்த அம்மாள் கேட்டதும் மனமிரங்கி, "அல்லாஹுவின் ரசூலே.

"என் மகன் எனக்குச் செய்த குற்றங்களை மன்னித்துவிட்டேன்! ஆகவே தயவுசெய்து தாங்கள் அவ்விதம் செய்யவேண்டாம்," என்று முறையிட்டாள். நபி (ஸல்) அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். "நீர் உம் மகனை நரகத்தின் நெருப்பிலிருந்து விடுதலைபெறச் செய்தீர்," என்று ஆசீர்வதித்தார்கள்.

பின்னர் நபி (ஸல்) அவர்கள், பிலால் (ரலி) அவர்களை அனுப்பி அல்கமாவின் நிலைமையைப் பார்க்கச் சொன்னபோது, அவர் கலிமா ஷஹாதத்துச் சொல்லிக்கொண்டே நல்ல முடிவை அடைந்தார்.

நபி (ஸல்) அவர்கள் உள்பட மற்ற ஸஹாபாக்களும் நின்று அவரைக் குளிப்பாட்டித் தொழுவித்து அடக்கம் செய்தபின், நபி (ஸல்) அவர்கள் கப்ரின் அருகில் நின்று, அங்கு குழுமியிருந்த ஸஹாபாக் களைப் பார்த்து, "உங்களில் யாராவது தம் பெற்றோரைக் காட்டிலும், மனைவியைப் பெரிதாக மதித்து, பெற்றோருக்கு இடையூறு செய்தால், அவர்மீது அல்லாஹுவின் முனிவும் மலாயிக்கத்து (அமரர்)களின் முனிவு முண்டாகும். அவனுடைய பர்லான, சுன்னத்தான வணக்கங்கள் யாவும் பயனற்றதாகும்," என்று போதனை செய்தார்கள். (தன் பீஹுல் காபிலீன்)

**"அல் ஜன்னத்து தஹ்த அக்தாமில் வாலிதைன்."** என்பது நாயக வாக்கியம். இந்த உயரிய ஹதீதுக்கு ஆரிபு அப்துல் கரீம் (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:-

''தன்னைப் பெற்ற தாய் தந்தையின் பாதத்தடியில் சுவர்க்கம் இருக்கிறது.'' என நம் நபிகள் நாயகம் (ஸல்) மொழிந்திருக்க, அதற்கு விரோதமாக, அந்தத்தாய் தந்தையரை வாயில் வந்தபடி ஏசி அவர்களைச் சிரமத்திற்காளாக்குகின்ற பாதகர்காள்! உங்கள் தாய் உங்கள் கண்ணுக்கு வெறும் பெண்ணாகத் தோன்றுகின்றாளோ? அது உண்மை அன்று. 'ஆனால், அவள் ஒரு பெண் பிறவிதானே' என்று நீங்கள் சொல்லலாம். பக்கத்து வீட்டாருக்குத்தான் அவள் ஒரு பெண் பிள்ளையே அல்லாது உங்களுக்கு அவ்வாறல்ல. ஏனெனில், இந்த உலகிற்கு ஆண்டவனது ரஹ்மத், 'கஃபதுல்லாஹ்' விலிருந்து வெளியாகின்றதென்று சொல்லப் பட்டிருப்பதுபோல, ''உங்கள் பெற்றோரின் பாதங்களிலிருந்து உங்களுக்கு ''ரஹ்மத்'' என்ற பாக்கியங்கள் கிடைக்கின்றன,'' என்று சொல்லப்பட்டிருப்பதை சிந்தனை செய்து பாருங்கள். உலகிற்கு கஃபாவும், உங்களுக்குத் தாய் தந்தையருமல்லவா ரஹ்மத்தைப் பொழியும் பாக்கியங்கள்! இங்ஙனம் ரஹ்மத்தைப் பெறவேண்டிய கஃபாவைப் போன்ற கண்ணியம் மிக்க உங்கள் பெற்றோரை ஏசிப் பேசித் துரத்திவிட்டு, வேறு எங்கே இருந்து ரஹ்மத்தைப்பெறப் போகின்றீர்கள்? ரஹ்மத்தின் உறைவிடமாகிய தாய் தந்தையரை அல்லல்படுத்தக்கூடிய உங்களுக்குச் சர்வ உலகங்களின் ரஹ்மத்தாகிய நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் கிருபை வாய்க்க முடியுமா?

''பெற்றோரைக் கொடுமைப்படுத்தியோர் எதுவரை அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு விடுதலை பெறவில்லையோ அதுவரை, அவர்கள் பாதகர்கள் கூட்டத்திலேயே சேர்க்கப்படுவார்கள்.''

''எல்லாவிதப் பாவங்களிலும் அல்லாஹு தான் நாடிய பாவங்களைக் 'கியாமம்' (இறுதிநாள்) வரைப் பிற்படுத்துவான். ஆனால் பெற்றோரை நோவினை செய்த பாவத்தை மட்டும் மௌத்துக்கு முன் அனுபவிக்கச் செய்வான்.'' (நா - வா)

''ஒரு மனிதன் பெற்றோரை ஏசுதல் பெரும் பாவங்களுள் ஒன்றாகும்,'' என்று அல்லாஹுவின் திருத்தூதர் கூறியுள்ளார்கள்.

''அல்லாஹுவின் திருத்தூதரே! ஒருவன் தனது பெற்றோரை ஏசுவானோ?'' என்று (தோழர்கள்) கேட்டார்கள்; ''ஆம், தன் பெற்றோரை நிந்திப்பவன் தன் மக்களால் நிந்திக்கப்படுவான்.''

(மிஷ்காத்)



அவர்கள் இறந்த பின்னும்கூட, அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் அனந்தம் உள்ளன. அவற்றைச் சரிவரச் செய்து பாக்கியவாளராகலாம்.

ஒருவர் நமது நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்து பணிந்து நின்று, ''அல்லாஹுவின் திருத்தூதரே! என் தாய் தந்தையர் இறந்து போனார்கள்; நான் அவர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் யாவை? எனக்கு அதை அறிவியுங்கள்,'' என்று வினவியபோது, ரசூல் நாயகம் (ஸல்) பின்வருமாறு அருளினார்கள்:-

''நீவிர்! உமது பெற்றோர்களுக்காக, தொழுது பிழை பொறுக்கத் தேடுவதும், அன்னாரின் வாக்குறுதியையும், வஸியத்தையும் நிறைவேற்றுவதும், அவர்களின் நண்பர்களைக் கண்ணியப்படுத்துவதும், பந்துக்களுக்கு நன்மை செய்வதும், அவர்கள் பேரால் தானதர்மம் செய்வதுமாகும்.'' என அருளினார்கள்.

''எவன் ஒருவன் தன் தாய் தந்தையரின் போதனைகளைக் கடைப் பிடித்து ஒழுகுவதோடு, அவர்களின் கப்றுகளை சியாரத் செய்தும் வருகிறானோ? அவனது பிழையை இறைவன் பொறுத்து விடுவது மன்றி, அவன் தன் பெற்றோருக்கு நன்றி செய்தவனாகவும் ஆகின்றான்.''

ஷெய்கு அபூ அப்துல்லாஹிஸ் சாஹிது (ரஹ்) கூறுகிறார்கள்: நான் ஒரு நாள் எனது பாவா (தந்தை) அவர்களின் கப்ரு வழியே போகும்போது, அதை ஜியாரத்துச் செய்யாமல் வந்ததைப்பற்றி அன்றிரவு கனவில் தோன்றி, தங்கள் முகத்தை என்னைவிட்டும் திருப்பிக் கொண்டார்கள். இது பற்றி அவர்களிடம் நான் கேட்க, ''தகப்பனுடைய கப்ரை ஜியாரத்துச் செய்யாமல் போவது அவர்களை அவமரியாதை செய்வது மாத்திரமல்ல, நோவினை செய்வதுமாகும் என்பதை நீர் அறிய வில்லையா?'' என்றார்கள். அதற்கு நான், 'பாவா அவர்களே! நான் கப்ரின் வழியாக நடப்பதில் உங்களுக்கு நலமுண்டா?' என்றபோது 'நீர், கப்ரினுடைய எல்லைக்குள் வரும் போது உமது முகத்தை நான் பார்க்கிறேன். நீர் சியாரத்துச் செய்தால் சந்தோஷப்படுகிறேன். இல்லையேல் சலிப்படைகிறேன்'' என்றார்கள்.

(ரவ்னகுல் மஜாலிஸ்)

என்றவாறு ''உற்றார் உறவினர்களுடைய கப்ருகளையும், பெற்றோருடைய கப்ருகளையும் 'ஜியாரத்' செய்யுங்கள்;

அந்தக்கப்றுகள் வெளியூரில் இருப்பினும்சரி, நீண்டதூரம் இருப்பினும் சரி, அவர்கள் பேரால் பிரார்த்தனை புரிந்து இயன்றவரை தான தர்மம் செய்தல் மிகவும் உத்தமம்.''

''எவன் ஒருவன் கப்ருகளைக் கண்டதும் கர்வத்தால் அந்தக் கப்ராளிகளுக்கு ஸலாம் சொல்லாமலும், துஆக் கேளாமலும் நடப்பானோ? அவன் தன் இருதயத்துக்குள் வஞ்சகம் செய்தவனும் கப்ராளிகளுக்குக் கெடுதி செய்தவனும் ஆவான்.'' (நா - வா)

## ஜியாரத்துல் குபூர்

**''மரணமடைந்தோர் சகலவற்றையும் அறிகிறார்கள்.''** என்ற நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிக்கேற்ப, இங்கு மரித்தோருக்கு மரியாதை (ஜியாரத்து) செய்யும் முறைகள் கூறப்படுகின்றன.

இஸ்லாமிய வரலாற்றில் 'உஹத்' யுத்தம் மிகப் பிரதான யுத்தங்களிலொன்று. அதில் ஷஹீதான ஸய்யிதுனா ஹம்ஸா (ரலி) அவர்களை ஜியாரத்துச் செய்வதற்காக நபி பெருமான் (ஸல்) அவர்கள் உஹதிற்குச் சென்று, அவர்களது கப்ரடியில் நின்றுகொண்டு, ஸலாம் சொல்லுவார்கள். இவ்வாறு அடிக்கடி அங்கு சென்று ஜியாரத்துச் செய்துவருவது நாயகம் (ஸல்) அவர்களின் வழக்கமாக இருந்தது.

இங்ஙனம் நபிகள் நாதர் (ஸல்) அவர்கள் கப்ரை ஜியாரத்துச் செய்து வந்ததால், நாமும் கப்ருகளை ஜியாரத்துச் செய்வது சுன்னத்தாகும்.

நமது நாயகம் (ஸல்) அவர்களின் புதல்வர் ஸய்யிதுனா இப்றாஹீம் (ரலி) அவர்கள், இறைவனடி எய்திய மூன்றாம் நாள், அபூதர்ருல் கப்பாரீ (ரலி) அவர்கள் கொஞ்சம் ஒட்டகப்பாலும், சில ரொட்டிகளும், ஈத்தம் பழங்களும் கொண்டுவந்து நாயகம் (ஸல்) அவர்கள்முன் வைத்தார்கள்.

நாயகம் (ஸல்) அவர்கள 'சூரத் பாத்திஹா' ஒரு தடவையும், 'சூரத் இக்லாஸ்' மூன்று தடவையும் ஓதி, தங்கள் முபாரக்கான கையை உயர்த்தி, **''அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் அந்த பிஹா அஹ்லுன் வஹுவ லஹா அஹ்லுன்.''** என்று துஆ ஓதி, ''இறைவா! இவற்றின் பலனை என் பிள்ளை இப்றாஹீமுக்குச் சேர்த்தருள்,'' என



வேண்டிக்கொண்டார்கள். பின், அபூதர்ருல் கப்பாரீ (ரலி) அவர்களை அழைத்து, இந்தப் பால் ரொட்டி பழங்களை மக்களுக்குப் பங்கிட்டு விடும்படி ஏவினார்கள். (முல்லா அலீகாரீ)

நமதருமை ரசூல் (ஸல்) அவர்கள் வபாத்தான பின் ஹல்ரத் ஆயிஷா ஸித்தீகா நாயகி அவர்களின் வீட்டிலேயே தபன் செய்யப் பட்டார்கள்; எனவே ஆயிஷா நாயகி அவர்கள், நாயகமவர்கள் தபனுற்றிருக்கும் அறைக்குள் சென்று, முகம் திறந்த வண்ணமே 'ஸலாம்' சொல்லிவிட்டு வெளியே வருவார்கள்; அதன்பின், ஸய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் வபாத்தான பின் ஆயிஷா நாயகி அவர்கள் அதே போலவே முகந்திறந்து நின்று 'ஸலாம்' சொல்லி வந்தார்கள். பின்னர் ஸய்யிதுனா உமர் கத்தாப் (ரலி) அவர்கள் வபாத்தான பின், ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் முகத்தை மூடிக்கொண்டு அறையினுள் சென்று 'ஸலாம்' சொல்லி வந்தார்கள். இது சம்பந்தமாக ஆயிஷா நாயகியிடம் வினவப் பட்டபோது, ''நாயகம் (ஸல்) அவர்கள் முன்பாகவும், எனது தந்தை முன்பாகவும், நான் முகந்திறந்து நிற்பது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஹல்ரத் உமருப்னுல் கத்தாப் (ரலி) அவர்கள்முன் நான் முகந்திறந்து நிற்பது, நமது மார்க்கத்தில் விலக்கப்பட்டிருப்பதால், நான் முகத்தை மூடி நின்றேனெனப் பதிலுரைத்தார்கள்.'' இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளப்படுவது யாதெனில்:-

நமது நாயகம் (ஸல்) அவர்கள் ஜியாரத்தை அனுமதித்து வந்தார்கள். அதன் முறைகளை ஹல்ரத் ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள் என்பதுடன், கப்ராளிகளை ஹயாத்தானவர்களாகவே கருதவேண்டும் என்பதுமாம்.

மானத்தர்கள் பிறரின் வெட்க உறுப்புக்களைக் கண்டால், நாணமுறுவதுபோல், முகம்திறந்து ஜியாரத்துச் செய்யும் பெண் மணிகளைக் கண்டு வலிமார்கள் வெட்கப்படுகின்றனர். இது போன்ற காரணங்கள் பற்றியே ஹல்ரத் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்கள் ஜியாரத்தின் ஒழுங்குகளை நமக்குக் கற்பித்துக் கொடுத்திருக்கிறார்கள். எனவே ஜியாரத் செய்யுங்கால் ஷரீஅத்திற்கு ஒவ்வாத எந்தக் காரியமும் நிகழ்தல் கூடாததாக இருப்பதோடு, பெண்கள் திறந்த முகத்துடன் ஜியாரத்துச் செய்வதும் கூடாது. இதனால் சாதாரண உயிருள்ள மனிதர்களின் முன் நடந்துகொள்வது போன்று மரணமடைந்தோர் முன்பும் நடந்து கொள்ள வேண்டுமென்பது நன்கு விளங்குகிறது.

வலிமார்களின் கப்ருகளை ஜியாரத்துச் செய்வதற்குப் பெண்கள் சென்றால், ஆண்கள் சந்திப்பின்றி அதபுடன் செல்ல வேண்டும். ஷரீஅத்திற்கு மாற்றமான காரியங்கள் நடப்பதைக் கண்டும் வலிமார் களின் ஆன்மாக்கள் அதிக சஞ்சலமடைகின்றன. இந்த நிலைமையில் அவர்களிடம் உங்களது வேண்டுதல் பிரயோசனமளிக்காது.

''உங்கள் மவுத்தாக்களுக்கு யாஸீனை ஓதிக்கொள்ளுங்கள்.''
(நா - வா)

கப்ராளிகளுக்கு 'பாத்திஹா' 'யாஸீன்' முதலியன ஓதுவதை நபி பெருமான் (ஸல்) அவர்களின் மூலமாக, அவற்றின் நலன்களை அன்னாருக்குச் செலுத்திக் கொள்வதில் இரண்டு வகை உண்டு.

1. அவாம் (சாதாரண மனிதர்)களாகிய மவுத்தாக்களுக்கு பாத்திஹா ஓதிப் பிரார்த்தனை செய்தல். இது ஸதகாவுடைய நலனைப் போன்றதாகும். இது அவர்களுடைய கப்ரின் வேதனை குறைவ தற்கும், அவர்கள் ஈடேற்றம் பெறுவதற்கும் காரணமாகின்றது. மேலும், மவுத்தாக்கள் நாம் ஓதும் 'பாத்திஹா' (ஸதகா)வின் நலன்களை எதிர்பார்த்தவர்களாக இருக்கிறார்கள். அதாவது, குழந்தைகள் தாயை எதிர்பார்ப்பதுபோலும், இன்னும் பலவீனமான பெற்றோர்கள் தங்களின் தேவைக்காக வாலிப மக்களை அல்லது தர்ம சிந்தனை யுடைய பந்துக்கள், தனவந்தர்களை எதிர்பார்ப்பது போலுமாம். இப்படிப்பட்டோரின் தேவைகளை இந்த உலகில் பூர்த்தியாக்கிக் கொடுப்பது, அன்னோரின் கடமையாக இருப்பதுபோன்று, நலன் களை எதிர்பார்க்கும் மவுத்தாக்களுக்கும் 'பாத்திஹா' (ஸதகா)வுடைய பலனைச் செலுத்துவது நமக்கும் அவசியமாக இருக்கிறது.

2. கவாஸ்ஸுகளாகிய 'குதுபு' 'கவ்து' 'வலி' 'ஷுஹதா' 'ஸாலிஹீன்' இன்னும் இவர்களைப்போன்ற மேதைகளுக்கு, பாத்திஹா ஓதி, அதன் நலனைச் செலுத்துவது. இது அவர்களுக்குக் காணிக்கை வைப்பதாக ஆகிறது. இதைக் கொண்டு நாம் அல்லாஹுவிடம் நமது நாட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. இந்தக் காணிக்கையால் அவர்கள், நமது நாட்டங்களை இறைவன்வழி பூர்த்தியாக்கித் தரலாம், என்றாலும் நமது காணிக்கைகள், நம் தேவையின் நிமித்தமேயன்றி அவர்களது தேவைக்காக கொடுக்கப்படுவதல்ல, உதாரணமாக:- நமது தேவைக்காக பாதுசாக்கள் அல்லது பெரியோர்களைச் சந்திக்கப் போகும்பொழுது, நமது மனத்துக்கு இசைந்ததும், அவர்களைப்



பிரியப்படுத்தக் கூடியதுமான ஏதாவதொரு காணிக்கையைக் கொண்டு வைத்து, பிறகு நமது தேவையைச் சொல்லுகிறோம். இதனால் அவர்கள் நாம் வைக்கும் பொருள்களுக்குத் தேவைப் பட்டவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லமுடியுமா? அதுபோலவே வலிமார்களுக்கு ஓதப்படும் 'பாத்திஹா' நாம் வைக்கும் காணிக்கையே அன்றி வேறில்லை.

நபிமார்கள், அவ்லியாக்கள், ஸாலிஹீன்கள் ஆகியோர் மூலமாகவும், தமது நல் அமல்களின் மூலமாகவும், ஒரு முஃமினான மனிதர் அல்லாஹ்விடம் 'வஸீலா' தேடுவது, நாதாக்கள் எல்லோரி டமும் நன்மையான செயல் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வலுவான ஈமான் உள்ள ஒரு மனிதர், அவ்லியாக்களிடம் நேரடியாக உதவிக் கேட்பதும், தவ்ஹீதுக்கு உட்பட்ட ஒரு செய்கையே ஆகும். அவ்லியாக்களை சியாரத்துச் செய்வதில் மூன்று விதமிருக்கிறது, (1) அந்த அவ்லியாக்களின் பொருட்டினால், தனது தேவைகளை நிறைவேற்றும் படி அல்லாஹுவிடம் கேட்பது. (2) நீங்கள் உங்கள் மகிமையின் பொருட்டால் அல்லாஹுவிடம் துஆச் செய்து எனது தேவைகளை நிறைவேறச் செய்யுங்கள் என்று கேட்பது. (3) அவ்லியாக்களிடம் நேராகவே தேவைகளைக் கேட்பது. இவ்வாறு ஒரு முஃமின் கேட்டாலும், உண்மையில் அதை நிறைவேற்றுவது அல்லாஹ்தான் என்பதை, கேட்பவர் உணர்ந்தே இருக்கிறார். மேலும், அல்லாஹ் தன்னுடைய அவ்லியாக்களுக்கு அந்த சக்தியைக் கொடுத்தே இருக்கிறான் என்பது ஒவ்வொரு காரணங்களை வைத்து, ஒரு காரியத்தை நிறைவேற்றுவது அல்லாஹ்வின்சுன்னத்தில் (வழி முறையில்) உள்ளது என்பதும் முஸ்லிம்களுக்குத் தெரியும். இதற்காகத்தான் அல்லாஹ்வை **'முஸப்பிபுல் அஸ்பாப்'** எல்லாக் காரணங்களையும் தோற்றுவிக்கின்ற காரண கர்த்தா என்று அழைக்கப்படுகிறது.

## வஸீலத்துல் அவ்லியாஃ!

''நபிமார்கள், வலியுல்லாக்கள், ஷுஹதாக்கள் முதலியோர் மரணத்தை அனுபவித்தபோதினும், அவர்கள் உயிருள்ளவர்களே,'' என்று அல்லாஹு திருமறையில் அருளியுள்ளான். இவ்வாறே நபிகள் கோமான் (ஸல்) அவர்களும் நவின்றுள்ளார்கள். வலீ என்பதற்குப் பிரதிநிதி என்று சொல்லலாம். வலியுல்லாக்கள் சர்வ சக்தனாகிய அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருந்து, தங்கள் மறைவுக்குப்பின்,

வாழ்ந்திருப்போரின் வேண்டுதலை ஏற்றுப் பல அற்புதங்களையும் செய்து வருகின்றனர். இயற்கைக்கு மாற்றமாக, மனிதனுடைய அறிவுக்கெட்டாது, அவர்கள் திகைக்கும்படி வலியுல்லாக்களால் நிகழும் புதுமையான செயல்களுக்கு 'கராமாத்'தென்று சொல்லப் படும்.

அன்பியா அவ்லியாக்களுக்கு அல்லாஹ்வின் பக்கமிருந்து எல்லா விதமான தத்துவங்களும் உண்டாகியிருக்கின்றன. அவர்கள் ஹயாத்தோடிருக்கும்போது இருந்த தேக பலமும், பார்வையின் கூர்மையும், கேள்வியின் வலிமையும், ஆன்ம சக்தியும், உபாத்தான பின், அதிகப்பட்டு வலுவடைகின்றது. வாழ்ந்தபோது கூண்டிலடை பட்டுக்கிடந்த ஆன்மா, வபாத்துக்குப் பிறகு விடுதலை பெற்று சுதந்திரமாகின்றது. அப்போது அவர்கள் ஈருலகையும் கடுகுபோல் பார்க்கின்றார்கள். நாடிய இடங்களுக்கு நொடிப்பொழுதில் செல்கிறார்கள். அவர்கள் உயிரோடிருந்த காலங்களில் எங்ஙனம் மனிதர்களுடைய நாட்டங்களை நிறை வேற்றி வந்தார்களோ? அங்ஙனமே வபாத்துக்குப் பின்னும் செய்யும் ஆற்றலை அல்லாஹ் அவர்களுக்கு அளித்துள்ளான். அவர்கள் எங்கிருந்தபோதிலும் சரி, ஆபத்துக் காலத்தில், அவர்களது திருநாமத்தை சொல்லிக் கூப்பிடு வோருக்குக் கை கொடுத்துக் காப்பாற்றி இரட்சிக்கும் தத்துவத்தையும் அல்லாஹ் அளித்துள்ளான்.

**'அவ்லியாக்களுக்கு அல்லாஹுவின் பக்கமிருந்து குத்ரத்துடைய கை உண்டாயிருக்கின்றது. எதிர்நோக்கி வரும் அம்பைக்கூட வேறு வழியில் திருப்பிவிடக் கூடிய சக்தியையுடையவர்கள்'**, என்று மஸ்னவீ ஷரீப் முழங்குகின்றனது.

**'நான் மேற்கிலும் எனது சீடன் கிழக்கிலும் இருந்தாலும் சரி, அவரை ஒரு ஓநாய் கடிப்பது எனக்குத் தெரியும். அதில் நின்றும் அவரைக் காப்பாற்றுவேன். அத்தகைய கரம் அல்லாஹுவால் எனக்கு அளிக்கப் பட்டதேயாகும்'**, என்று தாஜுல் அவ்லியா கவ்துல் அஃலம் முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்கள் அருளி யுள்ளார்கள்.

**'நிச்சயமாக அல்லாஹுவின் அவ்லியாக்களுக்கு யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கப்படவுமாட்டார்கள்.'**

(குர்ஆன்)



'நிச்சயமாக அல்லாஹுவின் அவ்லியாக்கள் மரணிப்பதில்லை. ஆனால் அவர்கள் ஒரு இல்லத்திலிருந்து மறு இல்லத்திற்கு மாறு கின்றார்கள்.' (குதுஸி)

என்னுடைய ரஹ்மத்தான உம்மத்து (வலிமார்)கள் பால் உங்கள் தேவைகளைத் தேடிக்கொள்ளுங்கள்'.

அவ்லியாக்களின் நற்குணம்பற்றிப் பேசுமிடங்களில் அல்லாஹுவின் ரஹ்மத்து இறங்குகிறது.

எவன் என்னுடைய கபுரை ஜியாரத்துச் செய்தானோ, அவனுக்கு ஷபாஅத்துச் செய்வது என்மீது வாஜிபாகிவிட்டது.

'நபிமார்களைப்பற்றி பிரஸ்தாபம் செய்வது வணக்கங் களிலுள்ளது.' இன்னும் ஸாலிஹீன்கள் வலிமார்களைப்பற்றி பிரஸ்தாபிப்பது பாவ விமோசனத்திலுள்ளது.

செயல்களில் நீங்கள் திகைத்தவர்களாகி விடுவீர்களானால், கப்ருகளையுடையவர்களைக் கொண்டு உதவி தேடிக்கொள்ளுங்கள்' என்று குறிப்பாகக் கபுருகளைச் சுட்டிக்காட்டும் பெருமானார் (ஸல்) அவர்களின் இன்னுமொரு பொன் மொழியும் உண்டு. கபுருகளை உடையவர்கள் என்றதன் நோக்கம் அவ்லியாக்களே என்பதாக தப்ஸீர் ரூஹுல் பயானில் காணப்படுகிறது.

'மையித்து உனது பாதரட்சையின் சப்தத்தையும் கேட்கிறது.'

'எந்த மனிதர் ஜீவித்திருக்கும்போது, அவர்களைக்கொண்டு பரக்கத்தைப் பெற்றோமோ; அவ்வாறே அவர்கள் வபாத்திற்குப் பிறகும் அவர்களுடைய கப்ரை ஸியாரத்துச்செய்து பரக்கத்தைப் பெறுவது ஆகும்.' (இமாம் கஸ்ஸாலீ (ரஹ்)

வலிமார்களை நினைவு கூர்தல் அல்லாஹுவின் கிருபா கடாட்சம் (ரஹ்மத்) உண்டாகிறது. நாட்டம் தேட்டம் சித்தி பெறுகின்றன. (அபுல்காஸிம் ஜுனைதுல் பக்தாதி)

மல்லானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) தங்கள் மஸ்னவி ஷரீபில் கூறுகிறார்கள்:

ஹஸ்து குர்ஆன் ஹால ஹாயே அன்பியா
மாஹியானே பஹ்ரெ பாக்கே கிப்ரியா

வா பெ கானீ வனரகுர் ஆன்பதீர்
அன்பியாவோ அவ்லியாரா தீத் தகீர

**உரை:**

''குர்ஆன் மஜீது, அன்பியா (அலை) அவர்களது வாழ்க்கை வரலாறுகளால் நிறைந்துள்ளது. அவர்கள் அல்லாஹ்வின் பரிசுத்த அறிவுக்கடலின் மீன்களாவர்.''

''அன்றியும் நீங்கள் குர்ஆன் ஷரீபை ஓதி வந்தால், அதன்படி நடக்காதபோதினும்கூட, அன்பியா அவ்லியாக்களைத் தரிசித்த புண்ணியமாவது வாய்க்கப்பெறுவீர்கள்.'' என்பதே!

அன்பியாக்கள் எத்துணை உயரிய பதவியும், எத்துணை புகழ்பெற்ற குண விசேடங்களுமுடையவர்கள் என்பதனை அல்லாஹ்வே, அவர்களைப் பற்றி திருக் குர்ஆனில் புகழ்ந்து கூறியிருக்கிறான்.

இதிலிருந்து திருக்குர்ஆனை ஓதுவதால் கிடைக்கப்பெறும் நற்பயன்களுடன், மேலும் பெரும் நன்மையும் உண்டென்பது உறுதியாகின்றது. எவ்வாறெனில், அன்பியாக்களுடையவும், மற்றும் அல்லாஹ்வின் நல்லடியார்களுடையவும் திருநாமங்கள் நாவால் உச்சரிக்கப்படுகின்றன. அதனால் ஒரு வகையில் அன்னோரைத் தரிசித்ததுபோலாகின்றது. ''அவர்களைத் தரிசிப்பதால் அல்லாஹ்வின் ஞாபகம் வருகின்றது.'' என்ற மூதுரைக்கிணங்க, அல்லாஹ்வின் நல்லடியாரை சியாரத்துச் செய்தவன் மகிமையை உணர்ந்து கொள்ளலாம்.

மஸ்னவீ ஷரீபில் அன்பியா அவ்லியாக்களின் அற்புதங்களை மவ்லானா அவர்கள், தக்க ஆதாரங்களுடன் சிலாகித்துக் கூறியுள்ள பல செய்யுள்களைக் காணலாம். இறுதியாக:-

''மகான்களான அன்பியா அவ்லியாக்களின் மகாத்மியத்தையும், ஆதிக்கத்தையும் குறித்த இந்த விசயத்தை நான் சம்பூர்ணமாக விளக்கு தற்கு முடியாதவனாக இருக்கின்றேன். ஏனென்றால் நடுநாயகர் ஞானப் பேராசிரியரின் தலைவரான குதுபுமார்கள் தடை செய்திருக்கின்றனர்'' என்றவாறு.

(மஸ்னவீ)



அந்தோ!

திருக் குர்ஆன் வசனங்கள், ஹதீது இவைகளைத் தங்கள் போக்குக்குத் தக்கவாறு புரட்டிக் கூறும் சில சீயாக்கள், ஹிந்து ஆசிரியர்கள், யூதர், கிறிஸ்துவர், ராபிளீ, காரிஜீ, வஹ்ஹாபி, காதியானி முதலியோர். தங்கள் வகுப்பு வாதங்களுக்கு ஆதாரமாக, மஸ்னவீ செய்யுள்களை மேற்கோள் காட்டத்துணிதல் பைத்தியக் காரத்தனமேயாகும்.

மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி அவர்கள், இஸ்லாத்தின் முன்னணியில் நின்றவர். சுன்னத் வல்ஜமா அத்தைக் கடைபிடித்தவர் (ஹனபீ துறையைப் பின்பற்றியவர்) தமது அந்திய காலம்வரை, அதே நெறியில் நிலை நின்றவர் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது. இது மேற்கண்டவர்கட்குத் தெரியாமல்போவது பரிதாபமே!!

வஸீலாவைக் குறிக்கும் திருக்குர்ஆன், ஹதீதுகள், இமாம்கள், ஞானமேதைகள் ஆகியோரின் பொன்மொழிகள் பல உண்டு விரிவஞ்சி அவை விடப்பட்டது.

**எச்சரிக்கை:**

'அன்பியா அவ்லியாக்களையும், அவர்களின் கபுருகளையும் சியாரத்துச் செய்வதையும், அவர்களைக்கொண்டு உதவி தேடு வதையும், அவதூறு (இன்கார்) செய்கிறவன் எடுத்தெறியப்பட்ட ஷெய்த்தானைப் போலாவான்.' என்பதாக 11-44-வது ஆயத்தின் வியாக்கியானத்தில் தப்ஸீர் ரூஹுல் பயானில் கூறப்படுகிறது.

''எவன் என்னுடைய வலியுடன் பகைமை கொள்கின்றானோ, அவன் என்னுடன் போர் தொடுப்பதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும்'', என்று 'ஸஹீஹ் புகாரி'யில் வரும் நபி பெருமான் (ஸல்) அவர்களது தூய்மையான வாக்கையும்; இன்னும்:-

''அவ்லியாக்களை இன்கார் (அவதூறு) செய்துகொண்டு, அழிவுடைய பள்ளத்தில் விழவேண்டாம். ஏனெனில் இன்கார் செய்வது, நஞ்சு குடிப்பதாகும். அது உங்களைக் கொன்றுவிடும். இதை எங்கள் முன்னோர்கள் காலத்திலும் கண்டிருக்கிறோம்'' என்பதாக இப்னு ஹஜர் மக்கீ (றஹ்) அவர்கள், 'பதாவா', என்ற கிரந்தத்தில் மார்க்கத் தீர்ப்புக் கூறி இருப்பதையும், தீன்

மார்க்கத்துடைய அறிவாளி ஒவ்வொருவரும் கவனித்துச் செயல்பட வேண்டிய விசயங்களாகும்.

எங்கும் நிறைந்த யாஅல்லாஹ்! அன்பியா அவ்லியாக்களை இன்கார் செய்யும் பாவத்தைவிட்டும் எங்கள் அனைவரையும் காத்தருள் புரிவாயாக!! அன்றியும் வழி தவறியவர்களுக்கு நேர்வழி காட்டு வாயாக!!! ஆமீன்.

நபிகள் திலகம் 'ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம்' அவர்கள் சமூகத்தில் ஒருவர் வந்து 'அல்லாஹ்வின் திருத்தூதரே! நான் சுவனபதியின் வாசற்படியையும், ஹூருல் ஈனையும் முத்தமிட சத்தியம் செய்துகொண்டேன். இதற்குப் பரிகாரமென்ன?' என்று விண்ணப்பித்தார். அதற்கு நபிகள் கோமான் (ஸல்) அவர்கள், "உனது தாயாருடைய காலையும், தகப்பனாருடைய முகத்தையும் முத்த மிட்டுக்கொள்" என்றார்கள். அதற்கவர் 'தாய் தந்தை இல்லாவிட்டால் என்ன செய்வது?' என்றார். "உனது மாதா பிதா உடைய கபுருகளை முத்தமிடு" என்றார்கள். மீண்டுமவர், 'அந்த கபுருகளின் அடையாளங்கள் காணப்படாவிட்டால் என்ன செய்வேன்?" என்றார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இரு கோடுகளைக் கீறி ஒன்றை அன்னையின் கபுராகவும் மற்றொன்றை தந்தையின் கபுராகவும் எண்ணிக்கொண்டு நீ முத்தமிடு, உனது சத்தியத்தை முறிக்காதே என்றருளினார்கள். (கன்ஸுல் இபாது)

மவுத்தாகிப்போன பெற்றோருக்கு வேண்டிச் 'சுன்னத்து' தொழுகை ஏற்பட்டுள்ளது, அதாவது வெள்ளி, திங்கள் இரவுகளில் மக்ரிபுக்குப்பின் இரண்டு 'ரக்அத்' தொழுதல் வேண்டும். ஒவ்வொரு ரக்அத்திலும் 'அல்ஹம்து' ஸூரத் ஒருதரம், 'ஆயத்குதுஸி' முடிய 15 தரம் 'குல்ஹுவல்லாஹு அஹத்' ஸூரத் 15 தரம், 'ஸலவாத்து' 20 தரம் ஓதித் தொழுது 'ஸலாம்' வாங்கி, அந்தத்தொழுகையின் பலனை பெற்றோருக்கு (ஹத்யா) உரிமையாக்கி விடுதல் முஸ்தஹப்பு. இவ்விதம் தொழுவதால் பெற்றோருக்குச் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றி, அன்னோருக்கு நன்றி செய்தவனா கின்றான். இந்தத் தொழுகைக்கு 'ஸலாத்துல் வாலிதைன்' (பெற்றோர் களுக்காகப் பிரார்த்தனை) என்று பெயர்.

பிள்ளைகள் பெற்றோரைப் பேணும் விசயமாகக் கூறும் போது, தந்தையும் தாயும் எவ்வாறு வாழ்க்கை நடத்தி பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.



## கணவனும் மனைவியும்

வாழ்க்கைத் துணைவர்களாகிய கணவனும் மனைவியும், ஓருயிரும், ஈருடலுமாக, ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருந்து வர வேண்டும். அன்பும், பற்றும், ஒரு மனமும் கொண்டு, குடும்பத்தைச் செவ்வனே நடைபெறச் செய்ய வேண்டும். ஆண்டவன் குர்ஆனில், **"பெண்மணிகள் ஆடவர்களாகிய உங்களுக்கு உடை போன்றவர்களாவர்; நீங்களும் அந்த மாதர்களுக்கு உடைகளாவீர்கள்"** என்று கூறியிருக்கிறான். ஆகவே பெண்களின் குற்றம் குறை களையெல்லாம் ஆடவர்கள் பொருட்படுத்தாது, மார்க்க நெறி பிறழாதிருக்கப் போதனை செய்துவர வேண்டும்.

இவ்வாறே பெண்களும் ஆடவர்களின் குற்றம் குறைகளை எல்லாம் பெரிதுபடுத்தாமல், சாந்தமான முறையில் அன்னாரைக் கண்ணியப் படுத்தல் வேண்டும். தொழுகை முதலான வணக்கம், முழுக்கு, மற்றும் கடமைகளையும் நன்கு தெரிந்து செயலாற்ற வேண்டும். கணவனுக்குப் பெண்கள்மீது பல கடமைகள் இருக் கின்றன. பெண்களுக்கு வேண்டிய ஆகாரம், ஆடை, இருப்பிடம் ஆகியவற்றை வசதி செய்து கொடுப்பதும், அவர்களுடைய சிந்தனைகள் தீயவழிகளில் செல்லாத வண்ணமும், குடும்ப கௌரவம் எப்போதும் காக்கப்பட வேண்டும் என்றும் உபதேசம் புரிய வேண்டும். யாதொரு காரணமுமின்றி அன்னார்களைத் துன்புறுத் தவோ, தண்டனை கொடுக்கவோ கூடாது. பெண்கள் ஆடவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானத்தாவார்கள். ஆனால், மனைவியோ, தம் சொல்லாலும் செய்கையாலும் தம் கணவர்க்கு, கோபமும் இழிவும் விளைவிக்காத விதத்தில், இதமாக நடந்து கொள்ள வேண்டும். அவனுக்குத் தன்னாலானமட்டும் சேமத்தையும், திருப்தி யையும் விளைவித்தல் வேண்டும். அவனது சுகத்தைத் தன் சுகமாகவும், அவனது சொத்து சுதந்தரங்களையும் அவள் செவ்வனே காப்பாற்றி வைத்தல் வேண்டும். பொதுப்படையாகக் குடும்பத்தைக் கணவனது வருவாய்க்கு ஏற்றவாறு செட்டாகவும், கௌரவமாகவும் நடத்திவர வேண்டும். இன்னும் இவைபோன்ற நல்லொழுக்க வகையில் வாழ்க்கை நடத்தும் உத்தமர்களுக்குப் பிறக்கும் சிறுவர் சிறுமிகள், சிறு பிராயத்திலிருந்தே தம் பெற்றோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடக்கத் துணிகின்றனர்.

பெண்கள் கர்ப்பவதியாக இருக்கும் காலங்களில், மன நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும், நல் அமல்களில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். யாரையும் குறிப்பாக அக்கம் பக்க வீட்டாரை மனம் நோகச் செய்தல், நிந்தித்தல் போன்ற விசயங்கள் அறவே கூடாமலும், அன்னாருக்குத் தம்மாலியன்ற உதவிகளைப் புரியவும் வேண்டும். தம்பதிகளுக்கிடையே சண்டை சச்சரவுகள் இட்டுக்கொண்டும், அதன் நிமித்தம் மனவேதனை பட்டுக்கொண்டும் இருப்பதால், குடும்ப வாழ்க்கையைச் சீர்பெற நடத்த முடியாது, அதன் காரணமாக பிள்ளைகளையும்கூட நல்லமுறையில் பராமரிப்பதற்குக் குந்தகம் ஏற்பட்டுவிடும். ஆகவே இந்த உபதேசங்களை ஒவ்வொரு ஆணும் பெண்ணும் நன்குணர்ந்து நல்ல முறையில் வாழ்க்கை நடத்தும்படி ஏவப்பட்டுள்ளோம்.

## பெற்றோரின் கடமை

குழந்தையானது தாய் தந்தையருடைய கையில் அமானத்தாக இருக்கிறது. அதன் தூய மனமானது களங்கமற்ற பளிங்கு போலும், ஓர் அச்சுமுமில்லாத சுத்தமான மெழுகைப்போல் எந்தவித அச்சையும் ஏற்கக் கூடியதாகவும், நல்ல நிலத்தைப்போல் எந்த விதையை விதைத்தாலும், அந்தந்தச் செடி முளைக்கக் கூடியதுமாயுமிருக்கிறது. ஆகவே அதில் நீங்கள் நன்மை என்னும் விதையைப் போடுவீராயின், அந்தக்குழந்தை தீன் துனியாவினுடைய நற்பதவியை அடையும். தாய் தந்தையரும், கல்வியைப் புகட்டும் உஸ்தாதும் அந்த நன்மையில் பங்கு கொள்வார்கள். இதற்கு மாற்றமாகவிருந்தால் அந்தக் குழந்தை அதனால் கெட்டுவிடும். அதன் நிமித்தம் ஏற்படும் பாவமான காரியங்களில் பெரும் பகுதி தாய் தந்தையரையே சாரும். ஆகவே குழந்தைகளை வளர்த்துப் பராமரிக்கும் விசயத்தில் ஒவ்வொரு பெற்றோரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது முக்கியமாகும்.

தாய்மார்களே! நீங்கள் பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றீர்கள். ஏன்? இந்த உலகில் தோன்றிய அவ்லியாக்கள், குதுபுகள், கவ்துகள், ஸாதாத்துகள் இன்னும் ஆரிபீன்கள் என்னும் ஞான மேதைகள், வீரர்கள், தத்துவ ஞானிகள் ஆகியோர்களைப் பெற்றெடுத்து, அமுதூட்டி வளர்த்தவர்கள் உங்களைப்போன்ற தாய்மார்களன்றோ? ஆதலின் நீங்களும் அவர்களைப் போன்று நற்குணம் மிகுந்த மக்களைப் பெற்று நற்பேறு பெறுங்கள்.



''தாய்மார்களின் மடி அல்லாஹுவின் நல்லடியாராக ஆவதற்குள்ள வலையாக இருக்கின்றது. அன்றி, அது இப்லீசைப் போவதற்குள்ள வலையாகவும் ஆகிவிடுகிறது.'' என்று ஹதீஸில் காணப்படுவதால், குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு தாய் மார்களையே பெரிதும் சார்ந்தது என்பது தெளிவாகின்றது.

குழந்தைகள் பிறந்ததும் சாலிஹான வணக்கத்தர்களைக் கொண்டு, அதன் வலது காதில் 'பாங்கும்,' இடது காதில் 'இகாமத்து'ம் சொல்ல வேண்டும். இவ்வாறு செய்வது, அந்தக்குழந்தையை நோயைவிட்டும் காக்கப்படுமென்று ஹதீதில் வருகிறது. பின்பு அந்தக்குழந்தையின் வாயில் இனிப்பான வஸ்துவை அஊது, பிஸ்மி, ஹம்து, ஸலவாத்து ஓதிக் கொடுத்து, நல்ல நாமம் (பெயர்) சூட்ட வேண்டும். பிறந்த 7-ம் நாளில் அதன் தலை ரோமத்தை இறக்கி, அந்த ரோமத்தின் நிறைக்குச் சரியாக வெள்ளி அல்லது பொன் சதகாச் செய்வது சுன்னத்தாகும்.

குழந்தைக்கு அமுதூட்டும் போதெல்லாம், பரிசுத்த மனத்துடனே மகிழ்ச்சியோடு 'அஊது' 'பிஸ்மி' ஓதிக்கொள்வதும், முடிவுற்றதும் 'அல்ஹம்து லில்லாஹ்'; என்று குழந்தையின் காது கேட்கும்படி கூறவும் வேண்டும். அதை உறங்கச் செய்யும்போது ஸலவாத்து, கலிமா ஓதுவதும், இறைவன்பால் பாதுகாவல் தேடி ஓதக் கூடிய முனாஜாத்துகள், தாலாட்டு போன்ற பாக்களை இனிய குரலில் பாடி உறங்கச் செய்யவும் வேண்டும். குழந்தையைக் கோபித்துச் சினக்கவோ, அடிக்கவோ கூடாது. ஒரு ஆண்டு வரை குழந்தைகளின் அழுகையானது 'கலிமா' மொழிதல் ஸலவாத்துக் கூறல், பெற்றோர்களுக்காகப் பிரார்த்தனை புரிதல் ஆகியவைகளாகும்.

குழந்தை பிறந்த 7-ம் நாள், அல்லது 40 நாட்களுக்குள், அந்தக் குழந்தை பிறந்த கிழமையில் தாய் அல்லது தகப்பன் 'அகீகா' என்ற தர்மம் கொடுப்பது பலவந்தமான சுன்னத்தாகும். நாற்பது நாட்களுக்குப் பின்னரும் கொடுக்கலாம்.

பெண் குழந்தைக்காக ஒரு ஆடும், ஆண் குழந்தைக்காக இரண்டு, அல்லது ஒரு பெரிய ஆடும் அறுத்துக் கொடுக்க வேண்டும். ஆயிஷா ஸித்திகா (ரலி) 'அந்த ஆட்டின் எலும்புகளை முறிக்கக் கூடாது' என்று கூறியுள்ளார்கள்.

எந்தக் குழந்தையில் நன்மை இருக்கிறது என்று தெரியாத காரணத்தால், பலர் பெண் குழந்தை பிறந்தால், வெறுப்படையவும்; ஆண் குழந்தை பிறந்தால் சந்தோசப்படவும் செய்கின்றனர்.

'**பெண்** குழந்தை மிகவும் பரக்கத்துள்ளதாக இருக்கும். அதனால் உண்டாகும் பலன் அதிகமாக இருக்கின்றது. ''ஒருவனுக்கு மூன்று மகள் அல்லது மூன்று சகோதரிகள் உண்டாகியிருந்து, அவர்களுக்காக, அவர் சிரமத்தை எடுத்துக் கொள்வாராகில், அந்த இரக்கத்திற்குப் பதிலாக அல்லாஹுத்த ஆலா அவரின் மீது ரஹ்மத்துச் செய்வான்.'' என்று நமது அண்ணலெம் பெருமானார் (ஸல்) மொழிந்தபோது, அண்மையிலிருந்த ஸஹாபாக்களில் ஒருவர் 'யாரசூலல்லாஹ்' இரண்டு மக்கள் இருந்தால் எப்படி?''என்று வினவ ''இரண்டு மகளிருந்தாலும் சரியே'' என்றார்கள். மற்றொருவர், ''ஒரு மகளிருந்தாலோ?'' என்றார். அதற்கும், ''ஒரு மகளிருந்தாலும் சரியே'' என விடையளித்த பெருமானாரவர்கள், ''ஒருவனுக்கு ஒரு மகளிருந்தால் அவன் துன்புற்றவன்' என்றும், இரண்டு மகளிருந்தால் அவன் சுமை கனத்தவனென்றும் மூன்று மகளிருந்தால்....ஓ! முஸ்லிம்களே!! நீங்கள் அவனுக்கு உதவிபுரியுங்கள். இரண்டு விரல்கள் சேர்ந்திருப்பதுபோல், அவன் சுவர்க்கத்தில் என்னோடு சேர்ந்திருப்பான்'' எனத் திருவுளமானார்கள். அன்றியும் ''எவனொருவன் கடையிலிருந்து வீட்டிற்குக் கனிகள், அல்லது தின்பண்டம் ஏதாவது வாங்கிக்கொண்டு வருவது, ஸதகாவுக்குச் சமமானதாகும், அந்தத் தின் பண்டத்தில் முதலாவதாக மகளுக்கும், பிறகு மகனுக்கும் கொடுக்க வேண்டும். தன் மகளை சந்தோசப்படுத்துபவன், அல் லாஹ்வைப் பயந்து அழுதவனைப் போலாவான். அல்லாஹுவைப் பயந்தழுதவன் மீது நரகம் ஹராமாகிவிட்டது,'' எனத் திருவுள மானார்கள். 'ஸல்லல்லாஹு அலாமுஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம்.'

குழந்தைக்கு 6 வயதானால் அதபு, மரியாதைகள் போதித்து, குர்ஆன் ஷரீப் கற்பித்தல் முக்கியக் கடமையாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:-

اُطْلُبُوا الْعِلْمَ وَلَوْ بِالصِّيْنِ، فَاِنَّ طَلَبَ الْعِلْمِ فَرِيْضَةٌ
عَلٰى كُلِّ مُسْلِمٍ وَّمُسْلِمَةٍ



***''சீனா தேசம் போன்ற தூரதேசமாயினும் சென்று கல்வியைக் கற்றுக் கொள்ளுங்கள். திட்டமாகக் கல்வி கற்பதானது ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண் அடங்கல் மீதும் கடமை (பர்லு) ஆக இருக்கிறது.''***

ஆகவே நம் சிறுவர்கள் சிறு பிராயத்திலிருந்தே ஆரம்பமாக, திருக்குர் ஆன் ஓதி, அதன் உதவியால் இஸ்லாத்தின் கடமைகளுக்கு வேண்டிய (பிக்ஹு) மார்க்கச் சட்டதிட்டங்களைத் தெரிந்து, அதன்படி நல்லொழுக்க முறைகளில் அமல் செய்து, வாழ்க்கையை நடத்த வேண்டும். முதன்முதலாகச் சன்மார்க்கக் கல்வியை ஓரளவாவது கற்றுக்கொண்டதன் பின்னர்தான், மற்றையக் க்ல்விகளில் கவனம் செலுத்துதல் வேண்டும் என்று பேரறிஞர்களால் போதிக்கப் பெறுகிறோம்.

**குர்ஆனில்:-**

***''நிச்சயமாக இந்தக் குர்ஆன் (மனிதர்களுக்கு) நேரான வழியை அறிவிக்கின்றது.'' அன்றி விசுவாசம் கொண்டு நற்கருமங்களைச் செய்வோருக்கு, நிச்சயமாக மிகப் பெரிய கூலி உண்டு என்றும் நன்மாராயம் கூறுகிறது. (17:9) என்றிருப்பதால் இது விசயத்தில் பெற்றோர்கள் அசட்டையாக இருக்கக்கூடாது.***

குழந்தை பேச ஆரம்பிக்கும்போதே, 'அல்லாஹு', 'ரசூல்' ஆகிய பதங்களையும், மற்றும் நல்மொழிகளையும் சொல்லிக்கொடுத்து, நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களையும், அவர்களின் தாய், தந்தை, பாட்டனார், பூட்டனார் இவர்களின் பெயர்களைச் சொல்லிக் கொடுக்கவேண்டும். இந்தவிதம் செய்விப்பது அல்லாஹு ரசூலின் ஞாபகத்தை அதன் மனத்தில் தரிபடுத்தி, புத்துணர்ச்சியால் அந்தக் குழந்தையை தீனியத்தான பாதையில் இழுத்துச்செல்ல ஏதுவாகிறது. 7 வயதானால் படுக்கையை மாற்றியும், மார்க்க மஸ்புஅலா கற்பித்தல் வேண்டும். குழந்தைகளை ஒருவருக்கொருவர் இடம் விலகிப் படுக்கச் செய்ய வேண்டும், 7 வயதிலேயே தொழுவதற்குப் பழக்கவேண்டும். 10 வயதானபோது தொழாவிட்டால் கண்டித்துத் திருத்தவேண்டும். வாலிபப் பிராயம் அடைந்ததும், மகனுக்குத் திருமணம் செய்து வைத்து, அவனது கையைப் பிடித்து, ''மகனே! உனக்கு என்னாலியன்ற கடமைகளைச் செய்து, நிக்காஹ்வும் முடித்து வைத்தேன். இனி உலகத்திலும், அல்லாஹுவை இருதயப் பூர்வமாக

(தக்வா) பயந்து பக்திகொள். ஆகிரத்திலும் ஆண்டவனிடம் நல்பேறு பெற உதவி தேடிக்கொள்.'' என்று (நஸீஹத்) புத்திமதிகள் போதிக்க வேண்டும்.

## சன்மார்க்கச் சகோதரர்களே!

நமது சத்திய இஸ்லாத்தின் 'ஷரீஅத்' விதிவிலக்குகளை அனுட்டிக்காத மக்களின் இதயம் மாசுபடிந்து சீனதசை அடைந்து வரும் இந்தக்காலம், அன்னார் தூயமனம் அடைவதற்கு முக்கியமாக வேண்டப்படுவது:- கண்ணியமிக்க அறிவாளி (உலமா)களை அடுத்து மார்க்கப் பயன்களை கேட்டு சிந்தித்து, அதன்படி இயன்ற வரை நல் அமல்களில் ஈடுபடுவதுவும், இன்னும்:

இந்த உலகில் வாழ்ந்திருக்கும்போதே, இம்மை மறுமை உலகிற்காக எந்த எந்த அறிவு அவசியப்படுகிறதோ, அந்த அந்த அறிவை சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளைத் தழுவி, திருக் குர்ஆன், ஹதீது, முதியோருரை ஆகியவற்றை விளக்கும் இந்த 'ஹத்யா ஷரீப்' போன்ற நூல்களைப் பக்தி விசுவாசத்தோடு படித்து ஆராய்வதுவும் ஆகிய இவைகளே இதயம் சுத்தி பெற்று முக்தி அடைவதற்கான நல்வழிகளாகும்,

அன்றி களி, நடனம், காதல், நாத்திகம் முதலியன பற்றி விளக்கும் உதவாக்கரை நூல்கள், வேண்டா விசயங்கள் மலிந்த பிரசுரங்கள், அனாச்சாரத்தைப் பரப்பும் சினிமாக்கள், இவைகளைப் பார்த்தும், கேட்டும் ரசிப்பதினால் உடல் இன்பங்களில் கவர்ச்சியை உண்டாக்கி, ஆத்மீக இன்பங்களைக் கேட்கவும், படிக்கவும் விடாமல் செய்து விடுகிறது. ஆதலின் வெளிப்படையான தோற்றத்தைக் கண்டு மயங்கி தீய கருத்துக்கள், எண்ணங்கள், கொள்கைகள் அடங்கிய நூல் களையும், வேண்டா வேடிக்கைகளையும் மறந்தும் பார்க்கக்கூடாது. ஏனெனில், தீய நூல்கள், பிரச்சாரங்கள், சினிமாக்களை நல்லதென நினைத்து ரசிப்பதினால், அறிவீனமெனும் சுபாவம் மிகைத்து, அது இருதயத்தின் ஆட்சி பீடத்தில் அமர்ந்து, பொல்லாரோடு இணங்கச் செய்து, நல்லறிவையும் ஆன்மாவையும் கெடுத்து, மனிதத் தன்மையை மாற்றி விடுகிறது. அதற்கப்பால் தாம் பின்பற்றி நடந்து வந்துள்ள நல்லொழுக்கங்கள் அத்தனையும் தீயொழுக்கங்களாக மாறியும் விடுகிறது. ஆகவே, இந்த நிலை ஏற்படாமல், மனிதனை சீனதசைக்கு இழுத்துச் செல்லும் இவ்வாறான உலக இன்பங்களில்



மூழ்கி ஆழ்ந்து, அல்லாஹ், ரசூலுக்கும், சமூகத்திற்கும் விரோதியாகப் போய் விடாமல், நல்லுபதேசங்களைக் கேட்டும், அறிவைப் பெருக்கும் ஆற்றல் பெற்ற நன்னூல்களைப் படித்தும் நற்பயன் பெறுவதே நமது ஷரீஅத். இதனைப் பெற்றோரும் மற்றோரும் நன்கு சிந்தித்துச் செயல்படும்படி ஏவப்படுகிறோம்.

''பிள்ளைகள் பேரில் உபகாரமாயிருக்கும் தாய் தந்தையருக்கு அல்லாஹு ரஹ்மத்துச் செய்கிறான்.'' (நா - வா)

## பிள்ளைகளின் கடமைகள் பத்து

1. பெற்றோருக்கு உணவும் உடையும் கொடுப்பது.
2. பணிவிடை செய்வது.
3. அழைத்தால் ஜவாபு பதில் சொல்லி ஹாஜராகுவது. (தொழுகையில் இருந்தாலும் சரியே.)
4. நலவைக் கொண்டு ஏவினால் வழிபடுவது.
5. மலர்ந்த முகத்தோடு இனிய வார்த்தையாடுவது.
6. பெற்றோர்களின் பெயர்களைச் சொல்லிக் கூப்பிடாதிருப்பது.
7. அவர்களின் பந்துக்களையும் சினேகிதர்களையும் கண் ணியப் படுத்துவது.
8. அவர்கள் வழி நடக்கும்போது, பின்னால் செல்லுவது.
9. தனக்குப் பொருத்தமானதை அவர்களுக்கும் பொருத்த மாக்குவது.
10. பிழை பொறுக்கப் பிரார்த்தனை செய்வது.

முன்னர் கூறியுள்ள நற்காரியங்கள்அன்றி, இவை போன்றவை களிலும், பிள்ளைகள் சதாகாலமும் பின்பற்றி நடந்துவருதல் வேண்டும். இதுவே இறைவன் நமக்களித்த கட்டளையாகும்.

## மக்கள் பேறு

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்:

''நீங்கள் பெருகிப் விருத்தியாகும்பொருட்டு, நிகாஹ் - திருமணம் செய்யுங்கள்''. 'கியாமத்து நாளில் உங்களைக் கொண்டு மற்றும்

நபிமார்களுடைய உம்மத்துகளிடம் நான் பெருமை பேசுவேன். அது தாய் வயிற்றிலிருந்து கலைந்து விழுந்து போன சிசுவாயிருப்பினும் சரியே'' என்று அருளியுள்ளார்கள். எனவே, எவரொருவர் சந்ததி பெருகவும், அல்லாஹ்வை வணங்கவுமான இந்தக் காரியத்தில் முயற்சிக்கின்றாரோ, அவருடைய பலன் பெரிதே யாகும். இதற்காகத் தான் தகப்பனுடைய ஹக்கு பெரிதென்றும், உஸ்தாது (குரு)வுடைய உரிமை அதிலும் பெரிதென்றும் சொல்லப்பட்டது, எதற்கென்றால் பிள்ளை பிறப்பதற்குத் தகப்பன் காரணமாகவும், பிள்ளை தீன் வழி அறிவதற்கு உஸ்தாது காரணமாகவும் இருப்பதாலேயே ஆகும்.

சுன்னத்தான வணக்கங்களில் பராமுகமாக இருந்தாலும், நிகாஹ் - திருமணம் செய்வது, மேல் என்பதாக ஆரிபீன்கள் கூறுகின்றனர்.

'பிள்ளையினால் துஆக் கிடைக்கின்றது. இடைவிடாமல் எப்போதும் தவாபு கிடைத்துக் கொண்டிருக்கிறது. நலவானவைகளில் பிள்ளைகளும் ஒன்றாகும், தளர்ந்த காலத்தில் அவர்களின் உதவிகளும் கிடைக்கின்றன' என்று ஹதீதில் காணப்படுகிறது.

தகப்பனுடைய மவுத்துக்குப் பிறகு, பிள்ளையினுடைய துஆவானது, எப்போதும் தகப்பனுக்குச் சேர்ந்து கொண்டிருக்கிறது. துஆவை ஒளியினாலாகிய தட்டங்களில் வைத்து, மவுத்தானவர் களுக்குக் காட்டப் படுகிறதென்றும், அதனால் அவர்களுக்கு திருப்தி ஏற்படுகிறதென்றும் வருகிறது.

சில சமயம் தகப்பனுக்கு முன்னே பிள்ளை இறந்து விடுகிறது! அப்போது ஏற்படும் அந்த முஸீபத்துக்காக, அவன் துக்கத்தைச் சகிப்பான். பிள்ளையானது அவனுக்கு 'ஷபாஅத்து'ச் செய்யும். பிள்ளையை சுவர்க்கத்திற்குப் போகும்படி உத்தரவாகுமென்றும், அப்போது, அது தனக்குள்ளே மிகவும் துக்கம் கொண்டு, ''தாய் தந்தையரில்லாமல் நான் ஒருபோதும் சுவர்க்கம் புக மாட்டேன்'' என்று சொல்லும். என்றும் ஹதீசில் வருகிறது.

நாயகம் (ஸல்) அவர்கள் ஒருவருடைய மடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு, ''இதோ நான் உன்னை இழுப்பதுபோலவே, பிள்ளையானது தன் தாய் தந்தையரை சுவர்க்கத்திற்கு இழுத்துக் கொண்டு செல்லும்! எனக் காண்பித்தார்கள்.

**பி**ள்ளைகள் சுவர்க்கத்துடைய வாசலில் கூட்டமாகக் கூடி, ஒரே சத்தமாகத் தங்கள் தாய் தந்தையரைக் கூப்பிட்டுக் கதறி அழுவார்கள்.



அப்போது அவர்களை நோக்கி, ''நீங்கள் இந்தக் கூட்டத்தில் போய்ப் பார்த்து ஒவ்வொருவரும் தங்கள் தாய் தந்தையுடைய கையைப் பிடித்து, அவர்களை சுவர்க்கத்திற்கு அழைத்துக் கொண்டு செல்லுங்கள்'' என்று கட்டளையாகும் எனவும் நபியுல்லாஹ் அருளியுள்ளார்கள்.

குழந்தைகள் பிறந்து வாழ்ந்திருக்கும்போதும், சிறுவயதில் மரித்துப்போனபோதும், பெற்றோர்களுக்கு இவ்வளவு உயர் பதவிகள் இருக்கும்போது, சிலர் கர்ப்பத்தை அழித்துவிடுவதும், சிலர் சுயநலம் கருதிக் கற்பத்தடை செய்து கொள்வதும், உடன்பாடாகுமா? என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இந்தப் பாவச்செயல், ஆக்கவும் அழிக்கவும் வல்லமை வாய்ந்தவனும், உலகத்தார்களைப் படைத்து உணவளிப்பவனுமான அல்லாஹ்வுக்கும், அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களுக்கும் மாறு செய்வதன்றோ?

பெற்றோரைப் பேணி, இறுதிவரை அவர்களின் பணி விடைகளில் ஈடுபட்டிருப்போர், மறுமை நாளில் சுவனபதியில் தந்தையர்களுடன் பிள்ளைகளும் உல்லாச வாழ்க்கையைப் பெறுவார், என்பதற்கு திருக் குர்ஆன் சான்று பகர்கிறது:-

**''எந்த விசுவாசிகளின் சந்ததிகள் தங்கள் பெற்றோரைப் பின் பற்றி விசுவாசிக்கின்றார்களோ (அந்தச் சந்ததிகளின் நன்மைகள் குறைவாக இருந்த போதிலும், அவர்களின் பிதாக்கள் திருப்தி அடையும் பொருட்டு) அவர்களுடைய சந்ததிகளையும் அவர்களுடன் (சுவன பதியில்) சேர்த்து விடுவோம். அதனால் அவர்களுடைய பெற்றோர் களின் நன்மைகளில் ஒன்றுமே நாம் குறைத்து விடமாட்டோம். ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய செயலுக்குப் பிணையாக இருக்கின்றான்.''** *(52: 21)*

முன்காலத்தில் தாய் தந்தையர்களைப் பிள்ளைகள் துன்புறுத்தி வந்ததால், ஆண்டவன் அவர்களை உடனுக்குடன் துன்பங்களால் சோதித்தான். இது விசயமாக இறுதியில் இறைவன் தவ்ராத் வேதத்தின் மூலம் மூஸா (அலை) அவர்களுக்கு அறிவித்த வசனங்கள் வருமாறு:-

''ஆதமின் மகனே! நான் உனக்கு உன் தாய் வயிற்றில் தங்குவதற்கு இடம் தந்தேன்; கருவறையில் நீ திடுக்கிடாதிருக்கும் பொருட்டு உன் முகத்துக்குத் திரையிட்டேன்; செம்மையாகச் சாய்ந்திருக்கும் பொருட்டு உன் தாய் வயிற்றின் வலப்பக்கம் ஒரு சாய்வணையும்,

இடது பக்கம் ஒரு சாய்வணையும் சித்தம் செய்தேன்; உன் தாய் உண்ணும் உணவின் வாடை உனக்குப் படாதிருக்க வேண்டி, உன் முகத்தை, அவளது முதுகின் புறமாக ஆக்கினேன்; இன்னும் நீ உனது தாயின் வயிற்றில் நிற்கவும், இருக்கவும் போதிய வசதி செய்துகொடுத்தேன். இவ்வாறெல்லாம் செய்வதற்கு என்னைத்தவிர வேறு யாராலும் முடியுமா?

அப்பால் நீ பிறக்கும் காலம் சமீபித்ததும், உனது தாயின் கருவறையின் பாதுகாவலராகிய மலக்குக்கு உன்னை வெளியாக்கும் படி உத்தரவிட்டேன்; அந்த மலக்கின் இறகின்பேரில் உன்னை வெளியாக்கினேன். அப்பொழுது உனக்குக் கடிக்கப்பற்களில்லை; பிடிக்கக் கைகளில்லை; நடக்கக் கால்களில்லை. அது மட்டுமா? கோடையில் குளிராகவும், மாரியில் சூடாகவும் இருக்கும்படியான பாலைத் தரும் இரண்டு நரம்புகளை உனது தாயின் நெஞ்சில், சதைத் திரளில் முளைப்பித்து, அவளது இரத்தத்தை அவற்றின் வழியாக உனக்கு உணவாக அளித்தேன்.

இன்னும் உன் தாய் தந்தையர் மனத்தில், உன்மீது அன்பைப் பெருகச் செய்தேன். உனது வயிறு நிரம்பினாலொழிய, அவர்கள் புசிக்க மாட்டார்கள்; நீ உறங்கினாலொழிய அவர்கள் உறங்க மாட்டார்கள்; சில காலம் வரை அவர்கள், உனக்குப் பணிவிடை செய்வதிலேயே ஈடு பட்டார்கள்; உனக்கு நோவு வந்தால் அவர்கள் சகிக்கமாட்டார்கள். இங்ஙனமிருக்க உனது முதுகு பலமடைந்து, உனது இடை வலுத்து, நீ தக்க ஆண்மை உடையவனானபோது, என்னிடம் பயபக்தியோடு நடப்பதற்கு மாறாக, என்னுடன் போர் தொடுக்கின்றாய்! உனது மாதா பிதாக்களையும் கண்மூடித்தனமாக நோவிக்கின்றாய்! இன்னும் நான் இருக்க, என்னை நம்பாது, நான் படைத்த பொருட்கள் மீது நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றாய்! தனித்த இடத்தில் எனக்கு மாறு செய்யத் துணிகின்றாய்! கொஞ்சமும் வெட்கமோ, பயமோ கொள்கின்றாயில்லை! இவ்வாறிருக்க, நானோ நீ கூப்பிட்டால் பதில் கொடுக்கின்றேன்; நீ கேட்பதை அளிக்கின்றேன்; அன்றியும் பாவ மன்னிப்புக் கோரி நீ என் பக்கம் மீண்டுவந்தால், நான் அன்போடு சேர்த்துக் கொள்கிறேன். இதேபோன்று உன் பெற்றோர் உன்னை வெறுக்கின்றனரில்லை;'' என்று நீவிர் மக்களுக்கு எடுத்துக் கூறுவீராக.''



இறைவா! இந்தக் காலத்திலும்கூட மக்கள் தம் பெற்றோரைக் கவனிக்காமலிருப்பதோடு, துன்புறுத்தியும் வருகின்றனர். அன்னோருக்கு உனது கிருபையால் நல்லறிவைப் புகட்டியருள் வாயாக! நாங்கள் எங்கள் தாய் தந்தையருக்குத் தெரிந்தும் தெரியாமலும் செய்த பிழைகளை எல்லாம் நீ மன்னித்தருள்வாயாக! அருளாளா! எங்களால் பாவங்கள் நிகழாதபடி நீ எங்களை நல்வழியில் ß» µÆn ´ õÛ inie. **'ரப்பிர் ஹம் ஹ¬மா கமாரப்ப யானீ ஸகீரா' ஆமீன் யாரப்பல் ஆலமீன்.**

## 3 - வது ஹத்யா

## பெரிய சிறிய பாவங்களை விடுதல்

إِن تَجْتَنِبُوا كَبَائِرَ مَا تُنْهَوْنَ عَنْهُ نُكَفِّرْ عَنكُمْ سَيِّئَاتِكُمْ وَنُدْخِلْكُم مُّدْخَلًا كَرِيمًا ۝

**''உங்களுக்கு விலக்கப்பட்ட பெரும்பாவமான காரியங் களிலிருந்து நீங்கள் விலகிக்கொண்டால், உங்களுடைய (மற்ற சிறிய) பாவங்களுக்கு (அதனை) பரிகாரமாக்கி, உங்களைக் கண்ணியமான ஸ்தலத்தில் புகுத்துவோம்.'' (திருக்குர்ஆன்)**

இறைவன் திருமறையில் மூலம் எந்தப் பாவங்களுக்கு (ஹத்து) தண்டனை விதித்திருக்கிறானோ, அவைகளும், எவைகளைச் செய்யக் கூடாதென்று விலக்கியிருக்கிறானோ, அவைகளுமே பெரும் பாவங்களாம்.

லுக்மானுல் ஹகீம் (அலை) அவர்களின் மகன் தம் தந்தையைப் பார்த்து, ''நான் ஒருவரும் அறியாத தனி இடத்திலிருந்து பாவம் செய்துகொண்டிருந்தால், அதை அல்லாஹ் எப்படி அறிவான்?'' என்று கேட்டதற்கு, அவர்கள் கொடுத்த பதிலை இறைவன் கூறுகிறான்.

**''என் அருமை மகனே! (நன்மையையோ, தீமையையோ) அது ஒரு கடுகளவாயிருந்தாலும் சரி, அன்றி ஒரு பாறைக்குள்ளோ, அல்லது வானத்திலோ பூமியிலோ (மறைந்து) செய்த போதிலும் (உன்னிடம் கணக்குக் கேட்கும்போது) நிச்சயமாக, அதையும் அல்லாஹ் கொண்டு**

**வந்துவிடுவான். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் வெகு நுட்பமான அறிவுடையோனும் (யாவற்றையும்) நன்கு தெரிந்தோனுமாக இருக்கின்றான்.'' *(31 - 16)***

பாவத்தைச் சிறிதென்று நினைத்தாலும், அதை இலேசாகக் கண்டாலும், பாவம் பெரிதாகும். இந்த விதம் பெரிதென்று நினைப்பது, ஈமான், அச்சம் இவைகளால் உண்டாகின்றது. பாவத்தைச் சிறிதென்று நினைப்பது, மறதியினாலும், பாவத்தில் பிரியம் வைப்பதினாலுமே அது உண்டாகும். மனத்தைப் பாவம் எனும் இருளிலிருந்து பாதுகாக்கும்போது அந்தப் பாவம் யாதொரு துன்பமும் செய்யாது.

''ஒரு முஃமின், தன்பக்கம் சாய்ந்திருக்கிற ஒரு மலையைப் பார்த்து, அது தன்மேல் விழுந்துவிடுமோ என்று எப்போதும் கண்ணும் கருத்துமாக எப்படி, அந்த மலையைப் பார்த்துப் பயந்து கொண்டே இருக்கின்றானோ, அப்படியே தன் பாவத்தை அந்த மலைக்கு ஒப்பாக நினைக்கின்றான்.'' ''முனாபிக்கானவன் தன் பாவத்தைத் தனது மூக்கின்மேல் உட்கார்ந்து எழுந்துபோகும் ஓர் ஈயைப்போல் கருதுகின்றான்.'' (நா - வா)

***''(விசுவாசிகளே!) நீங்கள் பகிரங்கமான பாவத்தையும், இரகசியமான பாவத்தையும் விட்டுவிடுங்கள்; ஏனென்றால் எவர்கள் பாவத்தைச் சம்பாதிக்கின்றனரோ? அவர்கள், தாங்கள் செய்யும் தீவினைக்குத் தக்க பலனை (மறுமையில்) அடைந்தே தீருவார்கள்.''***
**(திருக்குர்ஆன்)**

அல்லாஹ்வுக்குப் பயந்து நடப்பதாகிய தக்வா என்ற நல்லொழுக்க மானது, அல்லாஹுத்தஆலாவுக்கு இணை வைப்பதாகிய ஷிர்க் கையும், அவனால் விலக்கப்பட்ட பாவங்களையும், தீச்செயல் களையும் விட்டு நீங்குவதைக் குறிப்பதோடு, பெரும் பாவங்கள், சிறு பாவங்கள் இவற்றிலிருந்தும் மனிதனைத் தடுத்துவிடுகின்றது.

தண்டனை விதிக்கப்பட்டுள்ள பெரும் பாவங்களாகிய 'சினா' (விப்சாரம்), களவு, குடி, கொலை இவற்றையும், இவை போன்ற வட்டி, முதலியவைகளையும் பற்றிக் குர்ஆன் கட்டளைகளையும், ரசூல் நாயகம் (ஸல்) அவர்களின் பொன்மொழிகளையும் கீழே தருகிறோம்.



## விபசாரம்

**''விபசாரம் செய்த பெண், ஆண் இந்த இருவருக்கும் தண்டனையாக தனித்தனியாக நூறு சாட்டை அடி (ஹத்து) அடியுங்கள். மெய்யாகவே நீங்கள் அல்லாஹுத்தஆலாவையும் இறுதிநாளையும் விசுவாசம் கொண்டவர்களாக இருந்தால், அல்லாஹுத்தஆலா விதித்த கட்டளையை நிறைவேற்றுவதில், அந்த இருவருடைய விஷயத்தில் உங்களுக்கு இரக்கம் ஏற்படக்கூடாது. அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் சமயத்தில் விசுவாசிகளில் பலர் அதன் சமீபம் ஹாஜராக இருக்கவும்.'' *(24 - 2)***

இந்த உலக வாழ்க்கையில் 'சினா' செய்ததற்கு இறைவன் கட்டளைப்படி தண்டிக்கப்படாவிட்டால், பரலோகத்தில். அவர்களை நெருப்புக் கசையால் ஹத்து அடிக்கப்படும்; இந்தத் தண்டனையானது திருமணம் செய்யாத அல்லது சம்போகம் செய்தில்லாதவர்களுக்குரிய தண்டனையாகும். இனி திருமணம் முடித்துக் கலவி இன்பம் நுகர்ந்தவர் களுக்குரிய தண்டனையாவது, ''அவர்களைக் கல்லால் எறிந்து மரணிக்கச் செய்யவேண்டும்'' என்பதாகும்.

சில அறிவீனர்கள் அல்லாஹுத்தஆலாவின் கட்டளைக்கு மாறாக, மிருகத் தன்மையுடையவராகக் கண்ட கண்ட பெண்களோடு நாற்கால் பிராணிகளைப் போல், மறைமுகமாகவும், பகிரங்கமாகவும் சகவாசம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அன்னவருக்கு நேரிடும் கதியைக் கவனியுங்கள்.

**''சினா (விபசாரம்) செய்வதில் ஈடுபட்டிருப்பவர்கள் தம் ஆயுள் முழுவதும் சஞ்சலமும், நோயும் குடிகொண்டு, பித்தரைப் போல் காணப்படுவதுமன்றி, மரணம் எய்திப் புதைக்குழியில் மறை வுண்டதும், மலக்குகள் தோன்றி, அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகளைக் கேட்ட பின்பு, ஆணாயிருப்பின் பெண்ணைப் போலும், பெண்ணாயிருப்பின் ஆணைப்போலும், நரகலோகத்தில் கொடிய நெருப்பால் உருவம் செய்து, அவற்றோடு அவர்களை சேர்த்து வைத்து, இன்பம் துய்க்கச் சொல்லி வேதனைப்படுத்துவார்கள். அவர்கள் அந்த வேதனைக்குப் பயந்து, அந்த நெருப்பு உருவத்தை அணுகியவுடன், மெழுகுபோல் உருகிப் போவார்கள். மலக்குகள் அன்னோரைத் திரும்ப உருவெடுக்கச் செய்வார்கள். இவ்வாறு அவர்கள் இறுதி நாள்வரை வேதனைப்பட்டுக் கொண்டேக் கிடப்பார்கள்.''** *(நா - வா)*

**'சினா'** தீமையை உண்டாக்கும்; வீட்டைப் பாழாக்கும். தனித்திருக்கத்தகாத பெண்ணோடு தனித்திருப்பது பற்றி நான் உங்களுக்கு அச்சமூட்டுகின்றேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக, செய்த்தான் புகுந்து சேட்டை பண்ணுவான். அன்றியும், கெட்ட நாற்றமுள்ள பன்றியுடன் ஒரு மனிதன் நெருங்குவது, ஒருவன் தனக்கு ஹலாலில்லாத ஒரு பெண்ணுடன் நெருங்குவதைக் காண மேலானதாயிருக்கும்.'' (நா - வா)

சயீதிப்னு ஸுபைர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:-

தாவூது (அலை) அவர்கள் தங்கள் மகனைப் பார்த்து, ''என தருமை மகனே! சினந்து எழும் சிங்கத்திற்கும், சீறி விழும் பாம்பிற்கும் பின்னாலே நீ நடந்து சென்றாலும் செல்லலாம். ஆனால் ஒரு பெண்ணின் பின்னால் செல்லாதீர்'' என்பதாகும்.

எஹியாஇப்னு சக்கரிய்யா (ரலி) அவர்களிடத்தில் 'சினா' எங்கிருந்து ஆரம்பித்து எழும்புகிறது?'' என வினவியபோது, ''அது கண்ணிலிருந்து புறப்படுவதாகும்,'' எனப் பதில் கூறினார்கள்.

**''பா**ர்வையானது இப்லீசினுடைய அம்புகளில் நின்றும் நஞ்சு ஊட்டப்பட்ட, ஒரு கொடிய அம்பாக இருக்கிறது. யாராவது ஒருவன் அல்லாஹ்வுக்குப் பயந்து, தன் கண்களைக் காத்துக் கொள்வானாகில், அவனுக்கு ஓர் ஈமானைக் கொடுக்கப்படும். அந்த ஈமானுடைய இன்பத்தை அவன் தன் மனத்திற்குள் பெற்றுக் கொள்வான்.'' இன்னும் ''எனது காலத்திற்குப்பின் என் உம்மத்தில் பித்னா (குழப்பம்) உண்டாவது பெண்களினாலேயே அன்றி வேறில்லை. வெட்க உறுப்பைப்போல, கண்ணும் சினாச் செய்யும்.'' (நா - வா)

கண்ணால் வரும் இச்சையை நீக்கிக்கொள்ள இயலாதவன், நோன்பு வைத்துக்கொள்வதும், மணம் முடித்துக் கொள்வதும் ஆகிய அடக்கு முறைகளைக் கையாளுவது வாஜிபாகும்.

★ அல்லாஹுதஆலா மனிதனுக்கு எத்தனையோ சக்திகளைக் கொடுத்திருக்கிறான். வான மண்டலத்துள் போவதற்குக்கூட வல்லமை ஏற்பட்டுவிட்டது. ஆனால், ஒரு உயிரை உண்டாக்குவதற்கு மட்டும் சக்தி கொடுக்கப்படவில்லை. ஆயின் தனது 'கலீபா'வான மனிதனுக்கு ஒரு விசேச அனுமதியின் மூலம் ஓரளவு, இந்தச்

---

★ இந்நூல், 9-ம் பக்கம் 3-வது பாராவில் குறிப்பிட்ட விளக்கத்திற்கு இது மாறுபடாது.



சக்தியைக் கொடுக்கிறான் அதாவது:- மார்க்க அனுமதியுடன் ஹலாலான முறையில், ஒரு பெண்ணுடன் சேர்ந்து குழந்தையைக் கருத்தரிக்கச் செய்ய முடியும். இந்த மார்க்க அனுமதி இல்லாமல் இந்தக் காரியத்தைச் செய்பவன் (அதாவது சினா செய்பவன்) அல்லாஹுதஆலாவோடு நேரடியாகப் போட்டி போடுகிறவன் ஆகின்றான். இதனால்தான் சினாச் செய்து உலகத்திலே முறைப்படி தவ்பாச் செய்யாமல் இறந்தால், அவன் கப்ரில் கடும் ஆக்கினைக்கு ஆளாகி, அப்பால் நரகத்தில் எவ்வளவு கால அதாபு செய்யப்பட்டு பின் சுவர்க்கம் போனாலும், அவனுக்கு அல்லாஹ்வின் தரிசனம் ஒருபோதும் கிடைப்பதே இல்லை என்பது ஆரிபீன்களின் கூற்று.

அழகுடைய சிறுவனை இச்சையோடு பார்ப்பது இழிவான செயலாகும். ஏனெனில் தம்மில் ஹலாலாக்கிக் கலந்து கொள்ள முடியாத நிலையிலிருக்கிறார்கள். முகவரை கீறாத இளம் வாலிபனைப் பார்ப்பதினால் இச்சையுண்டாகி, அதில் எவன் இன்பத்தை அடைகிறானோ? அவன், அந்த வாலிபனைப் பார்ப்பது 'ஹராம்' ஆக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய இழி செய்கையுடை யோருக்கு நேரிடும் கதியைப் பாருங்கள்:-

நபி ஈஸா (அலை) அவர்கள் ஓர் காட்டின் வழியாகச் செல்லும் போது அங்கு ஓர் வாலிபனின் சடலம் தீப் பற்றி எரிவது கண்டு, தண்ணீர் கொண்டு அதனை அணைத்தார்கள். உடனே நெருப்பு சிறுவனாகவும், வாலிபன் நெருப்பாகவும் இரண்டு பட்டனர். அது கண்டு நபி அவர்கள் ஆச்சரியமடைந்து, அதன் விபரம் அறியப் பிரார்த்தித்தார்கள். அல்லாஹ் அந்த இருவரையும் ஹயாத் தாக்கினான். அதில் ஒருவன் வாலிபனாகவும், மற்றொருவன் சிறுவனாகவும் இருப்பதைக் கண்ட ஈஸா நபி (அலை) அவர்கள் ''இந்த உலகத்தில் உங்களுடைய செய்கை என்னவாக இருந்தது? இந்த வேதனை (அதாபு)க்குக் காரணம் என்ன?'' என்று வினவியபோது அந்த வாலிபன், ''ஓ நபியே! நான் உலகத்தில் இந்தப் பையன்மேல் இச்சை வைத்தவனாக இருந்தேன்; அந்த இச்சை எங்களைக் கெடுத்துவிட்டது. நாங்கள் இறந்தபின், எங்கள் குற்றத்திற்காக அல்லாஹ் ஒருமுறை அந்தப் பையனை நெருப்பாக ஆக்குகிறான்; அந்த நெருப்பு என்னைக் கரிக்கிறது. பின்னர் என்னை நெருப்பாக ஆக்குகிறான்; நான் அவனை கரிக்கிறேன். இவ்வாறே இறுதி நாள்வரை எங்களுக்காக அதாபு நடைபெறுகிறது என்பதாக, அந்த வாலிபன் சொன்னான்; என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

''பெண் பெண்ணோடு சேர்க்கைச் செய்வதும், ஆண் ஆணோடு சேர்க்கைச் செய்வதும், சினாவைப் பார்க்கிலும் கொடியது. அதற்குத் தண்டனை இருவரையும் கத்லு (கொல்லுதல்) செய்யப்படுதல்'', என்று சொல்லப்படுகிறது.

நபி சுலைமான் (அலை) அவர்கள் இப்லீசிடம் ''உனக்கு எது மிக உவப்பானதாகவும், அல்லாஹுவிடத்தில் மிகக் கோபமானதாகவு மிருக்கிறது'' என வினவியபோது, இபுலீசு ஆர்வத்தோடு, ''ஆண் ஆணோடும், பெண் பெண்ணோடும் சேர்க்கைச் செய்வது'' எனக் கூறினான்.

***''எவன் தன் இறைவனின் சன்னதியில் (விசாரணைக்காக) நிற்பதைப் (பற்றி) பயந்து (தப்பான) சரீர இச்சையை விட்டுத் தன்னைத் தடுத்துக் கொண்டானோ? அவன் செல்லுமிடம் நிச்சயமாக சுவனபதிதான்.'' (79 - 40: 41)***

இந்த மேன்மை மிக்க இறை வசனத்திற்கிணங்க மனம் போன போக்கில் உலக ஆசாபாசங்களைத் தூண்டும் நப்ச அம்மாராவை முறியடித்து, அறிவையும் ஒழுக்கத்தையும் பெருக்கித் தன்னைப் பேணிக்கொண்ட மேதைகளின் சரித்திரம் சில இங்கு கூறுவோம்:-

## ஒரு பெண்ணின் இச்சையை உபாயத்தால் வென்றவர்

சுலைமான் பின் புஷார் (ரஹ்) அவர்கள் கூறுவதாவது:-

''நான் திரு மக்காவிற்கு புனித ஹஜ்ஜை நாடி செல்லுகையில் மதீனத்திற்கு வெளியே 'அபுவாஃ' என்ற தலத்தில் தங்கினேன். என்னோடு வந்த துணைவர் உணவுக்கு வேண்டிய சாதனங்கள் வாங்கி வரச் சென்றார். நான் தனித்திருக்கையில் சந்திரனுக்கு ஒப்பான அழகிய வதனமுடைய ஓர் அரபிப் பெண் முகம் திறந்தவளாக, ''ஓ! அழகும் ஆண்மையும் வாய்ந்த புருஷரே!!'' என்று கூறி என்முன் வந்து 'ஹீன்' என்றாள். (இதற்கு நெருங்கு என்பது பொருள்). நான் அவள் தனக்கு ஏதோ உணவு கேட்கிறாள் என நினைத்து, 'மடியை ஏந்து' என்றேன். அதற்கவள், நான் வேறு ஒன்றும் கேட்கவில்லை; உம்மைப்போன்ற வசீகர மிக்கவரிடத்தில் பெண்கள் எதை இச்சிப்பார்களோ? அதையே விரும்புகிறேன்;'' என்றாள். இதைக் கேட்டதும் நான் தலை குனிந்து



அல்லாஹுவைப் பயந்தவனாக அழத் தொடங்கினேன். இதைக் கண்ட அந்த அழகி நாணி முகத்தை மூடிக்கொண்டு திரும்பிச் சென்றாள்.

அப்பால், என் வழித்துணைவர் வந்து என் முகத்தின் மாறுதலைக் கண்டு, ''தங்களுக்கு என்ன ஏற்பட்டது?'' என வினவினார். அதற்கு நான், ''ஒன்றுமில்லை என் குழந்தைகளுடைய தேட்டம் என் மனத்துக்குள் ஏற்பட்டு கவலையினால் அழுதேன்'' என்று கூறவும், அவர், அதை நம்பாதவராக மீண்டும் வினவினார். நான் எனக்கும், அந்த அரபிப் பெண்ணுக்குமிடையில் நடந்த விருத்தாந்தத்தைக் கூறினேன். அதைக் கேட்ட அவரும் அழுதார். ''நீவிர் எதற்காக அழுகின்றீர்'' என்று கேட்க, அவர் ''நான் தனித்து இங்கு இருந்திருப்பேனாகில் எனதுகதி என்ன வாகியிருக்குமோ? என்று பயந்து அழுகிறேன்'' எனக் கூறினார்.

பின்பு அங்கிருந்து திரு மக்கா சென்று ஹஜ்ஜின் கடமைகளை எல்லாம் முடித்துக்கொண்டு, ஓரிடத்தில் உட்கார்ந்து நித்திரை செய்தோம். என் கனவில் கம்பீரமும் பெருந்தன்மையும் வாய்ந்த ஓர் மனிதரைக் கண்டு, ''நீங்கள் யார்?'' என்று வினவ, அதற்கவர், ''நான் யூஸுஃப்'' என்றார். ''தாங்கள் 'யூஸுபு' ஸித்தீகா?'' என்று கேட்க, ''ஆம்'' என்றார். அப்போது நான், ''தாங்கள் அசீசு உடைய மனைவி 'சுலைகா' நாயகியோடு நடந்துகொண்ட, தங்களின் சம்பவம் மிகப் புதுமைக்குரியது'' என்றேன். அதற்கவர்கள் ''நீர் 'அபுவாஃ' என்னுமிடத்தில் அந்த அரபிப் பெண்ணுடன் நடந்து கொண்ட விதம் அதைவிடப் புதுமையானது'' எனப் பகர்ந்தார்கள். என்னே! அல்லாஹ்வின் மீதுள்ள அச்சமும், அதனால் கிடைத்த பரிசும்.

## கலப்பு மணம்

பிற மதப்பெண்ணை மணம் செய்து ''அவள்மீது முஸ்லிம் என்ற லேபிளை ஒட்டி வைத்துக்கொள்வதை, முஸ்லிம் வாலிபர்கள் சிலர் ஒரு பெரும் தியாகமாகக் கருதுகின்றனர். ஷரீஅத்தின் முறைப்படி அது இருந்தால், இந்தத் திருமணத்தை இஸ்லாம் அனுமதிக்கிறது, என்றாலும், நமது சமுதாயத்தில், அதுவும் தனது உற்றார், உறவினரிடத்தில் எத்தனையோ பருவப் பெண்கள், மாப்பிள்ளை கிடைக்காமலும், வரதட்சிணைக் கொடுமையாலும் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் நிலையில், அதை எல்லாம் பொருட்படுத்தாமல்,

கேவலம் தம் காம உணர்வைப் பெரிதெனக் கருதி வெளிப் பெண்களை மணக்கும் இவர்களை ''முழுச் சுயநலமிகள்; சகோதர பாசமற்ற பேடிகள்'' என்று தானே கூற வேண்டும். தம் மனைவி மார்களைக் காபிர்களாகவே வைத்திருக்கும் நீசர்களைப்பற்றி இங்கு விளக்கவே தேவை இல்லை.

இந்தச் சேர்க்கை மார்க்கத்திற்கு முரண்பட்டதாக இருந்தால், அது பெரும் பாவம் (ஹராம்) இருவருக்குமேயாகும் 'சினா' உடைய 'ஹுக்கும்' விதியாகிவிடும்.

## குகைக்குள் சிக்கிய மூவர்

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:-

முன்னொரு காலத்தில் மூன்றுபேர் வியாபாரத்தின் நிமித்தம் கூட்டாகக் காட்டின் வழி வெளியூர் சென்று கொண்டிருக்கையில் மழையும் புயலும் ஏற்பட்டதுமன்றி, பொழுது சாய்ந்து அடர்ந்த இருளும் சூழத் தொடங்கியது. அச்சம் நீங்கியிருப்பதற்கு ஒதுங்கும் இடம் இல்லாமையால், சமீபமுள்ள மலை குகையினுள் சென்று தங்கினார்கள். மலையும் புயலும் விட்டபாடில்லை; இந்தநிலையில் என்ன ஏற்படுமோ? என்ற பயத்தால் சங்கடப்பட்டுக் கொண்டிருக் கையில், மலையின் மேலிருந்து ஓர் பெரிய கல் உருண்டு வந்த வேகத்தில், அந்தக் குகையின் வாசலைக் கொஞ்சமும் வழியில்லாத படி அடைத்துக் கொண்டது.

அந்தக் கல்லை அகற்றுவதற்குச் செய்த முயற்சிகள் யாவும் பயனற்றுப் போகவே, மிகவும் துக்கித்தவர்களாக, இந்த இக் கட்டிலிருந்து தப்புவதற்கு அல்லாஹுவால் அல்லாமல் வேறு வழி இல்லை என்ற முடிவிற்கு வந்தார்கள். பின்னர் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் அல்லாஹுவுக்குப் பயந்து செய்திருந்த நல்ல அமலை எடுத்துக் கூறி துஆக் கேட்டால், ஒருவேளை வழி திறக்கக்கூடும் என தீர்மானத்துக்கு வந்தனர். முதலில் அவர்களில் ஒருவர்:- யாஅல்லாஹ்! நீ எல்லாம் அறிந்தவன். என் தாய் தந்தையர் உணவருந்தும் முன்னர், நானும் என் மனைவி மக்களும் ஒரு நாளும் உணவருந்துவதில்லை! இவ்வாறிருக்க ஒரு நாள் வேலையினிமித்தம் வெளியில் போய்விட்டு வீடு திரும்ப இரவில் வெகுநேரம் ஆகிவிட்டது என் பெற்றோர்கள் நித்திரையில் ஆழ்ந்து விட்டனர். நான் ஒரு பாத்திரத்தில் கொஞ்சம்



பால் மாத்திரம் கொண்டு வந்திருந்தேன். அதை அவர்கள் விழித்தபின் கொடுப்பதற்காகக் கையில் வைத்துக் கொண்டே காத்திருந்தேன். குழந்தைகள் பசியினால் வருந்திக் கேட்டும் மனம் இடம் கொடுக்க வில்லை. பெற்றோர்கள் சுப்ஹுக்கு விழித்தனர். அதன்பின் அவர்களுக்குக் கொடுத்த பின்னரே, நானும் குழந்தைகளும் அருந்தினோம். என் ஆண்டவா! உன்னை நாடியே பெற்றோர் கடமையைப் பேணினேன் என்பதை நீ அறிவாய்; ஆதலால், எங்களுக்கு இந்த விபத்தை நிவர்த்தி செய்து வழிவிடுவாயாக!'' என்று வேண்டினார். உடனே அந்தக் கல் அசைந்து கொஞ்சம் வழி திறந்தது. ஆயினும், வெளியே வர இடம் கிடைக்கவில்லை.

இரண்டாமவர்:- ''யாரஹ்மானே! நீ சர்வமும் அறிந்த வல்லோன். எனக்கு ஒரு சிற்றப்பன் மகள் இருந்தாள்; அவளது அழகில் நான் மயங்கி ஆசித்தேன்; ஆனால்,அவள் அதற்கு உடந்தையாகவில்லை. இவ்வாறிருக்க நாட்டில் பஞ்சம் உண்டாகி, பலரும் என் உதவியை நாடினர்; அவளும் என்னை அடுத்தாள்; வேண்டும் உதவிகள் புரிந்து அவளிடம் நெருங்கினேன். அப்போது அவள் என்னை அணுகி, ''அல்லாஹுத் தஆலா வைத்த முத்திரையை, அவனுடைய அனுமதி இல்லாமல் உடைப்பது பற்றி நீர் அவனுக்குப் பயப்படவில்லையா?'' எனக் கூறினாள். உடனே ''வல்லோனே! உன்மீது எனக்கு அச்சம் பிறந்தது. அந்தக் கணத்திலிருந்தே அவள்மீதுள்ள இச்சையை விட்டும் நீங்கி விட்டேன். அவள்மீது எனக்கு இருந்த அந்த ஆசை உலகப் பொருள்கள் எதிலுமே இருந்ததில்லை; அவ்வாறிருந்தும் நான் அவளை வெறுத்தேன். என் ரப்பே! உன்னுடைய பொருத்தத் திற்காகவே நான் அந்தக் கெட்ட செயலை விட்டும் விலகினேன் என்பதை நீ அறிந்திருப்பதால், இந்த ஆபத்தை நிவர்த்தி செய்து வழிவிடுவாயாக'' எனப் பிரார்த்தித்தார். அந்தக்கல் அசைந்து மேலும் கொஞ்சம் வழிவிட்டது; அப்போதும் வெளியில் வருவதற்குப் போதிய இடவசதி உண்டாகவில்லை.

பிறகு மூன்றாமவர்:- ''யாரஹீமே! நீ அறியாத தொன்றுமில்லை! நான் ஒரு சமயம் கூலி ஆட்களை வைத்து வேலை வாங்கினேன். அதில் ஒருவர் கூலி வாங்காமல் போய்விட்டார். அவர் சில நாட்கள்வரை வராததால், அந்தக் கூலிப் பணத்திற்கு ஒரு ஆடு வாங்கி விட்டிருந்தேன்; சில வருடங்களுக்குள் அது மிகவும் பலுகிப் பெருகி ஒரு மந்தையாகி, அதன் வருவாயிலிருந்து ஏராளமான சொத்துக்கள்

சேமித்தேன். சில காலத்திற்குப் பின் அந்தக் கூலி ஆள் என்னிடம் வந்து, தான் யார் என்பதை ஞாபகப்படுத்திய பின், தமக்குக் கூலி கிடைக்கும்படி வேண்டினார். உடனே நான் மந்தையாகக் குவிந்திருந்த ஆடுகளையும், அவைகளை மேய்க்கும் அடிமையையும், மற்றும் அதில் நின்றும் சேமித்த சொத்துக்களையும் காண்பித்து, இவை யாவும் உம்முடையதே, நீர் ஒப்புக்கொள்ளும்,'' என்றேன். அதற்கவர் ''நீங்கள் என்னைக் கேலி பண்ணுகிறீர்களா? எனக்குச் செல்ல வேண்டிய கூலியை மாத்திரம் தந்தால் போதும்'' என்றார்; அதற்கு நான், ''அல்ல! அல்ல!! இவை யாவும் உமது கூலிப் பணத்திலிருந்து பெருகிய பொருட்கள்தாம்; இது உண்மை.'' எனச் சொல்லி, அவற்றை அவரிடம் ஒப்படைத்துவிட்டேன். எங்கள் ரட்சகா! உனக்காக இவ்விதம் நான் நடந்துகொண்டேன் என்று அறிந்திருப்பாய்; அதன் பொருட்டு எங்கள்மீது இரங்கி, இந்த இக்கட்டை நீக்குவாயாக!'' என இறைஞ்சினார். உடனே அந்தக்கல் முற்றும் நகர்ந்து, அகன்ற வழியாகிவிட்டது. அந்த மூவரும் மகிழ்ச்சியோடு இறைவனைப் புகழ்ந்து அந்தக் குகையிலிருந்து வெளியே வந்து ஸலாமத்துப் (விடுதலை) பெற்றார்கள்.

இதிலிருந்து பெற்றோரைப் பேணுதல், பாவத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளுதல், தன்னைப்போன்ற சகோதரனைத் தானாகவே பாவித்தல், ஆகிய இந்தக்காரியங்களை நாம் ஒவ்வொருவரும் கையாள வேண்டிய விமோசனப் பொக்கிஷமென தெரிந்து கொள்கிறோம்.

## திருட்டுக்குரிய தண்டனை

**''ஆணோ, பெண்ணோ, எவர் திருடினாலும், (இந்தத்) தீயச் செயலுக்குத் தண்டனையாக, அவர்களின் கைகளைத் துண்டித்து விடுங்கள். (இது) அல்லா (ஹ்)வினால் ஏற்படுத்தப்பட்ட தண்டனையாகும். அல்லா(ஹ்); மிகைத்தோனும், ஞானமுடையோனுமாக இருக்கின்றான்.''**

**(5: 38)**

''சினாச் செய்கின்றவன் அவன் முஃமினாக இருக்கின்ற நிலைமையில், அதைச் செய்யமாட்டான்; இன்னும் களவு செய்கின்றவன், அதைச் செய்யும்போது முஃமினாக இருக்கும் நிலைமையில் செய்வதில்லை.'' என நம் நபி பெருமானார் (ஸல்) மொழிந்துள்ளார்கள்.



ஆயிஷா ஸித்தீகா (ரலி), நாயகம் (ஸல்) அவர்களிடம் கலந்து ஆலோசிக்க உசாமா (ரலி) அவர்களைத் தூது அனுப்பி வைத்தார்கள். அப்போது ரசூல் (ஸல்) அவர்கள் உசாமாவைப் பார்த்து, ''நீவிர் அல்லா(ஹ்)வால் விதிக்கப்பட்டவைகளில் ஒரு ஹத்தை எடுத்துவிடும் படி சிபாரிசு செய்ய வந்திருக்கின்றீரா?'' என்று கேட்டுவிட்டு, குழுமியிருந்த மக்களை நோக்கி, ''மனிதர்களே! உங்கள் முன்னோர்கள் வழி கெட்டதற்குக் காரணம், வலியவன் களவு செய்தால் தள்ளி விடுவதும், எளியவன் களவு செய்தால் தண்டிப்பதும் ஆகிய பட்சபாதப் போக்கினாலேயாம். அல்லா(ஹ்) மீது சத்தியமாக, முஹம்மதின் மகள் பாத்திமா இந்தக் குற்றத்தைச் செய்திருந்தாலும், நான் அவசியம் சட்டத்தை அமுல் நடத்துவேன்,'' என்று கூறி களவு செய்த பெண் பிள்ளைக்குத் தண்டனை கொடுக்கும்படி உத்தரவிட்டார்கள். இந்த ஹதீதை வைத்து பாத்திமா நாயகி அவர்களைச் சாதாரணமாக மதிப்பிடுவது ஹராம். நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறலாம். ஆனால், நாம் அவ்வாறு கருதுவதற்கில்லை என்று நான்கு மதிப்பிற்குரிய இமாம்களும் தெளிவாக அறிவித்திருக்கின்றார்கள்.

களவு செய்தல் ஆண்டவனால் விதிக்கப்பட்ட நன்நிலைமையைக் கெடுத்து, பாக்கியத்தைக் குறைத்துவிடுகிறது.

## மது குடிப்பதால் நேரும் கதி

***''சாராயத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும், உங்களுக்கிடையில் விரோதத்தையும், வெறுப்பையும் உண்டுபண்ணி, அல்லா(ஹ்)வின் ஞாபகத்திலிருந்தும், தொழுகையிலிருந்தும், உங்களைத் தடுத்துவிடவுமே, நிச்சயமாக ஷெய்த்தான் விரும்புகிறான். (ஆகவே அவைகளிலிருந்து) நீங்கள் விலகிக் கொள்வீர்களாக?'' (மாட்டீர்களா?)***

***(5:91)***

போதை தரும் பொருள்கள் அனைத்தும், அதாவது மயக்கத்தை உண்டுபண்ணும் தன்மையுள்ள எல்லாப் பொருளுமே ஹராமாக (ஆகாததாக) இருக்கும். (நா - வா)

''மனிதன் விலங்கினத்தில் சாராது தனிச் சிறப்பு பெற்றிருப்பதற்கு அவனது புத்தியே காரணம். மதுக்குடி அந்தப்புத்தியைப் போக்கி விடுகிறது. ஆகவே மனிதன், மனித இயல்பை விட்டு

விலங்கினத்திற்குத் திரும்புதல் மிக இழிவேயன்றோ! மதுக்குடியை மேன்மையாக எண்ணிக் கொண்டிருப்பது, விலங்கினத்தில், ஒன்று தன்னை மனிதனாக எண்ணிக் கொண்டிருப்பது போன்ற முட்டாள் தனமேயாகும்''

''மரணித்த குடிகாரன் ஒருவனை புதை குழியில் அடக்கிய பின், என்னைக் கழு மரத்தில் கட்டி வைத்துவிட்டு, அவனுடைய கப்ரைத் தோண்டிப் பாருங்கள். அவனுடைய முகம் கிப்லாவுக்கு நேரே இருந்தால், என்னை அந்தக்கழுவில் ஏற்றிக் கொன்றுவிடுங்கள்.'' என இபுனு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''மதுக்குடி, பாவம் அனைத்துக்கும் தாயகமாகும்''. (நா-வா)

ஆழ்ந்த கருத்துடைய இந்த மேன்மை மிக்க ஹதீசுக்கிணங்க ஒரு சம்பவம் தத்துவார்த்தமான உதாரணமாக இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது:-

ஒரு கோட்டைக்கு 4 வாசல்கள் உண்டாகியிருந்தன. கோட்டைக்குள் நுழைவதற்கு ஒரு மனிதன் முதலாவது வாசலில் வந்தபோது, அங்கு நின்ற காவல்காரன், அவன் விக்கிரகங்களை வணங்கினால் உள்ளே விடுவதாகக் கூறினான். இரண்டாவது வாசல் காவல்காரன் அவன் கொலை செய்தால் விடுவதாகக் கூறினான். மூன்றாவது வாசல் காவல்காரன் அவன் சினாச் செய்தால் விடுவதாகக் கூறினான். நான்காவது காவல்காரன் அவன் மது குடித்தால் விடுவதாகக் கூறினான். இவற்றைக் கேட்ட அந்த மனிதன், அவற்றில் எது இலகு என்பதை யோசித்து மதுவையே இலகுவானது. என்று குடித்தான். பின்னர் மதி மயங்கி சினாச் செய்தான்; கொலையும் செய்தான்; விக்கிரகத்தையும் வணங்கினான். ஆகவே எல்லாப் பாவமும் செய்து காபிராக மடிந்தான்.

கள்ளோ, சாராயமோ ஒரு துளி குடிப்பதும்கூட ஹராமாகும்; அதனால் மயக்கம் உண்டாகாவிட்டாலும் சரியே. இமாம்களின் சொல்லின்படி, அது பெரும் பாவமாகும். அது 'ஆகும்' என்று எண்ணிக் குடிப்பவன் காபிராவான். அதைக் குடித்தவன் நாட்டாண்மை மகனாயின் அவனுக்குத் தண்டனையாக 40 அடியும், பணியாள் மகனாயின் 20 அடியும் கொடுத்தல் வேண்டும்.

சாராயமும், மனித மூத்திரமும், ஷரீஅத்துச் சட்டப்படி ஒரே தன்மையானதே. இரண்டும் நஜீஸ், உடலிலோ, துடையிலோ



பட்டால் கழுவ வேண்டும். இரண்டையும் அருந்துவது ஹராம். ஆகவே, சாராயமருந்துவோர் மனித மூத்திரத்தையே அருந்துகின்றனர் என்பதில் சந்தேகமே இல்லை.

## கொலைப் பாதகம்

**''எவனேனும், எந்தவொரு முஸ்லிமையும் (நன்கறிந்திருந்து) வேண்டு மென்றே கொலை செய்தால், அவனுக்குரிய தண்டனை நரகம்தான். அதில் அவன் (என்றென்றும்) தங்கியும்விடுவான். அவன் மீது அல்லா(ஹ்) கோபம்கொண்டு, அவனைச் சபித்தும் விடுவான். அன்றியும் மகத்தான வேதனையையும், அவனுக்குச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறான்.'' (4: 93)**

**''விசுவாசிகளே! வெட்டுப்பட்டவர்களுக்காகப் பழிவாங்குதல் உங்கள்மீது விதியாக்கப்பட்டிருக்கிறது.'' (2: 178)**

கொலை செய்தால், மரண தண்டனை நிச்சயம் என்று அறிந்த ஒருவன், தனக்கு மரண தண்டனை கண்டிப்பாய்க் கிடைக்கும் என்ற அச்சத்தால் கொலைப் பாதகம் செய்யமாட்டான். இதனால் கொலை செய்யப்படுகிறவனின் உயிரும், கொலை செய்கின்றவனின் உயிரும் காப்பாற்றப்படுகின்றன. மேலும், கொலைக் குற்றம் செய்தவன், மரண தண்டனைக்குள்ளாவதைக் காண்கின்ற மற்ற மனிதர்கள், தாங்களும் கொலைக் குற்றம் செய்யாது பேணிக்கொள்வார்கள். ஆகவே கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை விதிப்பதால் மக்களின் உயிருக்குப் பாதுகாப்பு ஏற்படுகிறது.

## வட்டி வளராது

**''அல்லா(ஹ்); வட்டியை அழித்துத் தர்மங்களை வளர்க்கின்றான். மேலும் (தன் கட்டளையை) நிராகரித்துக் கொண்டே இருக்கும் பாவிகள் யாவரையும் அல்லா(ஹ்) உவப்பதில்லை.'' (2: 276)**

வட்டியைக் கொடுப்போன், தான் மேல்மிச்சமாகக் கொடுக்கும் பணத்தை மனங்கருகியும், வேதனைப்பட்டும் கொடுக்கிறான். அந்த வேதனையானது, வட்டிக்குக் கொடுப்பவனின் முதலை மாத்திரம் அல்ல, அவனையும்கூட நாசப்படுத்தி விடுகிறது.

தர்மம் செய்வோன், தானும் தன்னைச் சார்ந்தோரும் செலவழித்து மிஞ்சியதை மனம் சந்தோசமாகக் கொடுப்பதால், அதைப்

பெறுவோன், அதைக் கொண்டு தனது கஷ்டத்தைத் தீர்த்துக் கொள்ளவும், அவசியத்தைப் பூர்த்திசெய்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைப்பதால், மனமுவந்து, மேலும் அவன் பெருகி வளம் பெறுவதற்கு மன சந்தோசத்தால் இறைவனிடம் இறைஞ்சுகின்றான்; இதுவே மேல் கண்ட திருமறையின் கருத்து.

***''விசுவாசிகளே! இரட்டித்துக்கொண்டே அதிகரிக்கக் கூடிய வட்டியை (வாங்கி)த் தின்னாதீர்கள். அல்லா(ஹ்)வுக்குப் பயந்து (அதனைத் தவிர்த்துக் கொண்டால்) நீங்கள் சித்தியடைந்தவர் களாவீர்கள்.''***
***(3: 13)***

பொருள் தேடுவதின் முக்கிய நோக்கம் உண்பதாக இருப்பதால், இந்த வாசகத்தில், இறைவன் வட்டி உண்பவரைப் பற்றிக் கூறியிருக் கின்றான். ஆகவே 'வட்டி உண்ணல்' என்றது 'வட்டித் தொழில் செய்தல்' என்பது கருத்து.

லாபம் அடைவதற்காகக் கொடுத்து வாங்கும் கடன்களெல்லாம் வட்டித் தொழிலேயாகும். எனவே ஒருவருக்கு ஒரு பொருளைக் கடனாகக் கொடுத்து, அதைப் பார்க்கினும் சிறந்த பொருளையோ, கூடுதலையோத் திரும்பத் தரவேண்டும் என்று நிபந்தனை ஏற்படுத்துவதே வட்டி, ஒத்தி, அடமானம் ஆகியவையும் வட்டியே.

வட்டிக்குப் பணம் கொடுப்பதையும், வட்டிக்குப் பணம் வாங்குபவர், அதற்குச் சாட்சியாக இருப்பவர், அதை எழுதுபவர், அதற்கு வாசகம் சொல்பவர் ஆகியோரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சபித்து லஃனத்துச் செய்திருக்கிறார்கள்.

நியாயத் தீர்ப்பு நாளில், எல்லா மனிதர்களும் உயிர்பெற்றெழும் போது, வட்டித் தொழில் செய்தவர்களும் எழுந்திருப்பார்கள். ஆனால், வட்டி உண்டதால், அவர்களது தொந்தி பெருத்து, எழுந்திருக்கச் சக்தி பெற மாட்டார்கள், பிசாசு பிடித்தவர்கள் எழுந்திருக்கும்போது தடுமாறுவது போல், அவர்கள் எழுந்திருக்கும் போது தடுமாறி விழுவார்கள். அதுவே அவர்களது அடையாளம். அந்த அடையாளத்தின் மூலமாக அவர்கள் வட்டித்தொழில் செய்தவர்களென்று மற்றவர்கள் தெரிந்து கொள்வார்கள். திருக் குர்ஆனில் இந்த விஷயம் விரிவாகக் காணப்படுகிறது:-

'ஸதகா' வளர்வதற்கும், வட்டி அழிவதற்கும் உவமையாவது: ஆடு 6 மாதத்திற்கு ஒரு முறை ஒரு ஈற்றில் சாதாரணமாக ஒரு குட்டியே



போடுகின்றது. அது ஹலாலாக்கப்பட்டிருப்பதால் உண்பவர் களெல்லாம் அதைத் தின்று வருகிறார்கள். இருந்தும், அது நசித்துவிடாது மேலும் மேலும் பெருகி, காட்டிலும், மலையிலும் மந்தை மந்தையாக வளர்ந்தோங்குகிறது. ஆனால், பன்றி, நாய் ஆகியவைகள் மூன்று அல்லது நான்கு மாதத்திற்கு ஒரு முறை நாலு, ஆறு, எட்டுப் பத்து குட்டிகள் போட்டுகின்றன, மேலும் அதை ஆட்டைப்போல் யாரும் விரும்பாதிருந்தும், அவை பெருகி வருவதாக நாம் கேள்விப்பட்டதில்லை.

ஆகவே வட்டியை உண்பது கெட்ட காலத்திற்கு அடையாள மாகும் என்பதாக அறிவிக்கப்படுகிறது.

வட்டி வாங்கியும், கொடுத்தும் பணம் சேர்ப்பவர்களுக்குச் செல்வங்கள் வந்து குவிவது போலத் தோன்றினாலும், முஸ்லிம் களுக்கு அது ஒருக் காலமும் நன்மை கொடுக்கப் போவதில்லை. மவுத்துக்கு முன் அது பிடுங்கப்பட்டுப்போகும்.

''வட்டியைச் சாப்பிடுவதுக் கொஞ்சம் கொஞ்சமாகக் கெட்ட சாவுக்கு (ஈமான் மாறியாக) இழுத்துச் செல்லும்'' என்று இமாம் இப்னு தகீகில் ஈதீ (ரஹ்) கூறியுள்ளார்கள்.

''சினாவும் வட்டியும் ஊரில் ஒரு தலத்தில் மிகுந்திருந்தால் அந்த ஊர் பாழாகியே போகும்.'' (நா - வா)

## அவதூறுக்குரிய தண்டனை

***''எவனேனும் கற்புடைய பெண்கள் மீது அவதூறு (பழிச்சொல்) கூறி, (அதற்கு வேண்டிய) நான்கு சாட்சிகளை அவன் கொண்டு வராவிட்டால், அவனை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அவன் கூறும் சாட்சியத்தை எந்தக் காலத்திலும் ஒப்புக் கொள்ளாதீர்கள். (ஏனென்றால்) நிச்சயமாக இவர்கள் பெரும் பாவிகள்.''***

***''ஆயினும் (இவர்களில்) எவரேனும், இதற்குப் பின்னர் (தங்கள் குற்றங்களிலிருந்து) விலகி பச்சாத்தாபப்பட்டு (தங்கள்) நடத்தைகளை ஒழுங்குபடுத்திக் கொண்டால், நிச்சயமாக அல்லாஹ் (அவர்களை) மன்னிப்போனும், கிருபை செய்வோனுமாக இருக்கிறான்.''*** *(24 - 4: 5)*

மேலே எடுத்துக் காட்டியதுபோல், மனிதர்கள் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமலும், செய்யத் தகாதவற்றைச் செய்து

கொண்டும் இருப்பதால், திருக் குர்ஆனில் அவற்றிற்குரிய தண்டனை களால் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. அவற்றிற்குத் திரு நபி வாக்கியங்களிலிருந்து ஆதாரங்கள் எடுத்துக் காட்டி, ஒவ்வொன்றிற்கும் உரை எழுதுவதென்றால் இந்தச்சிறு நூல் இடம் கொள்ளாது. எனவே, ஏகத்துவக் கொள்கையில் இருந்து கொண்டு பாராமுகமாகத் திரியும் மறதியாளனை பாவிகளாக்கும் அதர்மச் செயல்கள் பல, அவற்றில் மிக முக்கியமானவற்றை மட்டும் இங்கு தரப்படுகிறது.

## பெரிய சிறிய பாவங்கள்

1. அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தல்.
2. பெற்றோரை நோவினை செய்தல்.
3. தாய் தந்தையருடன் பிறந்தவர்களை நோவினை செய்தல்.
4. உறவினர்களை முறித்துக் கொள்ளுதல்.
5. அநியாயமாகக் கொலை செய்தல்.
6. கர்ப்பத்தை அழித்தல் – (கர்ப்பத் தடை செய்தல்).
7. (குப்ரு) இஸ்லாத்திலிருந்து மாறிப்போதல்.
8. ஐங்காலத்தொழுகை, ஜமாஅத்துத் தொழுகை, ரமழான் நோன்பு இவைகளைத் தங்கடமின்றி விடுதல்.
9. விதிக்கப்பட்ட ஜகாத்துக் கொடாதிருத்தல். (தர்மம்)
10. வசதியுடையோர் ஹஜ்ஜு உம்ரா செய்யாதிருத்தல்.
11. வட்டி வாங்குதலும், கொடுத்தலும் அந்தப் பொருளைக் குறித்து வாசகம் சொல்லுதல், அதை எழுதுதல், அதற்குச் சாட்சியாக இருத்தல்.
12. லஞ்சம் வாங்குவதும் வழங்குவதும்.
13. விபச்சாரம் செய்தல்.
14. பிறருடைய குறையைக் துருவித்துருவி ஆராய்வதும், தன்னுடைய குறையை மறைப்பதும்.
15. அன்னியப் பெண்ணைத் தீய எண்ணங்கொண்டு பார்த்தல்.
16. மனைவி ஹைளாகயிருக்கும்போது சேர்க்கை செய்தல்.
17. அன்னிய ஆணும் பெண்ணும் தனித்திருத்தல்.
18. ஹராமான செயல் எனத்தெரிந்தும் அதைச் செய்தல்.
19. ஜனாபத்து முழுக்கைத் தொழுகையின் வக்துவரை பிற்படுத்தல்.



20. அயலார் வீட்டில் அனுமதியின்றி நுழைதல்.
21. ஆண்களோடு உடலுறவு செய்தல்.
22. முகவரி கீறாத வாலிபனை இச்சை கொண்டு பார்த்தல்.
23. கணவன் மனைவிக்கிடையில் விரோதம் உண்டுபண்ணல்.
24. தக்க காரணமின்றி (மனைவியை) தலாக்கு - விவாகரத்துக் கூறல்.
25. அவிசுவாசிகள் முஸ்லிம்களைவிட இரு பங்கு அதிகம் இருந்தால் அன்றி, யுத்தத்தை விட்டும் ஓடுதல்.
26. சண்டைக்கு உபயோகப்படும் ஆயுதத் தளவாடங்களை காபிர்களுக்கு விற்று விடுதல்.
27. அல்லாஹ்வின் நாமத்தாலன்றி, மற்றவைகளின் நாமத்தால் சத்தியம் செய்தல்.
28. காரணமின்றி பொய் பேசுதல்.
29. புடவையைக் கால்தழைய உடுத்தல்.
30. அடுத்தவரைக் கெடுத்தல்.
31. பக்கத்து வீட்டாரை மனம் நோகச் செய்தல்.
32. வம்சத்தில் வடுவு பேசுதல்.
33. அநாதைகளின் பொருளை அபகரித்தல்.
34. எதீமை - அனாதையை ஆதரிக்காதிருத்தல்.
35. முஸ்லிம்களுக்குப் பொதுவான (பைத்துல்மால்) பொருள் களை அபகரித்தலும், வீண் விரயம் செய்தலும்
36. அமானிதத்தை மோசம் செய்தல்.
37. அநியாயம் செய்தல்.
38. வாக்குறுதிக்கு மாற்றம் செய்தல்.
39. மனிதர் நடக்கும் பாதையில் முட்கள், கற்கள், நஜீஸ் முதலியவைகளைப் போடுதல்.
40. உண்மைக்குச் சாட்சி கூற மறுத்தல்.
41. வீண் காரியத்தில் தர்க்கமிடுதல்.
42. பாவம் நிகழ்ந்ததும் தவ்பாச் செய்யாதிருத்தல்.
43. அவதூறு (பழிச்சொல்) கூறல்.
44. மற்றவரைவிட தன்னை மேலாகக் காணுதல்.
45. பிறர்மனைவியை அபகரித்தல், ஆசித்தல்.
46. தன் பிள்ளையை என் பிள்ளை அல்ல எனக்கூறல்.
47. குர்ஆனை ஓதி மறத்தல்.
48. தப்ஸீர், ஹதீது, போன்ற மார்க்க (நூல்களை) கிதாபுகளை காபிர்களுக்கு (காரணமின்றி) விற்றல்.

49. விலக்கப்பட்ட (ஹராமான)தை ஆகுமாக்குதல் (இது சரீரத்தை வருத்தும்).
50. தெரிந்த இல்மை பிறருக்குக் கற்றுக் கொடாதிருத்தல், (பகைவனானாலும் சரி).
51. கூலி ஆட்கள் மீது, அவர்கள் தாங்கும் அளவுக்கு அதிகமான சுமைகளை ஏற்றுதல்.
52. வேலையாளின் கூலியைக் கொடுக்காதிருத்தல்.
53. மார்க்கத்தில் இல்லாத காரியங்களை நூதனமாக உண்டு பண்ணுதல்.
54. பிறரைப் பரிகாசித்தலும், அவமரியாதை செய்தலும்.
55. மார்க்கத்திற்கு முரணாக நீதிக்கு மாற்றமாக நியாயம் வழங்குதல்.
56. பொய்ச் சத்தியம் (சான்று) பகர்தல்.
57. கோள் சொல்லுவதும் - கேட்பதும்.
58. ஒத்துக்கேட்டல்.
59. மிருகங்களைப் புணர்தல்.
60. அளவிலும், நிறையிலும் கூடுதல் குறைவு செய்தல்
61. தானியவிலை ஏற்றத்தால் மனமகிழ்தல்.
62. உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்து, அதிக விலைக்கு விற்றல்.
63. முகத்துதி கருதி வணங்குதல்.
64. நடனம், சங்கீதம், வீணை, வாத்தியம் அனுபவித்தல் (சினிமா உள்பட).
65. வஞ்சனை சூனியம் செய்தல்.
66. தன் குற்றம் பாராது, பிறர் குற்றம் பார்த்தல்.
67. தன் குழந்தைகளுக்குக் குர்ஆன்- மார்க்கக்கல்வி கற்பித்துக் கொடாதிருத்தல்.
68. மலஜல பாதைகளை தக்கவிதம் சுத்தம் செய்யாதிருத்தல்.
69. சுன்னத்தான ஸலாமுக்கு ஜவாபு- பதில் சொல்லாதிருத்தல்.
70. தாடியை மழுங்கச் சிறைத்தல்.
71. தலையை அசைத்து, மூக்கைச் சுளித்துக் கிண்டல் செய்தல்.
72. ஸஹாபாக்களை இகழ்தல்.
73. சகோதர சகோதரிகளின் உரிமையைக் கொடுக்காதிருத்தல்.
74. உணவு அருந்திய பின் அதைக் குறை கூறல்.
75. மரண ஒப்பாரி இடுதல்.



76. லாகிரி - போதைப் பொருள்களைப் பரிமாறுவதும், பருகுவதும்.
77. கண்ணில்லாதவன் வழி தவறும்போது, நேர் பாதை காட்டாதிருத்தல்.
78. உயிர்ப் பிராணிகளைக் காரணமின்றி தீயிலிட்டு வதைத்தல்.
79. கணவனுக்கு மனைவி மாறு செய்தல், பிணங்குதல்.
80. சோதிடம், ஆரூடம், குறி இவைகளை நம்புதல்.
81. சூதாடுதல் - வீண் விளையாட்டில் ஈடுபடுதல்
82. பிறரது (நற்குணங்களை விடுத்து) குற்றங்களைக் கூறுதல்.
83. பிறருடன் அநியாயமாகச் சண்டை செய்தல்.
84. ஹாபிஸ் (குர்ஆனை மனனம் செய்தோர்)களை தூசித்தல்.
85. சபையில் பெருமையை நாடி இடம் பார்த்து இருக்க முயலுதல்.
86. உலமாக்களை நிந்தித்தல்.
87. வெறும் பேச்சுக்களால் கோபமூட்டிக் கலகம் விளை வித்தல்.
88. அநியாயக்காரனையும், தீயோனையும், நேசித்தல்.
89. சியாரத்துச் செய்யும் கப்ரை சுஜூது, தவாபு செய்தல்.
90. ஒரு முஸ்லிமை உண்மை இன்றி அவமானப்படுத்தல் - அடித்தல் - திட்டுதல்.
91. இயற்கைக்கு மாறான வேடங்களிடுதல்.
92. பிறமதச் செய்கைகளைப்போல் நடித்தல்.
93. தீனுக்கு விரோதம் பேசுதலும், பேசுவோருக்கு உதவி செய்தலும். குர்ஆனையும், ஹதீதையும் மறுத்தல்.
94. கிப்லா (தொழும்) திசையை முன்னோக்கி மலம், ஜலம் கழித்தல்.
95. ஜும்ஆவில் மனிதர்களை இடித்து விலக்கிக்கொண்டு முன்னே செல்லுதல்.
96. ஜும்ஆவைத் தனியாகத் தொழுதல்.
97. ஜும்ஆ குத்பாவின்போது வியாபாரம் செய்தல்.
98. ருகூஉ, சுஜூதில், முரண்டாக இமாமுக்கு முந்துதல்.
99. நபிகள் கோமான் 'ஸல்லல்லாஹு அலைஹிவசல்லம்.' அவர்கள்மீது ஸலவாத்து ஓதாதிருத்தல்.
100. ஐக்கியத்தைப் பிளவுபடுத்தல்.
101. களவு, வழிப்பறி செய்தல்.

*102. பெரியோரை கண்ணியப்படுத்தாதிருத்தல்.*

*103. பெரியோர் சிறியோர்மீது இரங்காதிருத்தல்.*

இவை போன்றவைகளும், இந்தநூலில் வேறு பல இடங்களில் விளக்கப்பட்டவைகளும், சிறிதும் பெரிதுமான பாவங்களும், பல குப்ரை ஏற்படுத்தக்கூடிய செய்கைகளுமாம். அன்றியும், இந்த 103 பாவங்களில் சில பாவம், வறுமையையும் மறதியையும்கூட ஏற்படுத்தக் கூடியதே.

## மறதியையும், வறுமையையும் ஏற்படுத்துபவை

நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் வறுமையைவிட்டும் காவல் தேடி இருக்கிறார்கள். (ஹதீது) எனவே மனிதனுடைய செயல்களில் தனக்குத் தெரியாமல் நிகழ்ந்து, அதனால் வறுமையையும், மறதியையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் செய்கைகள் இன்னின்னவை என்பதைக் கீழே தருகிறோம்.

ஆடையின்றி உறங்குதல் - உறக்கத்தை மிகுதிப்படுத்தல் - வெங்காயம், வெள்ளைப்பூண்டு இவற்றின் தோலை நெருப்பிலிடுதல் - பொய் பேசுதல் - கபுருத்தலங்களில் இருந்து சிரித்தல் - புறா வளர்த்து அதனுடன் விளையாடுதல் - 'லுஹர்'வக்தில் உறங்குதல் - வெடிச்சிரிப்பு சிரித்தல் - கெக்கலி இட்டுச் சிரித்தல் - தேங்கி நிற்கும் தண்ணீர், சாம்பல் இவற்றில் சிறுநீர் பெய்து, அந்த நீரைக் கூர்மையாகப் பார்த்தல் - தன்னுடைய வெட்கத்தலத் (அவ்ரத்) தையும், மையித்தின் முகத்தையும், தூக்கில் கிடப்பவனையும் கூர்மையாகப் பார்த்தல் - 'சினா'ச் செய்தல் - ஹலாலுடன் மிகுதி 'ஜிமாஉ' செய்தல் - 'ஜுனுபாளி'யாக இருந்து உண்ணுதல், குடித்தல், உறங்குதல் - வருத்தத்துடன் விழித்துக் கொண்டிருத்தல் - கையைத் தேவையின்றி களிமண் அல்லது மண்ணில் விரவிக் கழுவுதல் - பாழான தலத்தைப் பார்த்தல் - நிர்வாணமாக மலம், ஜலம் கழித்தல் - கழிக்கச் செல்லும் போது வலது காலை முன் வைத்துப் போதல் - இடது கையால் உண்ணல், குடித்தல் - மனைவி மக்களை சாபம் 'பதுஆ'ச் செய்தல் - இரவில் வீடு பெருக்குதல் - புடவையால் பெருக்குதல் - எஞ்சிய உணவை எறிந்துவிடுதல் - உண்ணும்போது சிந்தியதைப் பழித்தல் - பெற்றோர்களுக்கு 'துஆ'ச் செய்யாதிருத்தல் - வீட்டில் குப்பை கூளங்களைப் போட்டு வைத்தல்' கிழிந்த ஆடையை அணிந்து கொண்டே தைத்தல் - மூட்டை, செல், பேன் இவைகளைக்



கொல்லாமல் விட்டுவிடுதல் - அவற்றைக் 'கபுரின்' மீது போடுதல் - அருவருப்பானவைகளை 'கபுரில்' போடுதல் - தெரிந்தும் பழைய கப்ருகளின் மீது நடத்தல்.

யாசகர்களிடம் 'ஜக்காத்து', 'பித்ரா', 'ஸதகா', 'கப்பாரத்து' களால் சேர்த்த நெல், அரிசி போன்ற தானியங்களை வாங்கி உபயோகித்தல் - எஞ்சிய உணவை பசியாளிக்குக் கொடாதிருத்தல் - மல ஜலம் கழிக்கும்போது உண்ணல், குடித்தல், மிஸ்வாக்குச் செய்தல் - பிசினை வாயிலிட்டு சுவைத்தல் - அதிகச் சூடான உணவு அருந்துதல், 'எலி, மூஞ்சுறு, பெருச்சாளி இவைகள் தின்றவற்றைப் புசித்தல், உடைந்த சீப்பு, ஈர்க்கொல்லியால் முடிவாருதல் - உடைந்த கண்ணாடியில் முகம் பார்த்தல், தொழுகை, நோன்பை அலட்சியப்படுத்தல், 'முட்டை ஓட்டின்மீது நடத்தல்,' - கபுரின் 'மீஸான்' மீது பொறிக்கப் பட்டிருப்பதைப் படித்தல்,' விளக்கைத் தேவையான நேரத்தில் பொருத்தாதிருத்தல், சிலந்தி, நூலாம்படை இவற்றின் தூசிகளை வீட்டில் படரவிடுதல் - உணவுப் பாத்திரத்தை மூடாதிருத்தல் - இரட்டைக் கதவில் ஒற்றைக் கதவின் மீது சாய்தல் - வாசல்படியில் உட்காருதல் - கூடி நிற்கும் ஆடுகளின் நடுவில் நடத்தல் - பல்லால் நகம் உரோமங்களைக் கடித்தல் - சீட்டி அடித்தல் - யாசகருக்கு இல்லை என்று கூறுதல் - மனிதர்களுக்குத் தட்டுப்பாடான சமயம் உணவு தானியங்களைப் பதுக்குதல் - பாலுடன் மீனையும் தேனில் கலந்து புசித்தல் - சீதளத்தைத்தரும் கனிகள், புளிப்பான பழங்கள், அதிகப் புளிப்புள்ளவைகளையும் அருந்துதல் - மொச்சைப் பயிறு உண்ணல் - பச்சைக் கொத்தமல்லியும், அதன் கீரையும் உண்ணல் - தகப்பன், உஸ்தாது (குரு) ஆகிய இவர்களுக்கு இடையில் சொல்லுதல் கிழட்டு ஆட்டின் இறைச்சியும் மிகக் கொழுத்த ஆட்டின் இறைச்சியும் புசித்தல் - கண்ட குச்சிகளால் புல் துலக்கல் - பிறருடைய 'மிஸ்வாக்'கை உபயோகித்தல் - இரண்டு பெண்களுக்கு நடுவில் செல்லல்.

சுண்ணாம்பினால் உடல் தேய்த்துக் குளித்தல் - அணிந்திருக்கும் புடவை, சட்டை, சட்டைக்கை இவற்றால் முகம், மேனி துடைத்தல் - புடவையைக் கால்தழைய உடுத்தல் - நிலையில் நின்று கால்சட்டை அணிதல் - இருந்து தலைப்பாகை கட்டுதல் - செருப்பு, 'ஜுத்தா போன்றவைகளை முதலில் இடது காலில் அணிந்து, பின் வலதைக் கழற்றுதல் - கறுத்த உடை அணிதல் - புறங்கை கட்டி நடத்தல் -

உட்கார்ந்திருந்து கால்களை ஆட்டுதல் - இயற்கைக்கு மாறான வேடமிடுதல் - பெண்களின் ஆடைகளை உடுத்தல் - இரு துடைகளுக் கிடையிலும், நெற்றியிலும் கையை வைத்து உறங்குதல் - 'ஸய்யிதுனா' அபூபக்கர், (ரலி) உமர் (ரலி) மற்ற சஹாபாக்களைத் திட்டுதல் வணிகத்தலங்களில் மிகுதி நேரம் தாமதித்தல் - பள்ளி வாசலில் 'சுப்ஹுத்' தொழுகைக்குப்பின் காரணமின்றி வெளி யேறுதல்- பள்ளியினுள் விரல்களைச் சொடக்கு (நெட்டி) விடுதல் - கெட்டவனை நல்லவனென்று வாழ்த்துதல் - நல்லவர்களையும் அறிவாளி (உலமாக்)களையும் தூற்றல் - நகத்தை வழக்கமாக நறுக்காமல் வளர்த்தல் - சரீரத்தில் அழுக்கைப் படியவைத்தல் ஆகியவைகளாம்.

*(மகானீ)*

இயன்ற அளவு மனத்தைக் கட்டுப்படுத்திப் பாவங்களிலிருந்தும், வறுமை, மறதிகளிலிருந்தும் விடுபட்டுக்கொள்வதே உண்மை விசுவாசி (ஆண் பெண்)களின் அடையாளமாகும்.

***(விசுவாசிகளே!)* நீங்கள் பகிரங்கமான பாவத்தையும், இரகசியமான பாவத்தையும் விட்டுவிடுங்கள். ஏனென்றால், எவர்கள் பாவத்தைச் சம்பாதிக்கின்றனரோ அவர்கள், தாங்கள் செய்யும் தீவினைக்குத் தக்க பலனை (மறுமையில்) அடைந்தே தீருவார்கள்.**

*(6: 121)*

லுக்மானுல ஹகீம் (அலை) அவர்கள் தம் மகனுக்கு உபதேசித்ததாவது: **''அருமை மகனே! நீ பாவம் செய்ய நாடினால், இறைவனும், அமரரும் காணமுடியாத இடம் பார்த்துச் செய். அங்ஙனம் ஓரிடம் கிடைக்காவிட்டால், பாவத்திலிருந்து விலகிக்கொள்.''** என்பதே

**''எவர்கள், மெய்யாகவே விசுவாசித்து, நற்கருமங்களைச் செய்கின்றார்களோ? அவர்களுக்கு, பாவ மன்னிப்பையும், மகத்தான (நற்) கூலியையும் (தருவதாக) அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்.''**

*(5: 9)*

''ஒருவன் தன்னுடைய நம்பிக்கை உறுதியாக இருக்கிறதா என்று அறிந்து கொள்ளுவதற்கு, அடையாளம் என்ன?'' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் கேட்டார்.

''**நீ**ர் செய்துள்ள ஒரு நன்மையான காரியத்திலிருந்து உமக்கு இன்பமும், நீர் செய்துவிடும் ஒரு பாவமான காரியத்திலிருந்து



உம்முடைய மனத்தில் வருத்தமும் விளையுமாயின், அப்பொழுது நீர் ஓர் உண்மையான, உறுதியுள்ளவராக இருப்பீர்.'' என்று அருளிச் செய்தார்கள். அதற்கு அவர், ''பாவமென்பதென்ன?'' என்று கேட்டார். ''ஏதேனுமொரு காரியம் உம்முடைய மனச்சாட்சியை இடிக்கும் பட்சத்தில், அதை உடனே விட்டு விடுவீராக'' என்று பெருமானார் (ஸல்) விடை பகர்ந்தார்கள்.

## 4-வது ஹத்யா
## இரகசியமாகக் கொடை கொடுத்தல்

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً
فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ○

**''*(விசுவாசிகளே!)* எவர்கள் தங்கள் பொருட்களை (தர்மத்திற்காக) இரவிலும் பகலிலும் இரகசியமாகவும், பரசியமாகவும் கொடுக்கிறார்களோ? அவர்களுடைய கூலி அன்னாரின் இறைவனிடத்தில் உண்டு. தவிர அவர்களுக்கு (மறுமையில்) யாதொரு பயமுமில்லை. அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள்.''** *(2 - 274)*

**''நீங்கள் தர்மங்களை பகிரங்கமாக்கினால் அது நலமாவதே; ஆனால் நீங்கள் அவைகளை மறைவாக எளியாருக்கு அளித்தால், அது உங்களுக்கு மிக்க நலமாகும், அன்றியும் அது உங்கள் தீமைகளில் சிலவற்றைப் பரிகரிக்கும். இன்னும் அல்லாஹு நீங்கள் செய்பவற்றை நன்குணர்கின்றவனாக இருக்கின்றான்.''** *(2 - 271)*

பகிரங்கமாகக் கொடை கொடுத்தாலும், அல்லது அந்தரங்கமாகக் கொடை கொடுத்தாலும் புண்ணியம் உண்டு. ஆனால், பெருமைக் காகவும், புகழுக்காகவும் பலரறியக் கொடை கொடுத்தால், அந்தக் கொடையாளிக்கு ஒரு புண்ணியமும் கிட்டாது.

இரகசியமாகக் கொடை கொடுப்பதில் ஏழைகளை இழிவு படுத்தாதிருக்கவும், அவனது அவசியம் எது என்று உணர்ந்து, அதற்குத் தக்கவாறு உதவவும், ஏழையல்லாதார் வந்து அடுக்காம லிருக்கவும், கொடுப்போர் தம்மைப்பற்றி கர்வமுண்டாகா மலிருக்கவும் ஏதுவாகிறது. இதனாலேயே தான், முற்காலத்தில்

வாழ்ந்த வள்ளல்கள், தானதர்மத்தை இரகசியமாகச் செய்து வந்தனர். சிலர், பிறர் தங்களை அறிந்துகொள்ள முடியாத விதத்தில் கொடை கொடுத்து வந்தனர். சிலர், ஏழைகள் நித்திரை செய்யும் சமயம் பார்த்து, அவர்களது ஆடையில் பணத்தை, யாரும் அறியாத விதத்தில் கட்டி வைத்துச் சென்றனர். மற்றும் சிலர், ஏழைகள் தங்கும் இடங்களில் பண முடிப்பை வைத்துப் போயினர். இந்தவிதமாகக் கொடுப்பவரை, வாங்குவோரும், மற்றோரும் அறிந்து கொள்ள முடியாத விதத்தில் முற்காலத்தில் ஈகை கொடுக்கப்பட்டு வந்தது. இதற்கு நாயகம் (ஸல்) அவர்கள்:-

"**பு**கழை விரும்பிக் கொடுப்போர், பிறர் மெச்சவேண்டிக் கொடுப்போர், தாம் கொடுப்பதைச் சொல்லிக் காட்டுவோர், ஆகியவர்களின் தர்மம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது." என்று திருவாய் மலர்ந்திருப்பதே காரணம்.

மேற்கண்ட வகைகள் எதிலும் சேர்ந்து விடாதிருக்கவே, நம் முன்னோர்கள் தங்கள் கொடைகளை இரகசியமாகக் கொடுத்து வந்தனர். ஆனால், ஒருவர் கொடை கொடுப்பதைப் பார்த்து, மற்றவரும் கொடை கொடுப்பார் என்றிருந்தால், அப்படிப்பட்டவர் செய்யும் கொடைகள், நன்மை பயக்கத்தக்கதாகும். இந்த இருவகைக் கொடைகளைப் பற்றியே மேற்கூறிய திருமறை வசனம் அறிவுறுத்துகிறது.

"**த**ர்மத்தில் சிறந்தது இடதுகைக்குத் தெரியாமல் வலது கையால் கொடுப்பதுதான். இரகசியமாகச் செய்யும் தர்மந்தான் ஆண்டவனுடைய கோபத்தைத் தணிக்கும். (நா - வா)

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமை (பர்ளு)களில் ஒன்று, ஜக்காத்து. (ஏழைகளுக்காக செலுத்தும் கட்டாய வரி),

## ஜக்காத்தின் தன்மை

தொழுகைக்கு எப்படி வெளிரங்கமான ஒரு உருவமும், அந்தரங்கமான ஒரு உயிருமிருக்கின்றதோ, அதேபோன்று 'ஜக்காத்துக்கும் ஒரு உருவமும் உயிருமிருக்கின்றது. ஜக்காத்தின் உயிரான அந்த, அந்தரங்கத்தை எவர் அறியவில்லையோ? அவரின் 'ஜக்காத்து' பிணம்போல் உயிரில்லா உருவமாகும். எடுத்துக்காட்டு:-



அல்லாஹுத் தஆலாவின் மேல் பிரியம் வைக்கும்படி எல்லோருக்கும் கட்டளை இடப்பட்டிருக்கிறது. தனக்கு அல்லாஹுவின்மீது பிரியமுண்டு என்று சொல்லாத முஃமின் ஒருவரும் இருக்கமாட்டார். மேலும், எந்தப் பொருளையும் அல்லாஹ்வைக் காட்டிலும் அதிகமாக உவந்துகொள்ள வேண்டாம் என்று முஸ்லிம்களுக்கு உத்தரவு செய்யப் பட்டிருக்கிறது.

(நபியே! விசுவாசிகளை நோக்கி) **நீர் கூறும். உங்களுடைய தந்தைகளும், உங்களுடைய மக்களும், உங்களுடைய குடும்பங்களும், நீங்கள் சம்பாதித்து வைத்திருக்கும் (உங்கள்) பொருள்களும், நஷ்டமாகிவிடுமோ என நீங்கள் பயந்து (மிக எச்சரிக்கையுடன்) செய்துவரும் வர்த்தகமும், உங்களுக்கு மிக்க விருப்பமுள்ள (உங்கள்) வீடுகளும்; அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும்விடவும், அல்லாஹ்வுடைய பாதையில் யுத்தம் புரிவதைவிடவும் உங்களுக்கு மிக்க விருப்பமானவை களாகயிருந்தால், (நீங்கள் உண்மை விசுவாசிகளல்லர். நீங்கள் அடையவேண்டிய தண்டனையைப்பற்றி) அல்லாஹ்வுடைய கட்டளை வரும்வரையில் நீங்கள் எதிர்பார்த்திருங்கள்.**

**(9 - 24)**

ஒவ்வொரு முஃமினும் தனக்கு எல்லாப் பொருளின் மீதுமுள்ள பிரியத்தைக் காட்டிலும், அல்லாஹ்வின் மீதுள்ள பிரியம் அதிகம் என்று சாதிக்கின்றான். அந்தச் சாதிப்பின்படியே உண்மையில் தனக்கு அல்லாஹுவின் பிரியம் உண்டென்றும் எண்ணிக்கொள்கின்றான். ஆதலால், ஒவ்வொருவரும் அந்த ஆதாரமற்ற சாதனையை நம்பிக் கர்வம் கொள்ளாமல், எதார்த்தத்தில் அந்தப் பிரியம் தன்னில் உண்டா என்று கண்டறிவதற்கு ஒரு அத்தாட்சி வேண்டியதாயிற்று.

பொருள் மனிதனுக்கு மிகப்பிரியமானதாகையால், அதனால் அவனை சோதிக்க நாடி (செல்வத்தைக் கொடுத்து) எல்லாப் பொருளின் மீதுமுள்ள பிரியத்தைக் காட்டிலும், உனக்கு அல்லாஹுவின் மீதுள்ள பிரியம் அதிகமாயிருப்பது உண்மையாயிருந்தால், நீ நேசிக்கின்ற இந்தப் பொருளை அல்லாஹ்வுக்காகக் கொடு. அவ்வாறு கொடுப்பாயாகில், அல்லாஹ்வுக்குப் பிரியமானவன், என்ற விஷயத்தில் நீ எந்த வகுப்பில் இருக்கிறாய் என்று உனக்குத் தெரியவரும். (இது ஜக்காத்தையும் ஸதக்காவையும் குறிக்கும்) இதனையே சித்தீக்கு (ரலி) செய்து காட்டினார்கள்.

ஜிஹாது (தீனு)க்கு வேண்டி, பொருள் சேமிக்கும் கட்டம் ஏற்பட்ட போது ஸய்யிதுனா அபூபக்கர் ஸித்தீக்கு (ரலி) அவர்கள் தம்முடைய எல்லாச் சொத்துகளையும் கொண்டு வந்து, நபி பெருமானார் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வைத்தார்கள். அது சமயம் பெருமானார் (ஸல்) அவர்கள், 'நீர் உம்முடைய மனைவி மக்களுக்கு வேண்டி என்ன வைத்திருக்கிறீர்?'' என வினவ, அதற்கவர்கள் 'அல்லாஹுவையும் அவனது ரசூலையும் வைத்திருக்கிறேன்' என்று மகிழ்ச்சியோடு விடை பகர்ந்தார்கள். இன்னும் சில ஸஹாபாக்கள், தங்கள் சொத்தில் நேர்பாதியைக் கொடுத்தார்கள். அதில் ஸய்யிதுனா உமர்பாரூக் (ரலி) அவர்களும், தங்கள் செல்வத்தில் அரைவாசியை ஹாஜர்படுத்தினார்கள். அவர்களை நோக்கி நாயகம் (ஸல்) அவர்கள், 'நீர் உம்முடைய மனைவி மக்களுக்கு என்ன வைத்திருக்கிறீர்?'' என வினவ, அவர்கள் 'நான் நேர்பாதியை வைத்திருக்கிறேன்'. எனப் பதில் உரைத்தனர். இதற்கு நபி (ஸல்) அவர்கள் 'பைனகுமா, **மாபைன கலிமைத்தைக்குமா'** 'உங்கள் வார்த்தையின் வித்தியாசத்தளவே உங்கள் பதவியுமிருக்கிறது' எனத் திருவுளமானார்கள்.

இதிலிருந்து ஜக்காத்து என்ற (நாற்பதுக்கு ஒன்று) விகிதத்தை முறைப்படி கொடுத்தும், அதற்கு மேல் (ஸதகா) தானமளிப்போர், அதன் உயர்வுக்கு தக்கவாறு அல்லாஹ்வின் பிரியன் என்ற முறையில், அவனது அன்பிற்கு ஆளாகி, உயர்பதவி கிடைக்கப்பெறுவர் என்பது தெளிவு.

**ஹதீது:-** உங்களது முதல்களை ஜக்காத்துக் கொடுப்பதன் மூலம் காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஸதகா (என்னும் தானதர்மம்) கொடுப்பதன் மூலம், நோய்களுக்கு சிகிச்சை செய்யுங்கள். பணிவுடன் 'துஆக்' கேட்பதன் மூலம், கஷ்ட நஷ்டங்களுக்குப் பரிகாரம் தேடுங்கள்.

ஜக்காத்து என்பதன் வெளிப்பொருள்:- தன் முதலை, அதில் விதியானதைவிட்டும் சுத்தப்படுத்தல் என்பதும், தன் இருதயத்தை அல்லாஹு அல்லாத சகல பொருள்களை விட்டும் சுத்தப்படுத்தல் என்பதும் உட்பொருளுமாம்.

## ஜக்காத்துக் கொடுப்போரின் தகுதி

1 முஸ்லிமாக இருக்ச வேண்டும்.
2 அடிமையாக அல்லாமல் சுதந்திரமானவராக இருத்தல்.



3 தனக்குச் சொந்தமான பொருளாக இருக்க வேண்டும்.
4 ஜக்காத்து நிர்ணயிக்கப்பட்ட அளவு, நிறையை அடைந்திருக்க வேண்டும்.
5 தானியம், கனிவர்க்கங்களல்லாதவைகளில் ஒரு வருடம் பூர்த்தியாகி இருக்க வேண்டும்.

## ஜக்காத்துக்கு விதியான பொருட்கள்

1 வெள்ளி, தங்கம்.
2 கோதுமை, நெல் முதலிய நவதானியங்கள்.
3 பேரீச்சம் பழம், கொடி முந்திரி (திராட்சை)ப்பழம்
4 வியாபாரப் பொருட்கள்.
5 ஆடு, மாடு, ஒட்டகம் இவைகளாம்.

இதன் விகிதங்கள் பற்றிய விளக்கம் விரிவான நூலில் காண்க.

## ஜக்காத்தைப் பெறத் தகுதியுடையோர்

1 எவ்வித வருவாயுமில்லாதவர்கள். (பக்கீர்)
2 சொற்ப வருவாயுள்ள ஏழைகள். (மிஸ்கீன்)
3 தானத்தை வசூல் செய்யும் ஊழியர்கள்.
4 புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள்.
5 அடிமையை (உரிமைச் சீட்டு) விடுதலை செய்யும் செலவிற்கு.
6 கடன் தீர்க்கக் சுதியற்றவர்கள்.
7 அல்லாஹுவின் பாதையில் (பீஸபீல்) யுத்தச் செலவிற்கு. (இதில் மார்க்க கல்வி பயிலும் மாணவரும் ஆவர்)
8 வழிப்போக்கர்கள்.

*(அல்குர்ஆன் 9 - 60)*

(இவர்கள் முஸ்லிம்களாக இருத்தல் வேண்டும்; இவர்களில் அங்கவீனர்களை முதன்முதலில் கவனிப்பது கடமையாகும்)

## ஜக்காத்துப் பெறத் தகுதியற்றோர்

1 ஜக்காத்து கொடுக்கத் தகுதியுள்ள தனவந்தர்.
2 உரிமை சீட்டுப் பெறாத அடிமைகள்.
3 'ஹாஷிம்' 'முத்தலிபு' குலத்தவர். இன்னும் அவர்களால் உரிமை விடப்பட்ட அடிமைகள்.

4 விசுவாசம் கொள்ளாதவர்கள் - அவிசுவாசிகள்.
5 **தனது சம்ரட்சணையில் இருப்பவர்கள் (தன்னிடமிருந்து உணவு, உடைகள் பெற சட்டப்படி கட்டுப்பட்டவர்கள்.)**

ஆகிய இந்த ஐந்து கூட்டத்தினர்களுமாவர்.

''இறைவன் விதிப்படி ஜக்காத்துக் கொடாத முதல்கள் கீழ்க்கண்ட ஏதாவதொன்றின் ஏதுவால் அழிந்துப்பட்டே தீரும்.''

*(1) அரசாங்கம், (2) நெருப்பு, (3) தண்ணீர், (4) திருடர், (5) நோய்வாய்ப்படுதல், ஆகியவைகளாம். (நா - வா)*

## ஸதகா

நாள்தோறும் தன்னாலியன்ற மட்டில் மனிதர்களுக்குத் தேவையாகியவற்றை (இரப்போருக்கும்) ஸதகா செய்வது 'சுன்னத்து', சீமான் (வசதி படைத்தவர்)கள் விதியாக்கப்பட்ட ஜக்காத்தைக் கொடுத்தும், ஷரீஅத்தில் சொல்லப்பட்ட நற்காரியங் களுக்காக வேண்டி தாராளமாக ஸதகாச் செய்தும், அதனால் தங்களுடைய செல்வங்கள் பேணப்பட்டுப் பெருகுவதுடன், வரவிருக்கும் ஆபத்துகள், நோய் நொம்பலங்கள், இடையூறுகள் இவற்றைவிட்டும் பாதுகாக்கப்படுவதைக் கண்கூடாகக் காண்கிறோம். 'அல்ஹம்து லில்லாஹ்'.

இதனையே நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் ஸதகா இடையூறு (பலாய்)களை நீக்கி ஆயுளை நீடிக்கச் செய்யும் என அருளியுள்ளார்கள்.

**''எவனொருவன் தன் மனத்தின் உலோபித்தனத்தில் நின்றும் தன்னைக் காத்துக்கொண்டானோ அவனே ஜெயம்பெற்றவன்.''**

*(5: 99)*

''சுவர்க்கம் கொடையாளிகளுக்குரிய வீடாகும். கொடையானது நபிமார்களின் செய்கையாகும். அது ஈடேற்றத்தின் அடிப்படைகளில் ஒன்றாகயிருக்கிறது. கொடையாளியை விட்டும் பாவங்கள் அகன்று விடுகின்றன. அவன் சறுக்கும் போதெல்லாம் இறைவன் அவனுக்குக் கைகொடுப்பான். இன்னும் அவன் இறைவனோடு மிகச் சமீபித்தவனாகவும், நரகத்திற்கு அப்பாற் பட்டவனாகவும் ஆகிறான். கொடையாளி அறிவீனனாயினும் அல்லாஹுவின் நேசனாகுவான்.''



''வணக்க வொழுக்கமுடைய ஒரு உலோபியைக் காண, வணக்க வொழுக்கம் குறைந்த ஒரு கொடையாளி அல்லாஹ்வுக்கு மிக்க உகப்பானவனாவான்.''

ஒரு சமயம் சில யுத்தக் கைதிகள் நாயகம்(ஸல்) அவர்கள் சமூகம் கொண்டு வரப்பட்டார்கள். நாயகம் (ஸல்) அந்தக் கைதிகளில் ஒருவரைத் தவிர ஏனையோருக்குத் தண்டனை விதித்தார்கள். அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள், ''அவர் விசயத்தில் மட்டும் எதற்காக விலக்கு?'' என்று வினவியதற்கு, நாயகம் (ஸல்) அவர்கள் தங்களிடம் ஜிப்ரீல் (அலை) வந்து, அந்த மனிதரைச் சுட்டிக்காட்டி, அவர் கொடையாளி யாதலால், அவரைத் தவிர மற்றையோரைத் தண்டிக்கும்படி அறிவித்திருப்பதாகக் கூறினார்கள்.

கஃபு (ரலி) கூறுகிறார்கள்:- ஒவ்வொரு மனிதனுடனும் இரண்டு மலக்குகளிருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு தினமும் சப்தமிட்டு, ''யாரப்பே! எவன் தன் பொருளை (பகீல் தனத்தால்) உரிமையாளருக்குக் கொடாமல் பத்திரப்படுத்துகிறானோ? அவனுக்கு அந்தப் பொருளை பாழாக்கிவிடு. எவன் தன் பொருளை (ஜகாத்) தருமத்தில் செலவு செய்கின்றானோ? அவனுக்கு அதைப் பெருக்கி, மேலும் மேலும் நற்கூலியாகக் கொடு,'' என்று வேண்டுகிறார்கள். (என்பதே).

''உலோபித்தனமானது, மனத்தின் கெட்ட குணங்களின் தொகுதியாகும்; அது மனிதனைத் தீங்குகளின் பக்கம் இழுத்துச் செல்லக்கூடியது; பணத் திமிரினால் பாதகச் செயல்களில் இறங்க அவனைத் தூண்டும்; அதனால் அவன் சுவனம் புகத்தகுதியற்றவனா கிறான். இதற்கிணங்கவே, **''உலுத்தன், மாறுசெய்வோன் கொடுத்ததைச் சொல்லிக் காட்டுகின்றவன், ஆகிய மூவரும் சுவனம் புகமாட்டார்கள்.''** என்று திரு நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''நிர்க்கதியாக ஒருவன் மனம் நொந்து ஏதேனும் கேட்டால், கேட்டு முடியுமுன், அவன் பேச்சைத் தட்டாதீர்கள். அவன் கூறி முடிந்தபின், கொஞ்சத்தைக் கொண்டாவது, அல்லது இனிய வசனத்தைக் கொண்டாவது, அவனுக்குச் சந்தோசமான பதில் அளிப்பீர்களாக; ஆண்டவன் தந்த முதலை, நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? என்பதைச் சோதிப்பதற்காக அல்லாஹு சில சமயங்களில் மலக்கு (அமரர்) களை அனுப்புகின்றான்'' (நா - வா)

## இரப்பவர் போன்று அமரரும் வருவர்

ஸய்யிதுனா ஹஸன் (ரலி) அவர்கள் ஒரு தினம், ஒரு உணவை உண்ண ஆவல்கொண்டு, அதை வாங்குவதற்குப் பணமில்லாமல், தங்களின் தாயார் செய்யிதத்து பாத்திமா (ரலி) அவர்களின் சட்டையை விற்று, அந்த உணவுப் பொருளை வாங்கினார்கள். அப்போது அங்கு ஒரு மிஸ்கீன் வந்து அதைக் கேட்டு நின்றார். அதை அப்படியே அவருக்குக் கொடுத்துவிட்டார்கள். அப்பால் ஒரு மனிதர் ஒரு ஒட்டகத்தை விற்பதற்காகச் சரியான விலைக்கு வாங்குவோரில்லாமல், திகைத்துக் கொண்டிருந்தார். அந்த ஒட்டகத்தை ஹஸன் (ரலி) அவர்கள் தவணைக்கு (விற்றுப் பணம் தருவதாக) வாங்கி, அதை வேறு ஒருவருக்கு இலாபத்துடன் விற்றுவிட்டார்கள். பின்பு அந்த ஒட்டகத்திற்குரியவருக்குப் பணம் கொடுக்க, அவரைப் பல இடங்களில் தேடிப் பார்த்தும் அகப்படவில்லை. சில நாட்களுக்குப் பின் இந்தச் செய்தியைத் தங்கள் பாட்டனார் நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா ரசூலே கரீம் (ஸல்) அவர்களிடம் அறிவிக்கவே, அதற்கு அவர்கள்:-

''உம்மிடம் முதலில் இரந்து நின்ற மிஸ்கீன் சுவனபதியின் அதிபராகிய 'ரிள்வான்' என்ற வானவர்; உமக்கு ஒட்டகத்தைத் தந்தவர் 'மீக்காயீல்' என்ற அமரர்; ஒட்டகத்தை விலை தந்து வாங்கியவர் 'ஜிப்ரீல்' என்ற மலக்கு,'' என திருவுளமானார்கள். இது பற்றி இறைவன் திருமறையில் கூறுகிறான்:-

**''எவர்கள் தங்களுடைய பொருட்களை அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்து (அந்தப் பொருளை வாங்கியவனுக்குத்) தாங்கள் அதைக் கொடுத்ததற்காக இகழ்ச்சியையாவது, வேதனையையாவது (அதனோடு) சேர்க்காமலிருந்தால், அவர்களுக்குக் கூலி இறைவனிடத்தில் உண்டு; மேலும் அவர்களுக்கு யாதொரு பயமுமில்லை; அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள்.''** (2 - 262)

## தனக்கின்றி தானமளித்தோர்

ரசூல் (ஸல்) அவர்களிடம் ஒரு விருந்தாளி வந்தார்; அது சமயம் நபிகள் நாயகம் (ஸல்) வீட்டில் உணவுக்கு எதுவும் இல்லாமலிருந்ததால், அங்கு வந்த அன்ஸாரி (மதீனாவாசி)களில் ஒருவர், அந்த விருந்தினரைத் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்று,



வீட்டிலிருந்த கொஞ்ச உணவை, தமக்கில்லாவிடினும் விருந்தாளி வயிறார உண்ண வேண்டுமென்ற ஆசையுடன், விளக்கை அணைத்துவிட்டு, இருந்த உணவை அவர்முன் கொண்டுவந்து வைத்து, தாமும் கூடவிருந்து, பாத்திரத்தில் கையை விட்டும், வாயை மென்றும், சுவைத்தும், உண்பவர் போன்று பாவனை காட்டிக் கொண்டிருந்தார். விருந்தாளி திருப்தியாக சாப்பிட்டு 'அல்ஹம்து லில்லாஹ்' என 'ஷுக்ரு' செய்தார்; வீட்டாரும் 'ஷுக்ரு' செய்து கொண்டனர். மறு தினம் ரசூல் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த அன்ஸாரியைக் கண்டு, நீவிர் இன்றிரவு அந்த விருந்தாளியுடன் நடந்து கொண்ட விதத்தையும், நற்குணத்தையும் அல்லாஹு தம் திருமறையில் புகழ்ந்திருப்பதை,

**''அவர்கள் தங்கள் பிரயோசனத்திலும் அன்னியர் பிரயோசனத்தை முற்படுத்துவார்கள்; அவர்களுக்குப் பசி இருந்தபோதிலும் சரியே.''** என்ற வசனத்தை ஓதிக் காண்பித்தார்கள்.

## ஸதகா, முதலையும் உயிரையும் காத்தது

ஸய்யிது ஹுஸைன் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:- எனது பாட்டனார் நாயகம்(ஸல்) அவர்கள் ஒருநாள் ''ஜக்காத்து' இறைவனால் பாதுகாக்கப்படும்;'' என்ற விசயம் பற்றிய ஹதீஸ் நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது, ஒரு நஸாரா கவனத்தோடு கேட்டு, இந்த விசயம் மெய்யாக இருந்தால் ''நாம் இஸ்லாத்தைத் தழுவவேண்டும்; இல்லையேல், இந்த நபியையும் இவரைச் சேர்ந்தோர்களையும் ஏளனம் செய்து வெறுக்கவேண்டும்;'' என்று எண்ணித் தன்னுடைய செல்வம் அத்தனைக்கும் கணக்குப்படி கொஞ்சமும் குறைவில்லாமல் 'ஜக்காத்து'க் கொடுத்தார். இந்த நிகழ்ச்சிக்கு முன், அவருடைய பங்காளி மிஸ்ருக்குச் சரக்குகள் கொண்டு விற்பனைக்காகப் போயிருந்தார். அங்கு போன வியாபாரிகளில் ஒருவர், தம் முதலாளிக்கு எழுதிய கடிதத்தில் ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் வந்து வழி மறித்து, தங்களிடமிருந்த பொருள்களை எல்லாம் அப்படியே அபகரித்துக் கொண்டு போய்விட்டனர் என்று குறிப்பிட்டிருந்தார். இந்தச் செய்தியை அந்த நஸாரா கேள்விப்பட்டு, நம் பங்காளியும் அவரோடிருந்த பொருட்களும் என்ன கதியாயினவோ தெரியவில்லையே? ஆ! ஹா!! என்று துக்கித்துக் கதறிக் கொண்டிருக்கும் போது, அவரது

பங்காளியிடமிருந்து வந்த கடிதத்தில், கள்வர்கள் மற்ற வியாபாரிகளின் பொருட்களை எல்லாம் பறித்துக் கொண்டு போய்விட்டார்கள் என்பதாகவும் நான் காபிலாவிற்குப் பிந்தி வந்ததால் நம்முடைய பொருள்களெல்லாம் கொள்ளை போகாமல் பத்திரமாக இருக்கின்றன என்றும் எழுதிய வாசகத்தைப் பார்த்து உள்ளம் குளிர்ந்து, அந்த முஹம்மது நபியின் வாக்கியமும், அவர் மார்க்கமும் உண்மை! உண்மை!! என்று வியந்துகொண்டே தம் குடும்பத்தினருடன் நபியவர்களிடம் வந்து, தமக்கு நேர்ந்த விசயத்தைக் கூறி, புனித இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்.

(ரவ்ளதுல் உலமா)

மூஸா நபி (அலை) அவர்களுக்கு அல்லாஹு தஆலா வஹி அறிவித்தான். உமது சகாக்களில் இன்ன பெயருடைய மனிதன் பெரும் குற்றவாளி. ஆனதால் அவனைப் பிடித்துக் கொன்றுவிடும் என்பதாக. நபி அவர்கள் அல்லாஹுவின் கட்டளைப்படி அவனைக் கொன்று விடுவதற்காகத் தேடித் திரிந்தார்கள். இது செய்தி எப்படியோ அவனுக்குத் தெரிந்துவிட்டது. ஸதகா ஊழ்வினையை (களாவை)த் தட்டிவிடும் என்றிருப்பதால், தான் அந்த விபத்தைவிட்டும் தப்பித்துக்கொள்ள உறுதிகொண்டு, சில ரொட்டிகளைச் சமைத்து ஏழைகளுக்கும், பசியாளிகளுக்கும் ஸதகாக் கொடுத்தான். அன்று அவன் நபி அவர்கள் கண்ணில் அகப்படவேயில்லை. அன்று முதல், தினமும் அது போலவே, ரொட்டி தர்மம் கொடுக்கத் தொடங்கினான், இவ்வாறே இருபத்தி நான்கு வருடங்கள் சென்றுவிட்டன. இதற்கிடையில் நபி(ஸல்) அவர்கள்முன் அவன் நடந்து சென்றாலும், அவர்கள் இவனைக் காண்கிறதில்லை. அதன்பின் அவனின் விதியின் பயன் இரு தினங்கள் ரொட்டி ஸதகாக் கொடுக்க சந்தர்ப்பமில்லாத நிலை ஏற்பட்டுவிட்டது. அதுசமயம் தற்செயலாக அவன் மூஸா நபி (அலை) அவர்கள் கண்ணில் அகப்பட்டுக் கொள்ளவே, அவனைப் பிடித்து வெட்டிவிட்டார்கள். பிறகு நபி அவர்கள்:-

''என்னைப் படைத்த ரப்பே! இவ்வளவு காலமாக நான் தேடியும் அகப்படாத இவன் எங்கே ஒழித்திருந்தான்!'' என்று கேட்க, ''இவ்வளவு நாளும் ஸதகாக் கொடுத்து வந்தான்; அதனால் அவனை உம்மைவிட்டும் மறைத்திருந்தோம். இப்போது ஸதகாவை மறந்தான். அதனால் உம்முடைய கையில் அகப்படச் செய்து இறக்கச் செய்தோம்,'' என அல்லாஹு அறிவித்தான்.



''அஸ்ஸதகது ரத்துல் பலா வரத்துல் களா.''

''ஸதகா தீவினையையும் ஊழ்வினையையும் தட்டிவிடும்.''

(நா - வா)

கதியற்ற எளியாரின் பசிக்கு உணவு அளிப்பதும், அவருடைய மானத்தை மறைக்க உடுதுணி கொடுப்பதும், அவரது நிலைமையை அறிந்து போதிய பரிசு அளிப்பதும், ஆகிய இவைகளே கொடைகளில் மிகச் சிறந்ததாகும். (இமாம் ஷாபியீ(ரஹ்)

இத்தகைய கொடைக்குணம் நபிகள் நாதர்பாலும், அவர்களின் வம்சத்தார்பாலும், எவ்வளவு சிறப்புற்றிருந்த தென்பதைக் கவனிப்போம்.

ஒருசமயம் உதுமான் (ரலி) அவர்கள் நபி பெருமானாருக்கு முந்திரிக்குலை ஒன்று நன்கொடை அனுப்பினார்கள். அதுசமயம் ஒரு யாசகர் வந்து நாயகத்திடம் இரந்தபோது, அவர்கள் அந்தக் குலையை அப்படியே அவருக்குக் கொடுத்துவிட்டார்கள். இதை அறிந்த உதுமான் (ரலி) அவர்கள் யாசகரிடம் அந்தக்குலையை விலைக்கு வாங்கி நபி பெருமானாருக்குத் திரும்ப அனுப்பி வைத்தார்கள். அந்த யாசகர் திரும்பவும் நபி அவர்களிடம் வந்தார். அந்தக்குலையை அவர்கள் மீண்டும் அவருக்கே கொடுத்து விட்டார்கள். இந்தவிதம் மூன்று முறை நிகழ்ந்தது. நான்காவது தடவை நபிகள் நாயகம் (ஸல்) அவரை பார்த்து, ''நீவிர் இரப்பவரா? வர்த்தகரா?'' என்று கேட்டார்கள். அப்போது இறைவன்:- **''முஹம்மதே! இரப்போர்களை விரட்டாதீர்.''** என்று திருமறையில் கட்டளையிட்டான்.

நபிகள் பெருமான் (ஸல்) இரு காரியங்களைப் பிறரைக் கொண்டு செய்விக்காது, தங்கள் கரத்தாலேயே செய்து வந்தார்கள். அதாவது:- இரவில் ஒளுவுக்கு வேண்டிய தண்ணீரைத் தாங்களே எடுத்து வைத்துக்கொள்வார்கள். இரப்போருக்குத் தங்கள் கையாலேயே கொடுப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அலீ (ரலி) அவர்கள் ஒருநாள், தமது வீட்டில் மனைவி மக்கள் உணவில்லாமல் முகம் வாடியதைக் கண்டு, வெளியில் சென்று சிறிது தூரம் போனபோது, ஒரு வியாபாரி நூல் திரிக்கத் தும்பை ஆட்டின் ரோமங்களை ஒருவருக்கு நிறுத்துக் கொண்டிருப்பதைக் கண்டு, தாங்களும் அவரிடம் சென்று மூன்று நாள் வேலைக்குப் போதுமான

உரோமங்களும், அதற்குக் கூலியாகக் கோதுமையும் வாங்கிக்கொண்டு வீடு வந்து நூல் திரிக்கலானார்கள்.

அலீ (ரலி) அவர்களின் பிராட்டியார் 'செய்யிதத்' பாத்திமா நாயகி அவர்கள் கோதுமையைத் திரித்து மாவாக்கி ரொட்டி சுட்டு வைத்திருந்தார்கள். இரவில் அதைப் புசிப்பதற்காக அலீ (ரலி) அவர்களும், அவர்கள் மைந்தர்கள் 'ஹஸன்', 'ஹுஸைன்' அவர்களும் உட்கார்ந்து **'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்'** என்று கூறித் உண்ண ஆரம்பிக்கும்போதே, வாயிலில் ஓர் அகதி பசிக்கு உணவு தருமாறு கூவியதைக் கேட்டு, அலீ (ரலி) அவர்கள் தம்முன், இருந்த ரொட்டித் துண்டுகளை அப்படியே அந்த அகதிக்குக் கொடுத்து அவரது பசியை ஆற்றினார்கள்.

மறுநாள் நூல் திரித்து அதன் கூலியாகிய கோதுமையை மாவாக்கி முன் இரவுபோல் ரொட்டி சுட்டு, இரவில் உண்பதற்கு 'பிஸ்மி' சொல்லி ஒன்றிரண்டு ரொட்டித் துண்டுகளைத் தின்று கொண்டிருக்கும்போதே வாசலில் ஒருவர் வந்து, ''நான் ஒரு அனாதை; மூன்று நாள் பட்டினி; பசியால் பரிதவிக்கின்றேன்; ஏதாவது ஆகாரம் கொடுங்கள்,'' என்று கெஞ்சினார். உடனே அலீ (ரலி) அவர்கள் மிகுந்திருந்த ரொட்டித் துண்டுகளை அப்படியே எடுத்து அவருக்குக் கொடுத்துவிட்டார்கள். தாங்களும் பிள்ளைகளும் தண்ணீர் குடித்துப் பொருந்திக்கொண்டார்கள்.

மூன்றாவது நாளும் இதே விதமாக எஞ்சியிருந்த கோதுமையால் ரொட்டி சுட்டுச் சாப்பிடுகையில், வீட்டு வாசலில், சிறையில் அகப்பட்டு விடுதலையான ஒருவன் பசியால் கதறும் சப்தம் கேட்டது. உடனே அலீ (ரலி) அவர்கள், மனைவி மக்களின் பசியைக்கூடக் கவனிக்காமல் அவற்றை எடுத்துக்கொண்டு போய் அவனுக்குக் கொடுத்துவிட்டார்கள். பின்னர் மிகவும் களிப்புடன் தங்கள் குடும்பத்தை நோக்கி, ''நமக்கு நாளும் புதிது; உணவும் புதிது; விடிந்தால் அல்லா(ஹ்) தருவான்.'' என்று தேறுதல் கூறி வைத்தார்கள். இதுபற்றி திரு குர்ஆனில் அல்லா(ஹ்) புகழ்ந்து போற்றுகின்றான். அதாவது:-

***(உணவின்மேல் அவர்களுக்குத் தேவையும் ஆசையும் உண்டாகியிருக்க அவர்கள்) ''அல்லா(ஹ்)வின் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், சிறைப்பட்டோருக்கும் ஆகாரமளித்தும் வந்தனர்.''*** *(76: 8)*



***(தானம் பெறுவோரை நோக்கி) ''நாம் உங்களுக்கு ஆகாரமளிப்பதெல்லாம், அல்லா(ஹ்)வை நாடியேயன்றி, உங்களிடம் நாம் யாதொரு கூலியையோ, அல்லது (நீங்கள் நமக்கு) நன்றி செலுத்துவதையோ கருதவில்லை.''*** *(என்று கூறினான்) (76: 9)*

இதேபோன்று இன்னும் எத்தனையோ தடவை ஹலரத் அலீ (ரலி) அவர்கள், தாங்கள் உணவில்லாது பசித்திருந்து, கிடைப்பதை இரப்போருக்கு மகிழ்ச்சியோடு கொடுத்திருக்கிறார்கள். மற்றுமொரு சம்பவத்தை இங்கு தருகின்றோம்.

ஹலரத் அலீ (ரலி) அவர்கள், ஒருநாள் இரவு தமது இல்லத்தில் பிள்ளைகள் உணவில்லாமல் பசியால் வருந்திக் கொண்டிருப்பதைக் கண்டு சகிக்கமுடியாமல், தமது அருமைப் பிராட்டியார் செய்யிதத் பாத்திமா நாயகி அவர்களைத் தங்களது தந்தையாரின் வீட்டுக்குச் சென்று சிறிது உணவு வாங்கி வந்து பிள்ளைகளுக்கு ஊட்டிப் பசியாற்றி வைக்கும்படி வேண்டினார்கள். அதற்கிணங்க பாத்திமா நாயகி அவர்கள் இரவில் வெகு நேரத்திற்குப் பின், தங்கள் தந்தையாரின் வீட்டிற்கு வந்து பிள்ளைகளுக்கு உணவு வேண்டும் என்று கேட்டபோது, ரசூலே கரீம் (ஸல்) அவர்கள் ''எனதருமை மகளே! பாத்திமாவே! சென்ற வாரத்தில் நிகழ்ந்த சண்டையில் ஐந்து ஆடுகள் பறிமுதல் செய்து வீட்டில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. இது தவிர இன்னும் ஐந்து (கலிமா) பொருட்களுமுள்ளன. அவை:-

اَللّٰهُمَّ يَا اَوَّلَ الْاَوَّلِيْنَ، وَيَا اٰخِرَ الْاٰخِرِيْنَ، يَا ذَا الْقُوَّةِ الْمَتِيْنَ

يَا رَاحِمَ الْمَسَاكِيْنَ، يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ ○

***அல்லாஹும்ம யா அவ்வலல் அவ்வலீன, வயா ஆகிறல் ஆகிரீன, யாதல் குவ்வதில் மதீன, யாராஹிமல் மஸாக்கீன, யா அர்ஹமர் ராஹிமீன்.***

அல்லாஹ்வே! முந்தினவர்களுக்கெல்லாம் முந்தினவனே, பிந்தினவர்களுக்கெல்லாம் பிந்தினவனே, உறுதியான சக்தி வாய்ந்தவனே, இன்னும் ஏழைகளுக்கு அருள்புரிபவனே. கிருபையாளருக்கெல்லாம் மிகக் கிருபையாளனே, (நீ எங்களுக்கு அருள புரிவாயாக!) என்ற:

''இவைகள்தாம் தற்போது என்னிடம் உள்ளன. உனக்கு வேண்டியதை எடுத்துக்கொள்'' என்றார்கள். பாத்திமா நாயகி அவர்கள், ஐந்து ஆடுகளையும்விட, ஐந்து கலிமாக்களும் தங்களுக்குப் போதிய அருள்கொடை எனச் சாந்தியடைந்தவர்களாக வீடு திரும்பி, தங்கள் வாழ்க்கைத் துணைவரிடமும், அருமைப் பிள்ளைகளிடமும் நடந்த வற்றைக் கூறி, அந்த ஐந்து கலிமாக்களையும் இரவு முழுவதும் திரும்பத் திரும்ப ஓதிப் பசியை மறந்து மகிழ்ந்திருந்தார்கள். அலீ (ரலி) அவர்கள், தங்கள் மனைவியாரைப் பார்த்து ''நீங்கள் மேன்மையான இந்தக்கலிமாக்களையல்லாமல், ஆடுகளை வாங்கி வந்திருப்பீராயின், அவற்றைத் திரும்பக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி நான் அனுப்பி இருப்பேன். நீங்களும் நல்ல சாதனத்தை வாங்கி வந்தது சந்தோசம்'' என்று கூறினார்கள்.

நபிகள் நாதர் (ஸல்) அவர்களும் இந்தக் கலிமாவையே தெரிந்துகொண்டார்கள்.

தலைபாத்திஹாவில் இவ்விஷயம் சம்பந்தமான பாட்டு பின்வருமாறு காணப்படுகிறது.

பிள்ளை பசியதனால் பாதிரவில் அலீ சொல்லுக்காய்
தள்ளையிடம் சென்று கொள்ளை ஸாத்தகனை வெறுத்ததனால்
உள்ள கலிமா ஐந்தையும் உரைத்தார் முஹம்ம தென்றே
விள்ளவே அலீகமலம் விருப்பங்கொள்ளும் பாத்திமத்தே.

## பாத்திரம் அறிந்து பிச்சையிடு

இந்த முதுமொழிக்கேற்ற ஒரு சம்பவம் இங்கு கவனிக்கத் தக்கது:-

ஒரு சமயம் ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்கள், யாத்திரை சென்று திரும்பி வரும் சமயம் ஓரிடத்தில் தங்க நேரிட்டது. அங்கு கூடாரம் அடித்து அதனுள் பிரவேசித்ததும், கூடாரத்தின் வாசல்படியின்மீது ஓர் ஏழை, யாசகம் கேட்டு நிற்பதைக்கண்ட நாயகி அவர்கள், அந்த ஏழைக்கு ரொட்டி ஒன்று கொடுத்தார்கள். அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு அந்த யாசகர் போனபின், மற்றொருவர் குதிரையின்மீது ஏறி வந்து தமக்குப் பசியாகயிருப்பதாகக் கூறி, ஏதேனும் கொடுக்கும்படி கேட்டு நின்றார். இது தெரிந்த ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்கள் வேலையாளிடம் ''அவரை அழைத்து வந்து



ஓரிடத்தில் அமர்த்தி, வயிறு நிறைய பசியாற்றி அனுப்பும்படி உத்தரவிட்டார்கள்.'' இதைத் தெரிந்த மக்கள், நாயகி அவர்களிடம்:-

''நாயகியே! யாருக்கு அதிக ஒத்தாசை செய்யவேண்டி இருந்ததோ? அவருக்குத் தாங்கள் ஒரே ஒரு ரொட்டியை மாத்திரம் கொடுத்து அனுப்பிவிட்டீர்கள். இப்போது குதிரைமீது வந்த இவருக்கு ஏன் இவ்வளவு உபசாரம் செய்ய வேண்டும்?'' என்று வினவ, அதற்கு நாயகி அவர்கள் ''அந்த பக்கீர் ஒரு ரொட்டியைக் கொண்டு மகிழ்ச்சி அடைந்து விட்டார். இவரோ அவ்வாறு திருப்தி அடைந்துகொள்ள முடியாது. ஒவ்வொரு மனிதனுடைய தாரதம் மியத்தை மதித்து நடக்கவேண்டும். சர்வசக்தனான அல்லாஹு<sup>.</sup>வும் கூட எல்லோருக்கும் ஒரேவித சமத்துவமான அந்தஸ்தை உண்டுபண்ணி இருக்கவில்லை'' என்று சமாதானம் கூறினார்கள்.

ஆயிஷா ஸித்தீகா (ரலி) அவர்களின் சட்டையில் பல ஒட்டுகள் போடப்பட்டிருந்தபோதிலும், அந்தநிலைமையில் அவர்கள் ஐம்பதி னாயிரம் திர்ஹம் ஸதகாச் செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவ்வளவு எளிமையான நிலைமையிலும், ஸதகாவைப் போற்றி வந்தார்களென்றால், என்னே ஸதகாவின் உயர்வு!

உலக மாயையில் சிக்குண்டு மயங்கித் திரிகின்றவர்கள், இந்த இகலோகச் செல்வ சுகங்களை அடையும்பொருட்டுக் காசு பணங்களைத் தேடித் தங்கள் ஆன்மீக லட்சியங்களுக்கு விரோதமாக அவற்றைச் சேமிப்பதும், பெரிய பெரிய வீடுகள் கட்டுவதும், சொத்துக்கள் வாங்குவதும், இன்னும் அவர்கள் உலகம் பூராவையும் விலை கொள்வதற்குப் பிரியப்படுவதும், காண்பதெல்லாவற்றையும் அவா உறுவதும் போல, முஃமினாக இருப்பவர்கள் பரலோகத்துக்கு வேண்டிய இன்ப சாதனங்களை இந்த இகலோகத்தில் தேடித் திரிந்து, புதிது புதிதாகப் பெற்றுக்கொள்வதில் ஏன் பிரயாசை எடுக்க மாட்டார்கள்?

**''(நீங்கள் தருமத்திற்குச் செலவிடுவதால்) வறுமை (யாளராகி விடுவீர்கள் என்பது) கொண்டு ஷெய்த்தான் உங்களைப் பயமுறுத்தி (உலோபித்தனமான) தீயவொழுக்கத் (தைக்கைக்கொள்ளும்படி) உங்களைத் தூண்டுவான்; ஆனால், அல்லாஹு (நீங்கள் செய்யும் தருமத்திற்குப் பலனாக) தனது பாவ மன்னிப்பையும், ஏரா (மான செல்வ)த்தையும் (அளிப்பதாக) உங்களுக்கு வாக்களிக்கின்றான்;**

மேலும் அல்லாஹு (பிரதிபலன் அளிப்பதில்) தாராளமானவனாகவும் பேரறிஞனாகவும் இருக்கின்றான்.'' (2: 268)

''யாசகருக்கு 'இல்லை' என்று பதில் சொல்லுதல் தகாது. அங்ஙனம் சொல்லுகின்றவன் தன்னை அறிந்தவன் ஆகான், 'இல்லை' என்ற சொல்லானது மிடிமையாளனுடைய சொல்லாகும், இதனைப் பிரயோகிப்பது அழகன்று.'' (நா - வா)

நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் தங்கள் வாழ்நாட்களில் ''ஆண்டவன் இரண்டா?'' என்ற கேள்விக்கு ''இல்லை ஒன்றுதான்.'' என்று விடை கொடுப்பதில் மட்டும், 'இல்லை' என்ற சொல்லை உபயோகித்தார்களே தவிர, வேறு எதற்குமே 'இல்லை' என்ற வார்த்தையைக் கூறியது கிடையாது.

ஒருதினம் தங்கள் துணைவியார் ஆயிஷா ஸித்தீகா (ரலி)யிடம் ஒரு பரதேசியை அழைத்துக்கொண்டு வந்து, ''இவருக்குக் கொடுக்கத் தகும் உணவு ஏதாவது உண்டா?''என்று வினவிய போது, அவர்கள் 'இல்லை' என்று கூறாமல் ''நாயகமே! அவருக்குச் சற்றும் உதவாத உப்பும் தண்ணீரும் இருக்கின்றன'' என்று பதில் உரைத்தார்கள்.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் படிப்பினையாவது:-

நபிகள் நாயகத்தின் அருளும், ஆசீர்வாதமும், நோய் துன்பங்களிலிருந்து விமோசனமும், நாம் அடையத்தக்க பேறும் பெற, வேண்டுமாயின், ஏழைகளை இயன்ற அளவு ஆதரித்து, அவர்களின் நாட்டத்தைப் பூர்த்திசெய்து வைக்க வேண்டும் என்பதே.

முன்கூறிய நன்கொடைகள் நான்கும் நரகத்தின் அதிபர் மாலிக் (அலை) அவர்களுக்குச் சேரும்; என வம்பனாகிய உதுபா என்பவன் விளைவித்த இடையூறுகளை எல்லாம் சகித்துப் பொருந்திக் கொண்ட நபி முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்துள்ளார்கள்.



# 5-வது தகுதியாளர் ரிள்வான் (அலை)

## 13

ஹத்யா நான்குதான் வேணுமென்றார்
கனதி சொர்க்கத்தின் ரிள்வானுக்கு,
விதியாம் அமானத்தைப் பேணுதலும்
வில்லங்கங்களில் சப்ரு செய்தலும்
புதிய துக்கொவ்வா வண்ணமான
புண்ணியன் வழிப் பாடதிலும்
மதியை அழைப்பித்தோர் வழிப் பாட்டிலும்
மால்களைச் செல வழிப்பதுமே.

**அரும்பதவுரை:-**

கனதி = கண்ணியமிக்க. அமானத்து = நம்பிக்கை. சபூர் = பொறுமை. (சபூர் என்பது சப்ருடைய அல்லாஹ்வைக் குறிக்கும்) மால் = பொருள்.

## சுவனபதியும், அதன் அதிபர் ரிள்வானும்

وَسِيقَ الَّذِينَ اتَّقَوْا رَبَّهُمْ اِلَى الْجَنَّةِ زُمَرًا حَتّٰى اِذَا جَآءُوْهَا
وَفُتِحَتْ اَبْوَابُهَا وَقَالَ لَهُمْ خَزَنَتُهَا سَلٰمٌ عَلَيْكُمْ طِبْتُمْ
فَادْخُلُوْهَا خٰلِدِيْنَ ۝

''எவர்கள் தங்கள் இறைவனுக்குப் பயந்து கொண்டிருந்தார்களோ? அவர்களை, (அந்தநாளில்) கூட்டங்கூட்டமாக சுவர்க்கத்தின் பால் கொண்டு வரப்படுவர், அதன் சமீபமாக அவர்கள் வரும் சமயத்தில், அதன் வாசல்கள் திறக்கப்படும், அதன் காவலாளர்கள் அவர்களை நோக்கி, ''உங்களுக்கு சாந்தியும், சமாதானமும், உண்டாவதாகும்; நீங்கள் பாக்கியவான்களாகி விட்டீர்கள்; நீங்கள் இதில் நுழைந்து, என்றென்றுமே இதில் தங்கி விடுங்கள்'' என்று கூறுவார்கள்.

''சுகபோக, சுவனபதியில், 'சோபா'க்களில் ஒருவர் மற்றொருவரை முகம் நோக்கி (உல்லாசமாகப் பேசிக்கொண்டு) உட்கார்ந்திருப்பார்கள். மிகவும் தெளிவான ஊற்றுகளின் பானம் நிறைந்த